# அமெரிக்க மண்ணில் ஆறு மாதங்கள்

அ.நி.மன்னார்குடி பானுகுமார்



# அமெரிக்க மண்ணில் ஆறு மாதங்கள்

அ.நி.மன்னார்குடி பானுகுமார், எம்.ஏ., எச்.டி.சி.

# பொருளடக்கம்


பயனுள்ள படைப்பு 5

திரைக்கடல் ஓடியும் திரவியம் தேடு 7

மதிப்புரை 10

1. அமெரிக்கா அழைக்கிறது 11
2. விசா கிடைத்தது 14
3. பயண ஏற்பாடுகள் 17
4. டிராவல் கார்டு 20
5. விமானத்தில் ஒரு நாள் 23
6. ஜெட்லாக் முடிந்துவிட்டதா? 32
7. கார் பயணங்கள் 36
8. சாலைகளின் ஒழுங்கும் அமைப்பும் 42
9. வீடுகளின் அமைப்பு 45
10. எடினாவில் எனது நாட்கள் 48
11. நான் புரிந்து கொண்ட அமெரிக்கா 54
12. பாரம்பரியத்தின் பெருமையும் மதிப்பும் 58
13. மண்ணின் மைந்தர்கள் 60
14. வாஷிங்டனில் ஒரு நாள் 62
15. அமெரிக்க அரசியலமைப்பு 68
16. பொருளாதாரச் செழுமை 73

17. கிரீன்கார்டு என்னும் குடியுரிமை 76

18. இந்தியப் பெண்களுக்கு-தொலைப்பேசியில் பேசுவது வடிகால் 80

19. அமெரிக்காவில் மகப்பேறும் பிரசவமும் 83

20. குழந்தைகள் வளர்ப்பு 86

21. அமெரிக்காவில் இளையோர் கல்வி 91

22. அமெரிக்காவில் மருத்துவம் 97

23. அமெரிக்காவில் கல்வி 101

24. தொலைக்காட்சி 105

25. நயாகராவில் நனைந்தோம் 108

26. நூலகங்கள் 112

27. செய்தித்தாள்கள் 114

28. உணவு 117

29. வாடிக்கையாளர்களைக் கவரும் வால்மார்ட் 122

30. விவேகானந்தர் கர்ஜித்த சிகாகோ 124

31. அமெரிக்கப் பெண்கள் 131

32. வாழ்வியல் வாழ்க்கை கட்டமைப்பு 135

33. வயதுக்கு தடையில்லா பூமி 138

34. நியூயார்க் நல்ல நியூயார்க் 142

35. அமெரிக்கர்களை அச்சுறுத்தும் விஷயம் 149

36. சொர்க்கப் பூமியின் இரகசியம் 151

37. பெருமை சேர்க்கும் இந்தியர்கள் 153

38. குட் பை அமெரிக்கா 155

ஆசிரியரின் பிற நூல்கள்

## பயனுள்ள படைப்பு

* ***"அமெரிக்காவைப் போன்ற வேறொரு நாட்டை உலகில் எங்குமே காண முடியாது. அவ்வளவு தாராள மனப்பான்மை -பரந்த மனம்- விருந்தோம்பும் பண்பு புதிய கருத்துக்களை ஏற்றுக் கொள்வதற்கு உண்மையான ஆர்வம் இவை கொண்டவர்களாக அந்த நாட்டு மக்கள் இருக்கிறார்கள். அமெரிக்காவில் நான் எந்த வேலையைச் செய்திருந்தாலும் எனது சக்தியால் அவை செய்யப் படவில்லை. அமெரிக்க மக்கள் வேதாந்தக் கருத்தை ஏற்றுக் கொண்டார்கள் என்றால் அது அவர்களிடமுள்ள நல் மனத்தாலேயே ஆகும்."***

சுவாமி விவேகானந்தர் – [ஞானதீபம் பாகம் 10 – பக். 4]

அண்மைக் காலங்களில் நமது இந்திய நாட்டின் பற்பல மாநிலங்களிலிருந்து இளைய தலைமுறையினர் பெரும் எண்ணிக்கையில் அமெரிக்கா சென்று நல்ல வளர்ச்சி பெற்று வாழ்வாங்கு வாழ்ந்து வருகின்றனர்.

அமெரிக்கா செல்பவர்கள் தங்கள் பயணத்தின் விபரங்களைப் புத்தகமாக்கி வைப்பதால் பாஸ்போர்ட் மற்றும் விசா வாங்குதல்- விமானப் பயணம்- பயணத் தூரம் -பயணிக்கும் நாட்டின் வரலாறு -பொருளாதாரம்- அரசியலமைப்பு- காணத் தகுந்த இடங்கள்- போக்குவரத்துத் தன்மைகள்- மக்கள் தன்மை-பழக்க வழக்கங்கள்- உணவு வகைகள்- உணர்வுகள் போன்ற சுற்றுலாத் தகவல்களை முழுமையாகத் தெரிந்து கொள்ள வாய்ப்பேற்படுகிறது.

எல்லோரும் எழுதுவது போல் பயண விபரங்களை மட்டும் எழுதாமல்-நாட்டைப் பற்றிய முழு விபரங்களையும் ஆசிரியர் தந்துள்ளார்.

பயணம் மேற்கொள்பவர்களுக்கு மிகவும் பயனுள்ள செய்தித் தொகுப்பாக வழிகாட்டும் நூலாக இது விளங்கும்.

38 தலைப்புகளில் அமெரிக்காவிற்குச் செல்வது எப்படி? அங்கு வசிப்பது எப்படி? என்பது முதல் அக்கு வேறு ஆணிவேறாக-செம்மையான முறையில் -படிப்பவர் மனம் கவரும் வகையில்-சுருக்கமாக இருப்பினும் சொல்ல வேண்டிய முக்கிய செய்திகளை ஒன்று விடாமல் எழுதப்பட்டுள்ள ஒரு அருமையான படைப்பு.

ஒரு பயனுள்ள ''கையேடு'- உதவிடும் சுற்றுலா வழிகாட்டி-என இலங்கும் புத்தகமிது.

**நிவேதிதா சீனிவாசன்,**
**அமெரிக்கா**

# திரைகடல் ஓடியும் திரவியம் தேடு

*"நான் என்னைக் கொண்டாடுகிறேன்*
*என்னைப் பாடுகிறேன்:*
*எனக்கு எது ஏற்பானதோ அதனை*
*நீ உனக்கும் ஏற்பானதாகக் கொள்ளலாம்:*
*எனக்குச் சொந்தமான ஒவ்வொரு*
*அணுப் பிரமாணமும் உனக்கும் சொந்தமானதே?"*

**–வால்ட் விட்மன் – அமெரிக்க கவிஞர்.**

''திரைகடல் ஓடியும் திரவியம் தேடு'' இது, ஔவையின் தீர்க்க தரிசனப் பொன்மொழி. தமிழர்கள் கடல் கடந்த வாணிகத்தில் தலை சிறந்து விளங்கிய காலமும் உண்டு. எந்தக் குடும்பத்திலும் யாராவது ஒரு மாலினியோ- ரம்யாவோ- புஸ்பாவோ - நரேந்திரனோ- கிருஷ்ணாவோ - அமெரிக்காவில் இன்று வேலை பார்த்து வருகின்றனர்.

'அங்க அவள் என்ன வேலைல இருக்காள்?'

'சாப்ட்வேர்'

மூன்று மாத விசாவில் சென்று -அங்கே இரவுபகலாக சாஃப்ட வேர் நகல்கள் எழுதிக் குறைந்த சம்பளம் பெற்று- பின் அங்கேயே வேறு கம்பெனியில் எச் ஒன் விசா கிடைக்கும் வரை போராடுவார்கள்.

அப்புறம் என்ன?

அமெரிக்க வரன்களுக்கு திருமணம். அப்புறம் கீரின் கார்டு. கார்- சொந்த வீடு- குழந்தைகள் என செட்டில் ஆகிவிடுகிறார்கள். பொருளாதாரத்திலும் உயர்ந்து விடுகிறார்கள்.

இப்போதுள்ள இளைஞர்களின் இலட்சியமே 'அமெரிக்கா செல்லவேண்டும். அங்கு படிக்க வேண்டும். கைநிறையச்சம்பாதிக்க

வேண்டும். பெற்றோர்களைக் காப்பாற்ற வேண்டும். தங்கைக்குத் திருமணம் செய்ய வேண்டும். தம்பியை நன்றாகப் படிக்க வைக்க வேண்டும். இது மட்டுமல்ல. அமெரிக்காவிலேயே செட்டில் ஆக வேண்டும்.'

அமெரிக்கா சென்று வருவது ஒரு அரிய வாய்ப்பு. அமெரிக்க நாட்டின் சிறப்புக்களை நாம் உணர்ந்திருக்கிறோம். பரந்து விரிந்த அமெரிக்க நாடு இந்திய நாட்டை விட நிலப்பரப்பில் மூன்று மடங்கு பெரியது.

ஆனால், நம் மக்கள் தொகையில் மூன்றில் ஒரு பங்கிற்கும் குறைவாகவே உள்ளது. இங்கு மக்கள் தொகையைக் கட்டுப்படுத்தி இருக்கிறார்கள்.

மென்பொருள் எனப்படும் தொழில் நுட்ப வேலைகளுக்காகவும் அமெரிக்காவில் எப்போதும் தேவையாக இருக்கும் நர்ஸ் - மருத்துவர்கள் ஆகிய வேலைகளுக்கும் தான் பெரும்பாலான மக்கள் அமெரிக்கா வருகிறார்கள்.

இவர்களைத் தவிர வீட்டு வேலை-குழந்தைகள் பாதுகாப்புக் காகவும், குடியேற்றத்துக்காகவும், படிப்பதற்காகவும் பலர் வருகின்றனர்.

அமெரிக்காவில் உள்ள பலதரப்பட்ட வணிக நிறுவனங் களிலும், 'கெசினோ' என்ற பொழுதுபோக்கு இடங்களிலும், உணவு விடுதிகளிலும், ஏன் கோயில்களிலும் கூட எப்போதுமே வேலைக்கு ஆட்கள் தேவைப்படுகிறது,

பெட்ரோல் பங்குகளை இங்கு 'கேஸ் ஸ்டேசன்கள்' என்கிறார்கள். இதற்கும், இங்கு ஆட்கள் தேவை எப்போதும் இருந்து வருகிறது. இந்தச் சூழ்நிலையில்தான் தற்சமயம் வீட்டிற்கு ஒருவர் அமெரிக்கா சென்று கொண்டிருக்கிறார்கள்.

அதனால், முதன் முறையாகச் செல்பவர்களுக்கும் அமெரிக்க செல்ல வாய்ப்புக் கிடைக்காதவர்களுக்கும் என் அனுபவம் உதவும் என்று கருதுகிறேன்.

இந்தப் பயணக் கட்டுரையைப் படிக்கும் உங்களுக்கு முடிந்த அளவுக்கு ஒரு வழிகாட்டியாக அமையும் என்று நம்புகிறேன்.

அமெரிக்காவிற்குச் செல்ல சிலருக்குத் தான் வாய்ப்புக் கிடைத் திருக்கும் . அவ்வாறு சென்றவர்களின் பெற்றோர்கள் அங்கு சென்று பல இடங்களைப் பார்த்து இரசித்திருக்கலாம். இங்கு தற்சமயம் வாய்ப்புக் கிடைக்காதவர்களுக்கும். வாய்ப்பு ஏற்பட்டவர்களுக்கும் துணையாக இந்நூல் இருக்கும்.

இந்த என் முயற்சிக்குப் பலவகையிலும் ஊக்கமளித்து ஆலோசனைகளை வழங்கி ஒத்துழைப்பு நல்கிய -வாழ்க்கை துணைவியார் அருள்நிதி பானுமதிகுமார்- என் இல்லத்து ஞானச் செல்வங்கள் பிரம்மஞானிகள் திருமதி நிவேதிதா சீனிவாசன்- நரேந்திரன், ஆகான்ஸா அவர்களுக்கும் நன்றி கூறக் கடமைப்பட்டுள்ளேன்.

இந்நூலைச் சிறந்த முறையில் கொண்டு வந்துள்ள, கோவை விஜயா பதிப்பக உரிமையாளர் திரு. மு. வேலாயுதம் மற்றும் அவரது புதல்வர் திரு. வே. சிதம்பரம் அவர்களுக்கும் நன்றியுடையேன்.

பி 58 ஏழாவது குறுக்குத்தெரு
அண்ணாநகர் - செங்கற்பட்டு.

மானுடச்சேவையில்
**பானுகுமார்**

# மதிப்புரை

"பயண இலக்கியங்களில் சுவையும் தெளிவும் இருந்தால் அந்த இடங்களுக்கே சென்று வந்த நிறைவு கிடைக்கும்.

அந்த வகையில் அமெரிக்க மண்ணில் ஆறுமாதங்கள் சிறப்பாகவும் வாசிக்க வாசிக்க இன்பத்தையும் தருகிறது''.

முதல் ஆறு அத்தியாயங்கள் சுவையாகவும், சுவாரசியமாகவும் இருக்கின்றன.

முதல் முதலாகச் செல்லும் பெற்றோரின் மனநிலையான ஒருவிதப் பரபரப்பும், உணர்வுக்கலவைகளையும் தெளிவாக உணர்த்தியிருக்கிறீர்கள்.

அரசியலமைப்புப் பற்றி அடிப்படையான விஷயங்களை கவனத்துடன் ஆராய்ச்சி செய்து எழுதியது பாராட்டத்தக்கது.

நமது பெற்றோர்கள் இந்தப் பகுதியில் கவனம் செலுத்துவார்களா என்று தெரியவில்லை. இருந்தாலும் இந்தப் புத்தகத்திற்கு மிகவும் அவசியமானதாக 'அமெரிக்க அரசியலமைப்பு' பகுதியைக் கருதுகிறேன்.

எடினா, வாஷிங்டன், நயாகரா, சிகாகோ, நியூயார்க் இடங்களுக்கு நீங்கள் சென்ற அனுபவங்களும், அமெரிக்க வீடுகள், பெண்கள், மருத்துவம், பிரசவம், கிரீன் கார்டு பற்றி எழுதியிருந்த தகவல்களும் மிகவும் உபயோகமானவை. இந்தப் பகுதியில் வரும் பல அத்தியாயங்கள் எனக்கு பரிச்சயமானவையாக இருக்கின்றன.

ஒவ்வொரு இல்லத்திலும் இருக்க வேண்டிய புத்தகம். குறிப்பாக வெளிநாடு பயணம் மேற்கொள்பவர்களுக்கும் அவசியம் தேவையான கருவூலம்.

இந்தப் புத்தகம் வெளியாகும் முன்பாகவே எனக்கு வாசிக்கக் கொடுத்தது மிகவும் நெகிழ்ச்சியாக இருக்கிறது. உங்களது அன்புக்கு மிகவும் நன்றி. வாழ்க வளமுடன்!.

**கெனடிக்டன்**

**திலகா சுந்தர்**
அமெரிக்கா.



# 1

# அமெரிக்கா அழைக்கிறது

⁕ ***சென்னை வாலிபர்களுக்கு என்றென்றும் எனது நன்றி! கடவுள் அவர்களைஎப்போதும்காப்பாற்றட்டும். எந்தக்கருத்தையும்தொடர்ந்து செயல்படுத்த உலகிலேயே மிகச் சிறந்த இடம் அமெரிக்காதான். எனவே, விரைவில் அமெரிக்காவில் இருந்து புறப்படும் எண்ணம் எனக்கு இல்லை. ஏன், நான் புறப்பட வேண்டும்? உணவும் பானமும் எனக்கு இங்குத் தாராளமாகக் கிடைக்கின்றன. ஒவ்வொருவரும் மிகவும் அன்பாக உள்ளனர். ஏதோ சில நல்ல வார்த்தைகளைச் சொல்வதற்காக அவர்கள் எனக்கு இவ்வளவும் செய்கிறார்கள். இவ்வளவு பெருந்தன்மை வாய்ந்த நாட்டினரை விட்டு நம் நாட்டிற்கு நான் ஏன் வரவேண்டும்.***

–சுவாமி விவேகானந்தர்–ஞானதீபம் பாகம் 13–பக் 180

*பள்ளி நாட்களிலும் சரி -இப்பவும் சரி எனக்கு சரித்திரப் பாடம் விருப்பமானஒன்றாகும். பள்ளியிறுதித் தேர்வில் 'அமெரிக்க உள்நாட்டுப் போர்' 'பாஸ்டன்தேனீர்விருந்து' கேள்விகள்நிச்சயம் வரும் என்று சொன்ன படியே வந்தது. விடை எழுதும் போது இந்த இடங்களுக்கெல்லாம் நாம் செல்வோம் என்று நினைத்து பார்த்ததில்லை.*

*மன்னார்குடியிலிருந்து தஞ்சாவூர்ச் செல்லும் கரிவண்டி என்சின் கொண்ட இரயிலில் பயணிக்க ஆசை.*

*பள்ளி நாட்களில் சைக்கிளில் செல்ல ஆசை.*

கல்லூரி நாட்களில் என்றாவது ஒருநாள் சென்னை மாநகரைப் பார்த்து விட மாட்டோமா? சென்னையைச்சுற்றிப் பார்க்க மாட்டோமா? என்றெல்லாம் ஏக்கப் பட்டதுண்டு.

அரசுப் பணியில் இருந்தபோது, டெல்லி போன்ற வடமாநிலங் களுக்குச் செல்ல ஆசை.

ஆனால், கனவிலும் நினைக்கவில்லை. உலகத்தின் பணக்கார நாடான அமெரிக்காவுக்குச் செல்வோம் என்று. அதுவும் என் குழந்தைகள் அங்கு பணிபுரிவதையும் பேரபிள்ளைகள் அந்த ஊர் சிட்டிசன் ஆகும் என்று நினைத்துப் பார்ப்பதற்கே ஆச்சரியமாயிருக்கிறது. எனக்கு வாய்த்த இந்த வாய்ப்பு இறையாற்றலின் கருணையால் நடந்தது என்றே கருதுகிறேன்.

அட்லாசை வைத்துக் கொண்டு அமெரிக்காவைப் பார்த்தேன். நூலகங்களில் வரலாற்றுப் புவியியல் விஞ்ஞானப் பார்வையில் அமெரிக்காவைப் படித்து மனதில் பதிவு செய்தேன்.

* உலக வரைபடத்தில் கிர்கன்விச் கோட்டுக்குக் கிழக்கில் ''ஆசியாக் கண்டத்தில்'' உள்ளது.
* 40 டிகிரி வட அட்சரேகை அமெரிக்காவை இரண்டாகப் பிரிக்கிறது. வடபகுதி மிகக் குளிராகவும் தென்பகுதி ஏறத்தாழ வட இந்திய சீதோஷ்ண நிலை கொண்டதாகவும் உள்ளது.
* தேசத்தின் பரப்பளவு 1.3. மில்லியன் சதுர மைல்கள்
* மக்கள் தொகை ஒரு பில்லியனுக்கு மேல் உள்ளது.
* ஜனத்தோகை 298 மில்லியன் மட்டுமே. அதாவது, இந்திய ஜனத்தொகையில் மூன்றில் ஒரு பங்கிற்கும் குறைவு.
* வடக்கே கனடா நாடு- தெற்கே மெக்சிகோ- கிழக்கே அட்லாண்டிக் பெருங்கடல் மேற்கே பசிபிக் பெருங்கடல்கள் நாட்டின் எல்லைகள்.
* ஆங்கிலேயரின் காலனியாக இருந்து, அதை வெறுத்து 1776 ஆம் ஆண்டு ஜூலை நான்காம் நாள் தன்னைச் சுதந்திர நாடாக அறிவித்தது. பிறகு, பிரிட்டிஷ் நாட்டுக் கூலிப்படைகளுடன் சண்டையிட்டு வென்று அவர்கள் ஆட்சியிலிருந்து சுதந்திரம் பெற்ற நாடு.
* 51 மாநிலங்களையும் 7 யூனியன் பிரதேசங்களையும் கொண்டது.
* இந்நாட்டுப் பிரஜை ''அமெரிக்கர்'' என்று அழைக்கப்படுகிறார்.
* நாட்டின் செலாவணி ''அமெரிக்க டாலர்''

* மிஸ்ஸிசிபி-மிசௌரி என்ற இரு பெரிய நதிகளும் அவற்றை வந்தடையும் பல உப நதிகளும் பிரபலமானவை.

* மேற்கே, ராக்கி மலைத்தொடர்களும் கிழக்கே அப்பலாசியன் மலைத் தொடர்களும் உள்ளன.

* ராக்கி மலைத்தொடர்களுக்கும், அப்பாலாசியன் மலைத் தொடர் களுக்கும் இடையிலுள்ள நதிப்படுகைகள் செழிப்பான விளை நிலங்களாகவும், கால்நடை வளர்ப்பு இடங்களாகவும் உள்ளன. பசிபிக் பெருங்கடலில் ஹவாய் தீவுகள் அலாஸ்கா நாட்டின் அருகில் அலூடியன் மற்றும் கோடியக் என்ற தீவும் இந்நாட்டில் உள்ளன.

* தானிய உற்பத்தி, பழங்கள், உணவு பதப்படுத்துதல், ரசாயன மருந்து உற்பத்தி, மோட்டார் வாகனங்கள், தொலை தகவல் தொடர்பு, எண்ணெய் உற்பத்தி, எலெக்ட்ரானிக்ஸ் பேப்பர் உற்பத்தி, பெட்ரோலிய பொருள்கள், நிலக்கரி வெட்டி எடுத்தல், மீன்படிப்பு, கால்நடை அபிவிருத்தி போன்றவை நாட்டின் தொழில்கள்.

* அலாஸ்கா நாட்டிலுள்ள மௌன்ட் ''மெக்கெனஸி'' இந்நாட்டின் உயரமான சிகரம்.

* நியூயார்க்-கெனாவரல்-சென்டியாகோ-லாஸ்ஏன்ஜல்ஸ் ஆகியவை முக்கிய துறைமுகங்கள்.

**பொதுவாக அமெரிக்கா செல்பவர்களை நான்கு வகையாகப் பிரிக்கலாம்.**

1. மாணவர்கள்-அதில் ஸ்காலர்ஷிப் அசிஸ்டண்ட்ஷிப்-அண்டர் கிராஜீவேட்-போஸ்ட் கிராஜீவேட் எனப் பல படிப்புக்கள் உண்டு. ஜி. ஆர். இ. டோ. பெல் வழியாகச் செல்பவர்கள் . இவர்களுக்கு அமெரிக்கா செல்லும் முறைகள் அத்தனையும் பத்து வயதிலிருந்தே மனப்பாடம்.
2. கம்ப்யூட்டர் ப்ரொக்ராம் எழுதச் செல்பவர்கள்.
3. மாமிகள்-தத்தம் பெண்கள் பிரசவத்துக்குச் செல்லும் சாம்பார்ப் பொடி ரசப்பொடி–கிராண்ட் ஸ்நாக்ஸ் தட்டை-அம்பிகா அப்பளம்-ஆனந்த பவன் முறுக்கு மாமிகள்.
4. அறுபது நாட்கள் செல்லும் சுற்றுலாப் பயணிகள்.

இதில், நானும் துணைவியாரும் மூன்றாவது வகையில் பயணித்தோம்.

# 2



# விசா கிடைத்தது!

**நம்மைப்போல கிணற்றுத் தவளைகள் உலகில் எங்குமே இல்லை. எந்த நாட்டிலிருந்தாவது புதிய விஷயங்கள் வந்து சேரட்டும். அதை எல்லோருக்கும் முன்னால் அமெரிக்கா ஏற்றுக் கொண்டுவிடும். ஆனால்- நமது நிலை என்ன! 'எங்களைப் போல உலகில் யாருமே இல்லை! ஆரிய வமிசத்தினரல்லவா நாங்கள்' என்பதே நமது போக்கு. இந்த ஆரிய வமிசப் பண்பு எந்தத் துறையில் எதிலாவது வெளிப்படுகின்றதா? அது, என் கண்ணுக்குப் புலனாகவில்லை! எனினும், தங்களை ஆரிய வம்சத்தினர்கள் என்று கூறி அவர்கள் பெருமைப்படுகிறார்கள்.**

சுவாமி விவேகானந்தர் [ஞானபூமி–பாகம் 12–பக். ;.342]

எல்லோருக்குமே வெளிநாடுகளுக்குப் போகணும் சுற்றிப் பார்க்கணும் என்ற ஆசையும் ஆர்வமும் இருக்கும். அதற்கான வாய்ப்பு சமயச் சந்தர்ப்பம் விடுமுறை மற்றும் பொருளாதாரம் அமையப் பெற்றவர்கள் பறக்கின்றனர்.

நானும் பணி ஓய்வுப் பெற்ற மறுநாளே, எதற்கும் இருக்கட்டும் என்று எனக்கும் என் துணைவியாருக்கும் பாஸ்போர்ட்டுக்கு விண்ணப்பித்து, பெற்று, வைத்துக் கொண்டேன்.

பணியிலிருக்கும் போது ஆயிரத்தெட்டுக் கேள்விகள் கேட்பார்கள். மகனும், மகளும் நிச்சயம் வெளிநாட்டில் வேலைப் பார்ப்பார்கள் என்ற நம்பிக்கை ஊற்று.

அமெரிக்கா செல்லுமுன் அந்நாட்டு கான்சலுக்கு விசாவுக்கு மனு போட வேண்டும். விசா வாங்க வேண்டும் என்பது இப்பொழுது சாதாரண மக்களுக்குக்கூட, கேள்வி ஞானம் வந்துள்ளது.

மூன்று நான்கு முறை அந்த நாட்டுக்குச் சென்று வந்த அனுபவத்தில் விசாவில் சிக்கலே இருக்காது என்று சொல்லியிருந்தாள் மகள் நிவேதிதா.

அப்போதெல்லாம், மவுண்ட் ரோடினை கிராஸ் செய்யும் போது அதிகாலை நான்கு மணிக்கே ஜமுக்காளம் போட்டுக் கொண்டு கையில் பத்திரிக்கையோ புத்தகமோ படித்துக் கொண்டிருக்கும் கூட்டத்தைப் பார்த்து வியந்திருக்கிறேன்.

டிராவல் ஏஜெண்டிடம் பணத்தைக் கொடுத்து விட்டு நீட்டிய இடத்தில் கையெழுத்து போட்டுக் கொடுத்து விசாவுக்கு காத்திருக்கும் நண்பர்களைப் பார்த்து இரசித்திருக்கிறேன். இந்தச் சங்கடங்கள் எல்லாம் இப்பொழுது இல்லை.

இண்டர்வியூ போய் வந்தால் ஒரு வாரத்திற்குள் விசா வீடு தேடி வரும்.

மகள் நிவேதிதா விசா வாங்குவதற்குரிய வழிமுறைகளை எல்லாம் தெளிவாக விளக்கியிருந்தாள்.

என் மகள் எங்களை அழைத்திருந்த கடிதத்துடன் மகள் மருமகன் ஆகியோரின் வங்கிக் கணக்குகள் அவர்களின் கடைசி மூன்று மாதச் சம்பளச் சான்று, வருமான வரி கட்டிய சான்றுகள் பாஸ்போர்ட் முழுநகல் ஆகியவற்றை அனுப்பியிருந்தார்கள்.

இவற்றுடன், எனது ஓய்வூதிய விபரம் சொத்து விபரங்கள் ஆகியவைகளோடு கோப்புகளாக உருவாக்கித் தயார் நிலையில் வைத்திருந்தோம்.

இண்டர்நெட்டில் விண்ணப்பத்தை டவுன்லோடு செய்து ரூ.7500க்கு டி.டி. எடுத்து கான்சலுக்கு அனுப்பினேன். இண்டர் வியூக்கு வரும் தேதி நேரம் கூட நமது விருப்பம் தான். நான் விண்ணப்பித்த படியே இண்டர்வியூ வந்தது.

ஏற்கனவே, விசா ஆபிசில் கேட்கப்படும் ஐம்பது கேள்விகளுக்கு பதிலும்-எப்படி பேசவேண்டும் என்றும் எனக்கு மகள் ஆன்லைனிலேயே வகுப்பெடுத்திருந்தாள்.

தூதரக அதிகாரிகள் கேட்ட கேள்விகளுக்குத் துணிவோடு சரியாகப் பதில் சொல்லியும் மனசு மட்டும் ஏதோ படக் படக் என்று அடித்துக் கொண்டது.

இறுதியில், எங்கள் கை விரல் ரேகைகள் பதிவாயின. மறுநாள் எங்களுக்கு அடுத்த பத்தாண்டுகளுக்கு கிடைத்து விட்டது விசா. அப்போதே விமானத்தில் பறப்பது போன்ற கற்பனை.

இண்டர்நெட்டில் தொடர்பு கொண்டு 2012 ஜூன் 10 நாள் சிகாகோ வழியாக மினியோபோலிஸ் செல்லப் பயணச் சீட்டிற்கு முன்பதிவு செய்ய முயற்சி செய்தோம்.

இப்போதெல்லாம் உலகில் எந்த மூலையிலிருந்தும் எந்த விமானத்திற்கும் டிக்கெட் வாங்கும்படியாக வசதி வந்துள்ளது. கிரெடிட் கார்டு இருந்தால் போதும்.

பிரயாணச் செலவுக்கு இரண்டாயிரம் டாலர் தருகிறார்கள். இந்தியாவில் அன்னியச் செலாவணி நிலைமை மிகவும் ஆரோக்கியமாக இருப்பதால் பல சலுகைகள் கிடைக்கின்றன.



# 3

# பயண ஏற்பாடுகள்

* ***"ஒரு மனிதனிடமுள்ள ஆற்றல் அனைத்தையும் வெளிப்படுத்துவதற்கான நல்லதொரு பயிற்சித்தளம் அமெரிக்கா. அங்குள்ள சூழ்நிலையிலேயே அவ்வளவு அனுதாப உணர்வு நிகழ்கிறது"***

**–சுவாமி விவேகானந்தர்–ஞானதீபம் பாகம் 15–பக். 133**

மனிதனின் ஆயுட்காலம் இப்போதெல்லாம் எமனால் நிர்ணயிக்கப் படுவதில்லை. மருத்துவ உலகம் தான் நிர்ணயிக்கின்றன. மனிதனின் இறப்பு வயது ஏறிக்கொண்டே போகிறது.

மருத்துவத்தின் புரட்சியால் நம்மூரில் 100 வயதைத் தாண்டிய கிழங்களின் எண்ணிக்கை அதிகமாகத்தான் போகின்றன. மீண்டும் முதுமக்கள் தாழி வந்தாலும் ஆச்சரியமல்ல.

சரி. விஷயத்துக்கு வருகிறேன். நாற்பது வயதைக் கடந்தாலேயே ஆண்டுதோறும் மருத்துவப் பரிசோதனை செய்வது நல்லது.

அதிலும், அறுபது வயதில் அமெரிக்கா பயணிக்கப் போகிறோமே? அதனால் மாஸ்டர் செக் அப் செய்யலாம் என்று பாரத் ஸ்கேன் சென்றோம்.

'எல்லாமே நார்மலா இருக்குங்க. நாடித்துடிப்பு...இரத்தம்.... சிறுநீர் - எக்கோ... இ.சி.ஜி... அல்டராசவுண்ட்.... எக்ஸ்ரே.. எல்லாம் உங்களிருவருக்கும் நார்மல் தானுங்க. சாருக்கு மட்டும் ட்ரண்மெல். சிறிது வேறுபாடு இருக்கு.

'ஆஞ்சியோ செய்து கொண்டு பாதுகாப்பாக அமெரிக்க பயணத்துக்கு ஏற்பாடு செய்வது உசிதம்' என்று மருத்துவர்கள் சொல்லி விட்டனர்.

இப்போதெல்லாம் ஆஞ்சியோ எளிமையாக்கப்பட்டுவிட்டது. அந்தக் காலத்தில் காலில் நரம்பினைச் செலுத்தி இதயத்தைப் படம் பிடிப்பார்கள். அச்சோதனையில் பலர் இறந்தும் உள்ளனர். எப்போதோ படித்தது எல்லாம் மனதில் நிழலாடியது.

சரி.. சகோதரி டாக்டர் ஜோதியின் அறிவுரையின்படி சென்னை மலர் ஹாஸ்பிடலில் ஆஞ்சியோ செய்ய ஏற்பாடு செய்யப்பட்டது.

காலை 7.00 மணிக்குச் சென்றோம். ஒரு மணி நேரம் ஆப்ரேசன் தியேட்டருக்குச் செல்ல ஆயத்தப்படுத்தினார்கள்.

ஒரு பெரிய ஆப்ரேசன் செய்வதற்குரிய அவ்வளவு ஏற்பாடு களைச் செய்தார்கள். இந்த ரிப்போர்ட்தான் எங்களது அமெரிக்க பயணத்தை முடிவு செய்வதாக அமைந்தது.

ஆஞ்சியோ ரிசல்ட் பாசிட்டிவாக வந்தது. வெறும் மாத்திரையால் மட்டும் குணப்படுத்திவிடலாம். சர்ஜரி தேவையில்லை. அப்போது தான் நினைத்தேன்.

'கடவுள் நினைப்பதை யாரும் தடுக்க முடியாது. கடவுள் மறுப்பதை யாரும் தரமுடியாது'

குடும்ப டாக்டர் திருமதி ஜோதி சொன்ன மருந்துகள் வாங்கப் பட்டன.

அமெரிக்காவில் முடி வெட்டச் செலவு 20 டாலர் ஆகும். போகும் போது முடி வெட்டிக் கொண்டு கிளம்புவது நல்லது என்ற நண்பரின் யோசனையையும் ஏற்று சம்மர் கட்டு வேறு.

முடிதிருத்தல் ஒரு ஊரின் முதல் பாடகசாலை. பகுத்தறிவு அரசியலறிவு பொதுஅறிவு சொல்லித்தரும் பள்ளிக்கூடமல்லவா?

அந்தச் சின்னஞ்சிறு இடத்தில் அவை செய்திருக்கிற செய்து கொண்டிருக்கிற தொண்டுகள் அதிகம்.

அந்த வயது தோழர் சிங்காரவேலுவின் இலாவகக் கலை நேர்த்தியிடம் என்னை இழுத்துப் போன ஞாபகம்?

மகள் நிவேததிதாவின் அறிவுரையின் படி பிரிட்டிஷ் ஏர்வேஸ்ஸில் பயணச்சீட்டு வாங்கிச் சரிபார்த்தாகிவிட்டது. எனக்கும்

மனைவிக்கும் சைவ உணவாதலால்- ஏசியன் விஜிட்டெரியன் என்று எங்களது உணவுத் தேவைகளைத் தெளிவாக பிரிட்டிஷ் நிறுவனத்திற்கு அறிவித்து விட்டோம்.

சரி. மூட்டை முடிச்சுகள் உள்ளனவே. அது மட்டுமா.நம் தஞ்சாவூர் கலாச்சாரத்தின் படி- தாய் மகள் வீட்டுக்குப் போவதால் வற்றல், வடகம், மிளகாய் தூள் என்று ஐந்து மாதமாகவே வீடு அமர்க்களப் பட்டது.

இந்திய கைத்தறி ஆடைகள் மற்றும் அடையார் கிராண்ட் ஸ்விட்ஸ், வெகுமதிப் பொருள்கள் ஆகியவற்றை அனுமதிக்கப் பட்ட எடைகட்கு ஏற்ப நன்றாக அடுக்கி வைத்தோம்.

பெட்டி இந்த சைசில் தான் இருக்கணும்: ஒரு பெட்டி 23 கிலோவுக்கு மேல் போகக் கூடாது, பெட்டியைப் பூட்டக் கூடாது, கயிறு கட்டக் கூடாது. உணவுப் பொருட்கள் கூடாது.

நாங்கள் பயணிக்க இருக்கும் பிரிட்டிஷ் ஏர்லைன்ஸ் நிறுவனத்தினர் நபருக்கு தலா இரண்டு பெட்டிகள் ஒவ்வொன்றும்-23 மிகாமல் கொண்டு செல்லலாம்.

தவிர, ஒருஹேண்ட் லக்கேஜ் ( 56-45-25 ) மற்றும் லேப் டாப் பை அல்லது கைப் பை ( 22-10-18 இன்ச்) அனுமதித்திருந்தது.

பெட்டியின் மேல், எங்கள் இந்திய முகவரி அமெரிக்காவில் என் மகளின் முகவரி ஆகியவற்றை எழுதி மூட்டை கட்டியாகிவிட்டது.



# 4

# டிராவல் கார்டு

* மூன்றாண்டுகள் நான் அமெரிக்காவிலேயே தங்கினேன். அமெரிக்க மக்கள் மிக உயர்ந்தவர்கள். அவர்களின்எதிர்காலம் சிறப்பாக இருக்கும். அவர்களைக் கண்டு நான் வியப்படைகிறேன். அவர்களிடையே எனக்கு ஏற்ற நண்பர்கள் பலரைக் கண்டேன். ஆங்கிலேயரிடம் காணப் படும் பல தவறான கருத்துக்கள் அமெரிக்கர்களிடம் இல்லை. புதிய கருத்தாக இருந்தாலும் அளந்து ஆராயும் இயல்புடையவர்கள் அமெரிக்கர்கள். அவர்கள் சிறந்த விருந்தோம்பிகள். நம்பிக்கைக்கான அத்தாட்சிகளைப் பார்ப்பதில் நேரத்தை வீணாக்குவதில்லை. நான் ஒரு நகரத்திலிருந்து மற்றொரு நகரத்திற்குச் சென்றது போல நீங்களும் நண்பர்களிடையே சொற்பொழிவாற்றிக் கொண்டே செல்லலாம். பாஸ்டன் - நியூயார்க் - பிலடெல்பியா - பால்டிமோர் - வாஷிங்டன் - டெஸ்மாய்ன் - மெம்பிஸ் முதலிய பல இடங்களுக்கு நான் சென்றுள்ளேன்.”

–சுவாமி விவேகானந்தர்–ஞானதீபம் பாகம் 7– பக். 185

அமெரிக்காவில் நம்மூர் போல் மருத்துவரை அணுக முடியாது. அதற்கென உள்ள டிராவல் கார்டு என்னும் மருத்துவக் காப்பீட்டை வாங்க வேண்டும்.

அமெரிக்கா செல்பவர்கள் கண்டிப்பாகக் காப்பீடு (இன்ஸ்யூரன்ஸ்) செய்து கொண்டுதான் செல்ல வேண்டும்.

உங்கள் மகனோ மகளோ அழைத்திருந்தாலும் அல்லது நீங்களே செல்வதாக இருந்தாலும் இன்ஸ்யூரன்ஸ் அவசியமாகும்.

இங்கிருந்து செல்பவர்களுக்குக் காப்பீடு செய்வதற்கும் ஒரு வரையறை வைத்துள்ளார்கள்.

என்னதான் அமெரிக்காவில் தேனும் பாலும் ஓடினாலும் இங்கு மருத்துவச் செலவு நேர்ந்தால் கழுத்தை இறுக்கிவிடும்.

என் மைத்துனர் கொச்சையாக ஒன்று சொல்வார். அமெரிக்காவில் பல்வலி போன்ற சிகிச்சைக்குப் போனால் கூட 'நம் கோவணத்தை உருவிவிடுவார்கள்' என்று நக்கலாகச் சொல்வார். அமெரிக்காவில் மருத்துவச் செலவுகள் மிக மிக அதிகம்.

கடைசிக் காலத்தில் மகனுடனோ மகளுடனோ இருக்கலாம் என்று அமெரிக்கா வந்து தங்கி விடுவது அவ்வளவு சுலபமான விஷயமல்ல.

இங்கு பத்து ஆண்டுகள் வேலை பார்த்தவர்களுக்கே பென்சன் கிடைக்கும். சும்மா வந்து மகனின் கையை எதிர்பார்த்துத் தங்குபவர்களின் நிலை மிகவும் சிக்கலானது.

மருத்துவக் காப்பீடு எடுக்காவிட்டால் உடம்புக்கு வந்து மருத்துவமனையில் இருக்க வேண்டிய பட்சத்தில் லட்சக்கணக்கில் (டாலர்) செலவாகும்.

ஆயுளுக்கு மகனை கடனாளியாக்கி விடும்.. இது போன்ற பாதிக்கப்பட்ட நம் இளைஞர்களும் உண்டு.

சரி. காப்பீடு எடுக்கலாம் என்றால் அதுவே ஒருவருக்கு மாதம் சுமார் 500 டாலர் ஆகும். அதுவும் முழுவதும் கவராகாது.

அமெரிக்கா சுற்றுலா வருபவர்களும் கண்டிப்பாக மருத்துவ இன்ஸ்யூரன்ஸ் செய்து கொள்வது விவேகமான செயலாகும். செலவாகுமே என்ற தயக்கத்தில் காப்பீட்டை எடுக்காமலேயே வருகிறார்கள்.

இது மிகவும் ரிஸ்க். துரதிருஷ்டவசமாக உடம்புக்கு வந்துவிட்டால் நாம் கற்பனை செய்ய முடியாத அளவுக்கு அமெரிக்க டாக்டர்கள் நம்மைத் தீட்டிவிடுவார்கள். அப்புறம் என் மைத்துனர் சொன்ன கதிதான்.

என் நண்பர் ஒருவர் தனது மகனின் அழைப்பிற்கிணங்க அமெரிக்கா சென்றார். போன இடத்தில் அவருக்குத் திடீரென்று ஹார்ட் அட்டாக்.

உடனே மருத்துவமனையில் சேர்த்து பை-பாஸ் அறுவை சிகிச்சை செய்து உயிர் பிழைக்க வைத்து விட்டனர். அவரோ, இன்ஸ்யூரன்ஸ் செய்து கொள்ளவில்லை. செலவோ பல லட்சம் டாலர்.

அவரது மகனோ இத்தொகையை உடனடியாகச் செலுத்தும் வசதியில்லாதவர். அந்த மருத்துவமனை பெருந்தன்மையுடன் அங்கு வேலைபார்க்கும் அவரது மகனிடம்- இரண்டு வருடத்திற்கு மாதா மாதம் கடனைச் செலுத்தும்படி அக்ரிமெண்ட செய்து கொண்டுள்ளது. போன இடத்தில் மகனைக் கடனாளியாக்கிவிட்டு வந்தது தான் மிச்சம்.

எனவே, உங்கள் மகனோ மகளோ அழைத்தால் அவர்களிடம் எப்படியாவது கெஞ்சிக் கூத்தாடி இன்ஸ்யூரன்ஸ் செய்து கொண்ட பின் செல்வதுதான் உத்தமம்.

ஆனால், பொது ஆரோக்கியம், சுத்தமான காற்று, தண்ணீர், பால், தயிர், மோர், நல்ல உணவு வகைவகையாக ப்ரேக் ஃபாஸ்ட் வகைகள், பாதாம், ஐஸ்கிரீம் போன்ற பலவகைப் பருப்புகள், கொறிப்பதற்கு எத்தனையோ வறுவல்கள், கொட்டைகள் உறுதியாக உழைக்கும் உடைகள் உபயத்தில் நீண்டநாள் வாழலாம்.



# 5

# விமானத்தில் ஒரு நாள்

* ***"நமது முறைப்படி விமானத்திற்கு அருள்காப்பு அளித்தேன். பிறகு, அமெரிக்க நாட்டையும், பிறகு, உலகையும் வாழ்த்திச் சிறிது நேரம் தவம் இயற்றினேன். சிறிது நேரத்தில் குளிர்ச்சியான காற்று வீச ஆரம்பித்தது. இந்த விமானம் 25000 லிருந்து 30000 ஆயிரம் அடி உயரத்தில் பறப்பதாகக் கூறினார்கள். அதாவது, நீலகிரி மலையைப் போன்று நான்கு மடங்கு உயரத்தில் பறந்தது. ஒரு மணிக்கு ஐந்நூறு மைல் விரைவில் பறந்த சென்றது. மேக மண்டலத்தைத் தாண்டி மிக உயரத்தில் பறந்தது. எங்களுக்கு ஆரஞ்ச் பழ ரசமும் சாக்லெட்டும் விமானப் பணிப்பெண்களால் வழங்கப்பட்டன."***

**–வேதாத்திரி மகரிசி – எனது வாழ்க்கை விளக்கம் பக். 164**

*ஆகாயவிமானம் என்றால் அந்தக் காலச் சிறுவர்களுக்கு கொள்ளை ஆசை இருப்பது போல் எனக்கும் அந்த ஆசை இருந்தது. விமானச் சத்தம் கேட்டால் வீட்டிற்கு வெளியில் வந்து அது மறைவது வரை உற்றுப் பார்த்துக் கொண்டே இருப்பேன்.*

*எல்லா ஆச்சரியங்களைவிட- ஆச்சரியமே அசந்து போகுமளவுக்கு இந்த ஆகாய விமானக் கண்டுபிடிப்பு மிகவும் ஆச்சரியமானது. எனவே தான், தனி மனிதரால் இதனைக் கண்டு பிடிக்க இயலவில்லை.*

*ஒரு இயந்திரத்தின் மீது உட்கார்ந்து கொண்டு அதை ஆகாயத்தில் பறக்க வைக்க முடியும் என்பதை யாரும் முதலில் நம்பவில்லை. 1903 ஆம் ஆண்டு டிசம்பர் 13ஆம் நாள் அமெரிக்காவிலுள்ள ரைட் சகோதர்கள்தான் முதல் ஆகாய விமானத்தை பறக்க விட்டனர்.*

ஐந்து பேர்கள் மட்டும் கண்டு களித்த இந்த முதல் விமானத்தை 120 அடி தூரம் 12 வினாடிகளில் மணிக்கு 6. 8 மைல் வேகத்தில் பறந்து சாதனைப் படைத்தனர். விமானத்தைக் கண்டுபிடிப்பதில் தங்களது முழு நேரத்தையும் செலவிட்ட ரைட் சகோதரர்கள், இறுதிவரைத் திருமணம் செய்து கொள்ளவில்லை.

ஏன், என்று கேட்ட போது -சகோதரர்களில் ஒருவரான வில்பர் ரைட் என்பவர் தன்னால் ஆகாய விமானத்தையும் மனைவியையும் ஒரே நேரத்தில் கவனிக்க முடியாது' என்று சொன்னார்.

சுவாமி விவேகானந்தர் அன்று அமெரிக்கா செல்லக் கப்பலில் மூன்று மாதங்கள் பயணித்தார். இன்றோ ஒரு நாளில் அமெரிக்கா செல்லும் வசதி ஏற்பட்டுள்ளது.

இரயில் டிக்கெட் போல் மூன்று மாத வரையறை விமானத்திற்குக் கிடையாது. ஆறு மாதங்களுக்கு முன்னரும் ரிசர்வ் செய்யலாம். விமானக் கட்டணங்கள் அவ்வப்போது காலத்திற்கும் நேரத்திற்கும் கம்பெனிக்குத் தக்கவாறு நிர்ணயிக்கப் படுகின்றன.

இப்போதெல்லாம், உலகில் எந்த மூலையிலிருந்தும் எந்த விமானத்திற்கும் டிக்கெட் வாங்கும்படியாக வசதி கொண்டு வந்திருக்கிறார்கள். கிரெடிட் கார்டு இருந்தால் போதும். உட்கார்ந்த இடத்திலேயே இண்டர்நெட்டில் ரிசர்வ் செய்துவிடலாமே?

பிரிட்டிஷ் ஏர் வேய்ஸ் விமானத்தில் போயிங் 777 விமானத்தில் எனக்கும் மனைவிக்கும் டிக்கெட் முன்பதிவு செய்திருந்தோம்.

பிரிட்டிஷ் ஏர்லைன் இங்கிலாந்தில் 1974 ஆம் ஆண்டு தொடங்கப்பட்ட கம்பெனியாகும். இன்று ஏர்பஸ், போயிங் போன்ற நவீன விமானங்கள் ஏராளமாக உள்ளன. சுமார் 41000 பணியாளர்கள் பணிபுரிகின்றனர். பணியாளர்களின் பணிவான உபசரிப்புப் பாராட்ட தக்கதாக உள்ளது.

இந்தியா அரசின் சர்வதேச விமானப் போக்குவரத்து நிறுவனமான 'ஏர் இந்தியா' 48 விமானங்களைக் கொண்டுள்ளது. இதில், 2006-ஆம் ஆண்டு கிட்டத்தட்ட 43 லட்சம் பயணிகள் பயணித்துள்ளனர். நமது விமான நிறுவனம் எவ்வளவு வளர வேண்டும். வளர்ந்து விடும்.

2012ஆம் ஆண்டு ஜூன் மாதம் பத்தாம் தேதி ஞாயிற்றுக் கிழமை அதிகாலை 5. 30 க்கு அமெரிக்க மண்ணில் அடி எடுத்து

வைப்பதற்காக நானும் என் மனைவியும் புறப்பட்டோம். சென்னை விமான நிலையத்தில் மகன் நரேந்திரனும் நண்பர்களும் உறவினர்களும் வழியனுப்பி வைத்தனர். தொலைபேசியிலும் வாழ்த்துக்கள்.

போர்டிங் பாஸ்' வாங்கிக் கொண்டோம். பிரிட்டிஷ் விமானத்தில் 16, 17 நம்பர் ஆகிய இருக்கைகள் எங்களுக்கு ஒதுக்கப்பட்டன.

நான் பயந்தது போல் விமானம் மேலழும் பொழுது மனைவிக்கு வாந்தியும் வரவில்லை. வேறெந்த தொந்திரவும் இல்லை. நல்ல விதமாகப் பறந்தோம்.

அடுத்த இருக்கையில் மனைவியும் அதற்கடுத்த இருக்கையில் அமெரிக்கா செல்லும் பெண், குழந்தையுடன் வந்து அமர்ந்தாள். நல்ல பேச்சுத் துணை என மகிழ்ந்தோம்.

நடு இரவில் வீட்டை விட்டுக் கிளம்பி அதிகாலை பயணிப்பதால் முகம் கழுவி வயிற்றை கிளீயர் செய்து கொள்ளலாம் என்று தோன்றியது. சும்மா சொல்லக் கூடாது விமானத்திலும் சரி, ஏர்போர்ட்டிலும் சரி, அமெரிக்காவிலும் சரி ரெஸ்ட் ரூம்கள் ஏக பளபளப்பு.

ஆனால், முகம் கழுவ நின்றிருந்தபோது- நம்மூர்ப் பெரியவர் ஒருவர் டாய்லெட்டிலிருந்து முனகிக் கொண்டே வந்தது கவனத்தை ஈர்த்தது. 'எல்லாம் சரிதான்; குப்பைகளையெல்லாம் தொட்டியில் ஒழுங்காகப் போடறான். உடம்புக்கு செண்ட் அடிச்சுக்கிறான். ஆனா குண்டி கழுவ தண்ணி தர மாட்டேன்றானே துடைச்சுக்கச் சொல்றான்! ஒரு குவளை வச்சுட்டாத்தான் என்னவாம்' என்று விசனப்பட்டார்.

விமானத்தில் எம்பார்கேஷன் படிவம் ஒன்றைத் தந்தனர்- குடியேறல் தகவல். அதனை முறைப்படிப் பூர்த்தி செய்து தயாராக வைத்திருந்தோம்.

ஜன்னலோர இருக்கை என்பதால் ஆங்காங்கே மின்னொளியில் நகர்கள் மிளிர்வதைப் பார்க்க முடிந்தது. விமானம் லண்டன் விமான நிலையத்திற்குப் போய்க் கொண்டிருப்பதை அவ்வப்போது திரையில் பார்க்க முடிந்தது. விமானத்தின் வேகம் பொதுவாக மணிக்கு 800 கி.மீ. ஆகும்.

விமானத்தில் ராஜ உபசாரம் தான். ஆப்பிள் ஜுஸ், பிஸ்கட், சிப்ஸ். அழகான பணிப்பெண்களின் பணிவான கவனிப்புகள்.

என்னதான் ஏஷியன் வெஜிட்டேரியன் என்று சொல்லியிருந்தாலும் இலை தழையைக் கொண்டு வந்து கொடுப்பார்களோ என்கிற

சமயத்தில் சப்பாத்தி, நூடுல்ஸ், பொங்கல், இட்லி.... என்று பல பல பாக்கெட்டுகளை என் மனைவி அங்கங்கே தக்க சமயத்தில் பணிப் பெண்ணிடம் கேட்டு வாங்கிக் கொடுத்தாள்.

சென்றடைய வேண்டிய இடத்திற்கு உள்ள தூரம் மற்றும் அங்கு தற்போதைய நேரம் ஆகியவற்றைத் தொடர்ந்து திரையில் பார்க்க முடிந்தது.

ஒவ்வோர் இருக்கையிலும் ஒரு 'ஹெட் போன்' உள்ளது. அதன் மூலம் திரையில் உள்ள விபரங்களை அறிக்கையாகவும் கேட்கலாம். சற்று நேரம் கழித்து ஓர் ஆங்கிலத் திரைப்படம் காட்டப்பட்டது. தூக்கம் வரவில்லை என்றாலும் கண்களை இறுக மூடினேன்.

விமானப் பயணத்தில் வினோதக் காட்சிகளுக்கு குறைவில்லை. அமெரிக்காவின் கலாச்சாரமான இண்டர்நெட்டின் தாக்கம் விமானத்திலேயே தொடங்குகிறது. ஹெட்போனை மாட்டிக் கொண்டு இண்டர்நெட் கலந்துரையாடல்.

புன்னகையை உதடுகளில் காண்பித்துவிட்டு மீண்டும் முகம் இறுகும் ஆறடி உயரமான அழகான ஏர்ஹோஸ்டஸ். இரட்டைக் குழந்தையுடன் பயணிக்கும் கேரளப் பெண். மாற்றி மாற்றி ஒரு குழந்தை அழ , மற்றது வேடிக்கை பார்க்க அழகான காட்சி.

விமானத்தில் கொடுத்த எம்பார்சேஷன் கார்டை வெறித்துப் பார்க்கும் ஜப்பானியக் கிழவன்.

வால்ட் விட்மனின்."O Captain! My Captain!" எனும் புத்தகத்தைப் படிக்கும் இளம் சீன ஜப்பானியப் பெண்.

பக்கத்து உள் சீட்டுக்காரரின் 'எக்ஸ்யூஸ்மி'க்கு எழுந்து வழி கொடுத்து அவர் பத்து முறை டாய்லெட் செல்வதற்கும் புன்னகைத்து முன் சீட்டு நபர் இருக்கையை நம் காலில் விரித்து ''ஏசி'' குளிரடித்து அப்படியிப்படித் தூங்க முயலும் போது 'விமானம் (கரடுமுரடான பாதையில்) மாறுபட்ட சீதோஷ்ணத்தில் பயணிப்பதில் குலுங்குகிறது.

உடன் பயணிக்க, 'பெல்ட்டை போட்டுக் கொள்ளுங்கள்' என்ற மணியடித்து அறிவிப்பு வரும். அதுவரைக் கண்ணிலேயே படாத பணியாட்கள் வேகமாய் ஓடிவந்து பெல்ட்டை செருகுவர் சீட்டை நிமித்துவர்.

அப்புறம், கொஞ்ச நேரத்தில் தூக்கம் வரும்போது ஜூஸ் கொண்டு வந்து எழுப்புவான்.

பின், டாய்லெட்டிற்கு வேவு பார்த்து காலியானதும் ஓடிப் போய் ரிலாக்ஸ் செய்ய வேண்டும்.

பெரிசுகள் எல்லாம் விமானத்திலேயே வாக்கிங்.

பத்தரை மணி நேரப் பயணத்திற்குப் பிறகு 5105 மைல் பறந்த விமானம் கீழே இறங்குவதை உணர முடிந்தது.

எல்லோரையும் சீட் பெல்ட்டுகளைக் கட்டிக் கொள்ளுமாறு பணிப்பெண்கள் வேண்டுகோள் விடுத்தனர். விமானம் மெதுவாகக் கீழிறங்கத் தொடங்கியது.

ஆனால், என் மனது மட்டும் தன் சிறகுகளைச் சுருக்காமல் உயர உயரப்பறந்து கொண்டிருந்தது.

கசங்கிய கண்களைத் துடைத்துக் கொண்டே ஜன்னல் வழியே எட்டிப் பார்த்த எனக்கு இன்ப அதிர்ச்சி!

துடைத்து வைத்த பீங்கான் மாதிரி லண்டன் நகரம்.

விமானம் லண்டன் ஹீத்ரோ விமான நிலையத்தை அடைந்தது.

விமானம் ரன்வேயில் ஓடி நின்றது. சக பயணிகள் வெளியேற ஆரம்பித்தார்கள்.

லண்டன், இங்கிலாந்து நாட்டின் ஒரு முக்கிய நகரம் .இங்கு அமைந்துள்ள சர்வதேச விமான நிலையம் ஐரோப்பாவின் பெரிய விமான நிலையம் ஆகும்.

இந்த விமான நிலையத்தில் தினமும் விமானங்கள் வந்து செல்கின்றன. லண்டன் வழியாக அமெரிக்கா செல்லும் அனைத்துப் பயணிகளுக்கும் மிகவும் பரிச்சயமான நகரம்.

இந்த ஊர் எப்படி இருக்கும் என்ற ஆர்வத்தில் எட்டிப் பார்த்தேன். நம்ம ஊர் ஊட்டி கொடைக்கானல் மாதிரிப் பச்சையாகவும் மலைப் பிரதேசமாகவும் தென்பட்டது.

இங்கிலாந்தின் தலைநகரமாக விளங்கும் லண்டனில் உள்ள ஹீத்ரோ விமான நிலையம் பெரிய நகரமாகவும் காட்சியளித்தது. இங்குள்ள ஹீத்ரோ சர்வதேச விமான நிலையத்தில்தான் பல்வேறு நாடுகளில் இருந்து விமானங்கள் வந்திறங்கிய பின்னர் வேறு இடங்களுக்குச் செல்கின்றன.

உலகிலேயே மிகப் பெரிய பயணிகள் விமான நிலையமான லண்டன் ஹீத்ரோ விமான நிலையத்தில் நாள் ஒன்றுக்கு 1.86 லட்சம் பயணிகள் வந்து செல்கிறார்கள்.

உலகின் இரண்டாவது பெரிய பயணிகள் விமான நிலையமான பாரிஸ் நகரின் சார்ல்ஸ் டி கல் விமான நிலையத்தில் தினமும் 1.47 லட்சம் பயணிகள் வந்து செல்கிறார்கள். சென்னை விமான நிலையத்தில் சுமார் 28000 பயணிகள் வந்து செல்கின்றனர்.

ஒரு விமானத்திலிருந்து இறங்கி அடுத்ததைப் பிடிக்க இருக்கும் இடை வேளையில் அந்தந்த விமானத் தளங்களில் ஓய்வெடுக்க வசதிகள் இருக்கும்.

அங்கே டி. வி. உண்டு. பல நாடுகளிலும் கம்ப்யூட்டர் இன்டர்நெட் என இலவசமாய் அவற்றைப் பயன்படுத்தலாம். பொழுது ஓடியே போய் விடும். காத்திருப்பின் களைப்புத் தெரியாது.

எங்களுக்கு சிகாகோ நகருக்குச் செல்லும் விமானம் மாலை 5.35 மணிக்கு. எனவே நாங்கள் நான்கு மணி நேரம் காத்திருக்க வேண்டும்.

குளிக்க வேண்டும் போல் இருந்தது. குளியலறை என்ற வண்ண அழைப்பு. உள்ளே நுழைந்தால் இரண்டு பெண்கள். அவர்களின் பனிக்குரல் என்னை அழைத்தன. அழகான சோப்பும் ஷாம்பூம் மெல்லிய டவலும் தந்தார்கள்.

உள்ளே போனால் இங்கேயே தங்கி விடலாமோ என்று நினைக்கிற வண்ணம் அழகான குளியலறை.

ஐந்து டாலரில் சுகமான குளியல் முடிந்தது. பயணக் களைப்பும் தொலைந்து போனது.

நாங்கள், எங்களது யுனைட்டைட் ஏர்லைன்ஸ் விமானத்தின் சரியான நேரம் மற்றும் அதன் கேட் எண் விபரங்களை ஒவ்வொரு தகவல் பலகையாகத் தேடினோம்.

போயிங் 747 என்ற விமானம் எந்த டெர்மினல் என்ற விவரம் எங்களது பயணச்சீட்டில் இல்லை. பக்கத்திலிருந்த தொலைப்பேசி மூலம் விசாரணைக்கான எண்ணைத் தொடர்பு கொண்டேன். உங்களுக்கு ஐந்து என்றனர். அதாவது.........என்ற பகுதியில் டெர்மினலில்தான் 'அமெரிக்கன் ஏர்லைன்ஸ்' என்ற விமானம் வந்து நிற்கும். அங்கு சென்றோம்.

ஒரு மணி நேரத்தில் விமானம் வருவதாக அறிவித்தனர். முதலில் குழந்தைகளுடன் வந்துள்ள தாய்மார்களை அழைத்தனர். பின்னர், வயதானவர்கள் மற்றும் ஊனமுற்றோர்கள். அதற்குப் பின் முதல் வகுப்புப் பயணிகள் இறுதியாக சாதாரணக் கட்டணப் பயணிகள். சாதாரணக் கட்டணப் பயணிகளை பல பிரிவாகப் பிரித்து ஒருவர் பின் ஒருவராக அனுப்பினார்கள்.

ஏறக்குறைய 200 பயணிகளை வரிசைப்படுத்தி விமானத்திற்குள் அனுப்பினார்கள்.

விமானம் லண்டனை விட்டுப் புறப்பட்டது. பயண நேரம் 8.20 நிமிடங்கள். தூரம் 3953 மைல்கள் பறக்க வேண்டும்.

எனது நினைவுகளைப் போலவே, சிகாகோ செல்லுகிற அந்த அலுமினியப் பறவையும் பறந்து கொண்டிருந்தது.

ஏராளமான விமானங்கள்; ஆகாயத்தில் குறுக்கும் நெடுக்குமாகப் பறந்ததைப் பார்த்தோம். பறக்கும் விமானங்கள் இரண்டு கோடுகளை ஆகாயத்தில் பதிவு செய்து விட்டுச் செல்வதால் அந்தப் பகுதியில் பறக்கும் அனைத்து விமானங்களையும் கண்டு கொள்ள முடிந்தது.

ஒவ்வொரு விமானத்தையும் குறிப்பிட்ட உயரத்தில் பறக்க விடுகிறார்கள் என்ற உண்மை இப்போது தான் எங்களுக்குப் புரிந்தது. விமானங்கள் குறுக்கும் மறுக்குமாகச் சென்றால் வெவ்வேறு உயரத்தில் பறப்பதால் மோதிக் கொள்ள வாய்ப்பில்லை. ஜன்னல் வழியாகப் பார்த்த போது, வட அட்லாண்டிக் கடலில் ஆங்காங்கே கப்பல்கள் பயணிப்பதைக் காண முடிந்தது.

போயிங் 747 என்ற விமானம் என்பதால் கழிப்பிட வசதி விமானத்திலேயே 5இடங்களில் வைக்கப்பட்டிருந்தது. இவ்வளவு சிறிய குறுகிய இடத்தில் எவ்வளவு சிறப்பாகச் சுகாதார வசதிகளைச் செய்திருக்கிறார்கள் என்பது வியப்பாக இருந்தது.

கழிப்பிடம் சுத்தமாக இருப்பதைக் கண்டு ஆச்சரியப்படாமல் இருக்க முடியாது. கை கழுவும் வாஷ்பேசனும் சுத்தமாக இருந்தது.

'கழிப்பிடம் சுத்தமாகவும் சரியாகவும் இருந்தால் அந்த இடம் மிகவும் சுத்தமாக இருக்கும்' என்று சுவாமி சித்பவானந்தர் கூறியது எனக்கு நினைவுக்கு வந்தது.

அமெரிக்க இமிக்ரேஷன் படிவம், அமெரிக்க சுங்கப் படிவம் ஆகியவற்றை விமானத்தில் சரியாகப் பூர்த்தி செய்து தயாராக வைத்திருந்தோம்.

விமானம் தரையிறங்குவதற்குத் தயாராவதை உணர்ந்தோம். விமானம் சிகாகோ விமான நிலையத்தில் தரை இறங்கும் போதே சிவப்புக்கலர் விளக்குப் பொருத்தப்பட்ட வாகனங்கள் பல விமானத்தை நோக்கி வந்தன.

இந்த விமானத் தளங்கள் எல்லாம் ஈர்க்கும் வண்ணம் அமைந்திருந்தன. எவ்வளவு பெரியது. எத்தனை அழகு. பார்த்துக் கொண்டே இருந்தேன்.

நம்மூரில் பேருந்து நிற்பது போல் விமானங்கள். கூப்பிட்டதும் தான் உலக நினைவிற்கு வந்தேன்.

பெட்டிகளை எடுத்துக் கொண்டு கஸ்டம்ஸ் அண்ட் இமிகிரேசன் பிரிவுக்கு வந்த போது பல கேள்விகள் கேட்டார்கள். எதற்காக அமெரிக்கா வந்திருக்கிறீர்கள்? எத்தனை நாள் இங்கு தங்கியிருப்பீர்கள்? ஏதாவது விலை மதிப்பான பொருள்கள் வைத்திருக்கிறீர்களா? உணவுப் பொருள்கள் ஏதேனும் இருக்கிறதா? என்று பல கேள்வி களைக் கேட்டுத் துளைத்தெடுத்தனர்.

அமெரிக்காவில் இருக்கும் எங்களது மகளைப் பார்க்கவும் சுற்றுலா பயணியாகப் பல இடங்களைச் சுற்றிப் பார்ப்பதற்காக ஆறு மாதங்கள் தங்கப் போகிறோம் என்று சொன்னதும் அமைதியாகி விட்டனர்.

இந்தச் சோதனைகள் முடிந்தவுடன் பாஸ்போர்ட்டில் எத்தனை நாட்கள் தங்கலாம் என்று முத்திரையிட்ட பின்னர் எங்களை வெளியே அனுப்பினர்.

இமிகிரேசன் முடிந்ததும் லோக்கல் விமானத்தில் செல்ல பெட்டி களை கொடுத்தோம்.

அமெரிக்காவிலிருந்து வரும்போது விமானத் தளத்தில் லக்கேஜின் எடையைப் பார்ப்பதில்லை. எண்ணிக்கையைப் பார்க்கிறார்கள். ஒருவருக்குக் கையில் எடுத்துச் செல்ல ஒரு பையும் பொருள்களை செக்-இன் மூலமாக அனுப்ப இரண்டு பைகளும் அனுமதிக்கிறார்கள்.

போர்டிங் கார்டு வாங்கும் இடம் வரை நம் லக்கேஜ்களை எடுத்துச்சென்றால் போதும். அதற்குப் பிறகு, நாம் இறங்கும் சென்னையில் தான் அவைகளை எடுத்துச் செல்லப் பொறுப்பேற்க வேண்டும்.

ஒரு விமானத்திலிருந்து இறங்கி அடுத்த விமானம் ஏறுவதற்கு முன்னர் அதற்குரிய கேட் எண்ணை, பயணம் செய்யும் விமானத்திலேயே

டி. வி. மூலம் அறிவிப்பு செய்கிறார்கள். அதேபோல், அந்த கேட் இருக்கும் இடத்தை எளிதாகக் கண்டுபிடிக்கும் வண்ணம் ஆங்காங்கே அம்புக்குறி போட்டு அழைத்துச் செல்கிறது.

ஒரு கேட்டிலிருந்து இன்னொரு கேட்டிற்குப் போவதற்குப் பஸ்ஸிலும் போக வேண்டும். சில இடங்களுக்கு இரயிலிலும் ஏற வேண்டும். சுமையுடன் நடக்க வேண்டும் என்ற கவலையும் இல்லை. ஆங்காங்கே எஸ்கலேட்டர் நம்மை இழுத்துச் செல்கிறது.

இங்கு கழிப்பிடத்தை ரெஸ்ட் ரூம் என்றழைக்கிறார்கள். ஆங்காங்கே ரெஸ்ட்ரூம் அமைக்கப்பட்டுள்ளன. எங்கும் க்யூ கிடையாது. கூட்டமும் கிடையாது.

அதேபோல், குப்பைகளைப் போடுவதற்கும் பத்தடிக்கு ஒரு டஸ்ட்பின் வைத்திருக்கிறார்கள். அதனால், எங்கும் குப்பையைத் தரையில் போட வேண்டிய அவசியம் இல்லை.

சிகாகோவிலிருந்து மினியோபோலிஸ் செல்லும் விமானத்தில் ஏறினோம். போயிங் 737 ல் 341 மைல் தூரத்தை 1 மணி 20 நிமிடத்தில் கடந்தோம். மினியோபோலிஸ் விமானத்தளத்தில் இறங்கும்போது எங்களுக்கு முன்னாலேயே தள்ளு வண்டி வந்து நிற்கிறது.

விமானம் மினியோபோலிசில் இறங்கியதும் மகளும் மாப்பிள்ளையும் கார்களுடன் எங்களை வரவேற்க வந்திருந்தார்கள். இரண்டு ஆண்டுகளுக்குப் பிறகு மகளை நேரில் பார்த்த மகிழ்ச்சியில் தாயுக்கும் மகளுக்கும் ஆனந்தக் கண்ணீர்.



# 6

# ஜெட்லேக் முழந்துவிட்டதா?

*✻ அமெரிக்காவில் நான் செய்யச் சென்ற வேலை சர்வ சமய சபையில் பங்கு பெறுவதல்ல. அது, வெளியே சொல்லிக் கொண்ட காரணம். அது, என் வேலையைத் துவக்க வாய்ந்த வாய்ப்பு-துவக்கம். அதற்காக அந்தச் சபையின் உறுப்பினர்களுக்கு நாம் மிகுந்த நன்றி செலுத்துவோம். ஆனால், நாம் உண்மையில் அமெரிக்காவின் மகத்தான மக்களுக்கும், அமெரிக்க நாட்டிற்கும் அவர்களின் அன்பு மயமான விருந்தோம்புகின்ற உள்ளத்துக்கும் நன்றி செலுத்த வேண்டும். மகத்தான நாடாகிய அமெரிக்காவில் உலகில் எந்த நாட்டையும் விட, மிக அதிகமான அளவு சகோதரத்துவம் வளர்ந்திருக்கிறது.*

–சுவாமி விவேகானந்தர்–ஞானதீபம், பாகம் 11– பக். 306.

Jet lag என்பது 24 மணி நேர பகல் இரவு சுற்றில் மாற்றம் வருவதால் உடலில் இயங்கும் உயிர் கடிகாரத்தில் (Bio-Clock) ஏற்படும் பிறழ் நிலையாகும்.

மாறுபட்ட மெரிடியன் உள்ள இடங்களுக்கு விமானத்தில் செல்லும்போது இந்நிலை ஏற்படுவதால் இதைJet lag என்று கூறுகிறார்கள்.

இதன் மாற்றுப் பெயர்களாவன Desynchronosis - Dysrhythmic - Dyschroy - Jet Syndrome என்பதாகும்.

அமெரிக்காவின் பரந்த நிலப்பரப்பில் ஒரு மணி இடைவெளியில் ஆறு ஸ்டாண்டர்ட் டைம் பகுதிகள் உள்ளன. இந்தியாவில், ஒரே ஸ்டாண்டர்ட் நேரம்தான். வடக்கு தெற்கு தீர்க்கரேகைகளில் 15 பிரிவில் 1 மணி நேர வேறுபாடு ஏற்படும்.

1. அலாஸ்கன் ஸ்டாண்டர்ட் டைம்
2. பசிபிக் ஸ்டாண்டர்ட் டைம்
3. மலையக ஸ்டாண்டர்ட் டைம்
4. மத்திய ஸ்டாண்டர்ட் டைம்
5. கிழ்த்திசை ஸ்டாண்டர்ட் டைம்
6. அட்லாண்டிக்

பசிபிக் கடல்கரை மாநிலங்களைவிட கிழக்கு மாநிலங்கள் 3 மணி நேரம் முந்தி இருக்கும். வாஷிங்டன் - ஒரேகான்- கலிபோர்னியா மூன்று மாநிலங்களிலும் பசிபிக் நேரம் தான் முறைப்படுத்திய நேரம்.

அமெரிக்கா போன்ற நாட்டிற்குப் போய்ப் பழகியவர்கள் கேட்கும் முதல் கேள்வியே ஜெட் லேக் முடிந்து விட்டதா? என்பதாகும். **ஜெட் லேக்கை தவிர்ப்பதற்கான ஒரே வழி விமானத்தில் நன்றாகத் தூங்கினால் போதும்.**

விமானத்தில் மணிக்கணக்காகப் பயணம் செய்யும் போது பகல்-இரவு காலம் நேரம் மாறி மாறி வரும். ஒழுங்காக அது அமையாது. இயற்கை ஒழுங்காகத்தான் இருக்கிறது. நாம் வெவ்வேறு திசை நோக்கிப் பயணிக்கிறோம் என்று சரியாகச் சொல்ல வேண்டும்.

அதனால், பகல் இரவாகவும் இரவு பகலாகவும் மனத்தளவில் தோன்றும். மனம் தானே அனைத்திற்கும் காரணம். இதனை ஜெட்லேக் என்று கூறுவார்கள்.

நம் ஊரில் எப்போதும் காலை ஆறு மணியிலிருந்து மாலை ஆறு மணி வரை பகல். மீதி நேரம் இரவு. ஆனால், அமெரிக்காவில் இப்படி யில்லை.

இளவேனிற் காலத்தில் இரவு 9 மணி வரை பகல் நீளமாக இருக்கும். குளிர்க்காலத்தில் குறைந்த பகல். நீளமான இரவு. அமெரிக்கர் பகல் நேரத்தை முழுவதும் பயன்படுத்த வருடத்திற்கு இரண்டு முறை நேரங்களை மாற்றியமைக்கின்றனர்.

இலையுதிர்க் கால இறுதியில் அக்டோபர் கடைசி ஞாயிறன்று விடியற்காலை இரண்டு மணிக்கு கடிகாரத்தைக் கையில் எடுத்து ஒரு மணி நேரம் பின்தள்ளி வைக்கிறார்கள்.

இளவேனிற் கால இறுதியில் ஏப்ரல் முதல் ஞாயிறன்று காலை இரண்டு மணிக்கு ஒரு மணி நேரம் கூட்டுகிறார்கள்.

சென்னையிலிருந்து விமானம் புறப்பட்டது. ஞாயிறு அதிகாலை 05.30 மணிக்கு. 10.30 மணி நேரம் பயணம். 4 மணி நேரம் இங்கிலாந்து ஏர்போர்ட்டில் காத்திருந்தேன். 21 மணி நேரம் கழித்துப் பார்த்தால் ஞாயிறு இரவு 10. 30 மணியாக இருக்க வேண்டும். ஆனால், சிகாகோவில் அன்று ஞாயிறு மதியம் 12.30 மணிதான்.

**நாம் பூமியின் மேற்கு நோக்கிப் பிரயாணம் செய்தால்- நேரத்தைக் குறைக்க வேண்டும். கிழக்கு நோக்கிப் பயணம் செய்தால் நேரத்தைக் கூட்ட வேண்டும்.**

சென்னைக்கும் லண்டனுக்கும் (ஏர்போர்ட்) நேர வித்தியாசம் (ஐந்தரைமணி நேரம்). சென்னைக்கும் வாஷிங்டனுக்கும் நேர வித்தியாசம் ஏறத்தாழ பத்து மணி நேரம். அதாவது நமக்கு மாலை ஐந்து மணி என்றால் வாஷிங்டனில் அதிகாலை மூன்று மணி.

விமானத்தில் என் பக்கத்து சீட்டில் சிகாகோவில் தங்கிப் படித்து வரும் மாணவர் இருந்தார். விடுமுறை முடிந்து கல்லூரிக்குச் சென்று கொண்டிருந்தார். அவரிடம் பேசிக் கொண்டிருந்தேன். அபார பொது அறிவு.

இரவு 12.00 ஆகிவிட்டது. சற்று கண்ணயர்வோம் என்று தூங்கினேன். அரைமணி நேரம் கடந்திருக்கும். என்ன ஆச்சரியம்! வெளியில் கண்ணாடி மூலம் பார்த்தேன். பள பளவென்று விடியற் காலை பொழுதாகி விட்டது. அந்தப் பகுதியில் நேரம் அப்போது, அதிகாலை மணி 5.00. முதலில் இந்த திசையில் விமானத்தில் பயணிக்கும் அனைவருக்கும் இந்த அனுபவம் ஏற்படும்.

ஜெட்லேக் நம்மை ஒன்றும் செய்யாது என்று இருந்தேன். ஆனால், நான்கு நாட்கள் வரை தூக்கம் மாறி மாறி வந்தது.

இதற்காகத் தான் பயண ஏற்பாட்டில் தூக்க மாத்திரைகளை மாமிகள் எடுத்துச் செல்வார்கள்? எனது ஜெட் லேக் மூன்று நாட்கள் நீடித்தது.

நேரம் வித்தியாசம் மட்டுமல்ல. பருவ காலங்களும் இங்கு வித்தியாசமாக இருக்கும். விவேகானந்தரைப் புரட்டிப் பாருங்கள்.

**✻ இடத்திற்கு இடம் சென்று சொற்பொழிவு செய்ய வேண்டியுள்ளது. இங்குச் சூட்டைப் போலவே குளிரும் அதிகமாக உள்ளது. இங்குள்ள, கோடை வெப்பம் கல்கத்தாவின் கோடையை விட எந்த விதத்திலும் குறைந்ததல்ல. குளிர் காலக் குளிரைப் பற்றி நான் என்ன சொல்லட்டும்! அப்போது, நாடு முழுவதும் பனி போர்த்தப்பட்டதாகி**

விடுகிறது. மூன்று நான்கு அடிக் கனமுள்ள பனி ஏன்? சில இடங் களில் ஆறு ஏழு அடிக்கனமுள்ள பனி கூடக் காணப்படுகிறது. நாட்டின் தென்பகுதிகளில் பனி இல்லை. ஆனால், இந்தப் பனியை யாரும் ஒரு பெரிய விஷயமாக நினைப்பதில்லை. ஏனெனில் 32 டிகிரி எப்-இல் தான் பனி செய்கிறது. கல்கத்தாவில் 60 டிகிரி எப்புக்குக் கூட வருவது இல்லை. இங்கிலாந்தில் ஒருபோதும் பூஜ்யம் டிகிரிக்குப் பக்கமாக வெப்பம் தணிந்து விடுவதில்லை. ஆனால் இங்கேயோ பூஜ்யத்திற்கும் கீழாக 4 அல்து 5 டிகிரி போய் விடுகிறது. வடக்குப் பகுதியில் கனடாவில் பாதரசமே இறுகிப் போய்விடுவதால் அச்சமயத்தில் சாராயம் கொண்ட வெப்ப மானியை உபயோகிக்க வேண்டியுள்ளது. குளிர் மிக அதிகமாக இருக்கும் போது அதாவது பாதரசம் 20 டிகிரி எப்புக்கும் கீழாக இருக்கும்போது பனி பெய்வதில்லை. பனி பெய்கின்ற நாளன்று குளிர் மிக அதிகமாக இருக்குமென்று நான் எண்ணியதுண்டு. ஆனால், அவ்வாறு இல்லை. வெப்ப நாட்கள் என்று சொல்லக்கூடிய தினங் களிலேயே பனி பெய்கிறது. அது தீவிரமான குளிர் ஒரு மாதிரியான போதையுணர்ச்சியை உண்டாக்குகிறது.

* எனது மூக்கும் காதுகளும் கழன்று விழுந்துவிடும் என்று எனக்குப் பெரிய பயம் ஏற்பட்டுவிட்டது. ஆனால், இன்றுவரை அவை நன்றாகவே உள்ளன.

சுவாமி விவேகானந்தர்; – ஞானதீபம்–[பாகம் 12–பக். 233]

இத்தகைய குளிரிலும் வெப்பத்திலும் தான் நமது குழந்தை களும் நம் மக்களும் தங்களது உழைப்பை வெளிப்படுத்தி வருகிறார்கள் என்று நினைக்கிற போது கொஞ்சம் கனக்கத்தான் செய்கிறது. மனசு வந்து விட்டால் என்ன செய்வது?

7



# கார் பயணங்கள்

* ***''அமெரிக்க மக்கள் நல்ல இயல்பு கொண்டவர்கள், இரக்க முடைவர்கள். உண்மை பேசுபவர்கள், அவர்களிடமுள்ள அனைத்தும் நன்றாகத்தான் உள்ளன. ஆனால், அந்தப் போக நுகர்ச்சி உள்ளதே அதுதான் அவர்களுக்குக் கடவுள்! இந்த நாட்டில் பணம் ஆறு போலப் பாய்கிறது. அழகே அதன் சிற்றலை. கல்வியே அதன் பேரலை. செல்வத்தில் அவர்கள் புரள்கிறார்கள். காங்ஷந்த: கர்மணாம ஸ்ததிம் யஜந்த ஹ தேவதா: சஷிப்ரம ஹி மானஷே லோகே ஸத்திர்பவதி'' (கர்மாஜா) ''இந்த உலகில் செயலில் வெற்றியை விரும்பு பவர்கள் தேவதைகளை வழிபடுகிறார்கள். ஏனெனில் உலகில் வெற்றி விரைவில் உண்டாகிறது: (கீதை)''***

**–சுவாமி விவேகானந்தர் – ஞானதீபம் பாகம் 13 – பக். 218**

விமான நிலையத்தில் இரண்டு ஆண்டுகளுக்கு பிறகு மகளையும் மாப்பிள்ளையும் பார்த்த மகிழ்ச்சி. மகிழ்ச்சியில் பெட்டிகளை எடுப்பதில் கவனம் திசை மாறியது. ஆனால், மனைவி கெட்டிக்காரி. உறவுகளைப் பார்த்துக் கொண்டே பேசிக் கொண்டே பெட்டிகளை அவர்களது காரில் ஏற்றுவதில் கவனமாக இருந்தாள்.

அங்கெல்லாம் போர்ட்டர்கள் கிடையாது. தன் கையே தனக்கு உதவி என்பது அமெரிக்க வாழ் மக்களுக்கு மட்டுமே பொருந்தும்.

காரில் ஏறினோம். வீடு எவ்வளவு தூரம் என்று கேட்டோம். 20 நிமிடக் கார் பயணம் என்று பதில் வருகிறது. கார் பயணத்தைக் கணக்கிட்டுத்தான் போகும் தூரத்தைக் கணக்கிடுகிறார்கள்.

சட்டென்று எனக்கு நம்மூர் நினைவு வந்தது. 20 நிமிடத்தில் 20 கிலோ மீட்டரும் போகலாம். 2 கிலோ மீட்டரும் போகலாம்.

காரில் உட்கார்ந்ததும் காரை என் மனைவி ஆச்சரியத்ததுடன் பார்த்தாள். இடது புறத்தில் ஓட்டுநர் இருக்கை இருப்பதைப் பார்த்து இரசித்தோம்.

வாகனங்கள் அனைத்துமே தானியங்கி கீர்கள் கொண்டுள்ளன. அதனால், ஓட்டுபவர்களக்குப் பயணம் எளிதாக அமைகிறது

இங்கு வருபவர்களுக்குக் கார் ஓட்டத் தெரிந்திருக்க வேண்டும். இந்தியாவில் லைசென்ஸ் பெற்று கார் ஓட்டியிருப்பினும் இங்கு வந்த பின் இந்த நாட்டில் கார் ஓட்ட லைசென்ஸ் பெற வேண்டும்.

கார் ஓட்டுவதற்கான அனைத்து விவரங்களும் அடங்கிய ஒரு புத்தகத்தை லைசென்ஸ் பெறும் அலுவலகத்தில் இலவசமாகப் பெற்றுக் கொள்ளலாம்.

முதலில் ஒரு எழுத்துத் தேர்வு எழுதி அதில் தேர்ச்சி பெற வேண்டும். தேவையானால் கார் ஓட்டக் கற்றுத் தருபவர்களிடம் பயிற்சி எடுத்து ஓட்டிக் காண்பித்து லைசென்ஸ் பெற வேண்டும். இங்கு நம் நாட்டிலுள்ள நடைமுறையை விட மிகவும் எளிதில் வாங்கிவிடலாம்.

இங்குள்ளவர்கள் பெரும்பாலும் கார் ஓட்டிக் கொண்டே எதை யாவது சாப்பிடுவது, குளிர்ப்பானங்கள் அருந்துவது, குறிப்பாகப் பெண்கள் ஓட்டும்போது மேக்அப் செய்வது அவர்களது பிடித்தமான பழக்கமாக இருந்து வருகிறது.

அமெரிக்காவில் வாகனங்கள் கிலோ மீட்டர் இல்லாமல் மைல் வேகத்தில் ஓட்டப்படுகின்றன. நீண்ட நெடுஞ் சாலைகளில் மணிக்கு அறுபது மைல் வேகத்தில் (100 கி.மீ.)வாகனங்கள் ஓட்டப்படுகின்றன.

* மோட்டார் வாகனங்கள் இங்கு சாலையின் வலப்பக்கத்தில் செல்கின்றன.

* சாலைகளின் குறுக்கிலும் பக்கங்களிலும் இடப்பட்டுள்ள கோடுகளை அறிந்து அதன் விதிகளின்படி நடக்க வேண்டும்.

* சாலைகளைக் கடக்கும்போது 'நில்' என்று குறிப்பிடப்பட்டுள்ள இடங்களில் வண்டிகளைக் கட்டாயமாக நிறுத்தி இடப்புறம் வலப்புறம் மறுபடி இடப்புறம் பார்த்துக் கிளம்ப வேண்டும்.

* ஓவர் டேக் செல்ல அனுமதி இல்லாத இடங்களில் ஓவர் டேக் செய்யக் கூடாது.

* வேகத்தடைகள் குறித்த அறிவிப்புகளைக் கண்டிப்பாகப் பின்பற்ற வேண்டும்.

* இங்கு பாதசாரிகளுக்கு, சாலை உரிமைகள் அதிகம்.

* நகரங்களில் குறுக்குச்சாலைகளில் உள்ள 'சிக்னல் லைட்' அறிவிப்பு படி தான் வாகனங்களை ஓட்ட வேண்டும்.

* வாகனங்களை மாறிச் செல்ல வேண்டிய இடத்தைத் தாண்டி விட்டால் வாகனத்தைப் பின் நோக்கி எடுக்கக் கூடாது. மேலே சென்று அடுத்த 'எக்சிட்' வழியாகச் சாலையின் பின்புறம் அடைந்து பயணத்தைத் தொடர வேண்டும்.

இங்கு, காரில் பயணிக்கும் போது குழந்தைகளைப் பெரியவர்கள் தங்கள் மடியில் உட்கார வைக்கக் கூடாது. அதே போல், சீட்டிலும் உட்கார வைக்கக் கூடாது. மீறினால் அபராதம்.

குழந்தைகளுக்கென்று தனியாக சகல வசதிகளுடன் உள்ள சீட்டில் தான் உட்கார வைக்க வேண்டும். குழந்தைகள் சீட் என்றழைக்கப் படும் இது காரின் பின்புறத்தில் தான் உள்ளன. முன்புறத்தில் கிடையாது.

சாலையில் ஆறு வழித்தடங்கள் உள்ளன. போகின்ற கார்கள் வலதுப்பக்கம் செல்கின்றன. வருகின்ற கார்கள் இடதுபக்கம் செல்கின்றன. போகின்ற கார்களுக்கு மூன்று வழித் தடங்களும் வருகின்ற கார் களுக்கு மூன்று வழித்தடங்களும் இருக்கின்றன.

இதைத் தவிர ஏழாவது தடம் ஒன்று நெடுஞ்சாலைப் பகுதி களில் காணப்படுகிறது. இதனை ஷொல்டர்ஸ் என்று அழைக்கிறார்கள்.

கீப் லெப்ட் என்பதற்குப் பதிலாக கீப் ரைட் என்று உள்ளது. சாலைகளில் சிக்னலுக்காக காத்திருக்க வேண்டாம். பார்க்கும் இடங்களில் எல்லாம் மேம்பாலங்கள். கார்கள் நின்று காத்திருந்து போக வேண்டிய அவசியம் இல்லை.

ஒரு நாள், நாங்கள் காரில் பயணித்துக் கொண்டிருந்தபடி நம்மூர் வழக்கப்படி அவசரமாக பாத்ரூம் போகக் காரை நிறுத்தச் சொன்னேன். முடியாது என்று சொல்லி விட்டனர். என் அவசரம் எனக்கு. ஆனால், சாலையில் ஒரு வாகனம் கூட எங்கேயும் நிறுத்தப் பட்டிருப்பதை நான் பார்க்கவே இல்லை.

பொதுவாக, நெடுஞ்சாலையின் ஓரம் இருக்கும் ஷோல்டர்ஸில் தான் காரை நிறுத்த வேண்டும். அவசரத்திற்கு காரை நிறுத்த வேண்டுமானால், இங்குதான் நிறுத்த வேண்டும். அங்கு சென்று எனது தேவையை முடித்துக் கொண்டேன்.

சரி! ஷோல்டர்ஸ் இல்லாத இடத்தில் என்ன செய்வீர்கள்? அதற்கும் வழி உண்டு என்ற பதில் கிடைத்தது. நெடுஞ்சாலைகளில் அருகருகே அறிவிப்புப் பலகைகள் காணப்படுகின்றன.

இவ்வளவு தூரத்தில் திருப்பம் இருக்கிறது என்று எழுதப் பட்டிருக்கிறது. அந்தத் திருப்பத்தில் சென்றால் அங்கு வாகனங்கள் நின்று செல்ல இடங்கள் இருக்கின்றன.

அமெரிக்காவில் வேலை பார்க்கும், பெரும்பாலோர் கார் வைத்திருக்கின்றனர். இது, அவர்களுக்கு அத்யாவசியத் தேவையாக உள்ளது.

**இங்குள்ளவர்கள் சாலை விதிகளைக் கண்டிப்பாக மதிக்கின்றனர். இங்கு, எவரும் தில்லுமுல்லெல்லாம் செய்ய முடியாது. அதனாலேயே இங்கு சட்டங்கள் மதிக்கப்படுகின்றன.**

**அதுமட்டுமல்ல ஒரு அடிப்படை மனித நேய உணர்வு இவர்களது வாழ்வியலில் ஊறிப்போனதாகப் பல செயல்பாடுகளில், சமூகக் கட்டமைப்பில் கண்கூடாகத் தெரிகிறது.**

உதாரணத்திற்கு, ஒவ்வொரு பார்க்கிங் இடத்திலும் உடல் ஊனமுற்றோருக்கு என்று இடம் ஒதுக்கப்படுகிறது. அதில், வேறு யாரேனும் வண்டியை நிறுத்தினால் 2000 டாலர் அபராதம் செலுத்த வேண்டும்.

அதனாலேயே, சட்டங்களைக் கண்ணியமாகக் காப்பாற்றுவது இங்கு, இயல்பாகவே நடப்பது அதிசயமாகவும், ஆச்சரியமாகவும் இருக்கிறது.

நம்மூரில் கார் ஓட்டுவது கடினம். அங்கு கார் ஓட்டுவது எளிது. கார்கள் அனைத்தும் ஒழுங்காகத் துல்லியமாக எந்த விதப் பாதிப்பும் இல்லாமல் செல்கின்ற காட்சிகள் ரம்மியமாக இருக்கின்றன.

அமெரிக்காவில், கார் வைத்திருப்பவர்கள் அனைவரும் டாஷ்போர்டில் சாலை வரைபடங்களை வைத்திருக்கிறார்கள்.

வரைபடங்கள் தான் அவர்களுக்கு வழிகாட்டி. நம்மூர் மாதிரி வழியில் இறங்கி வழி கேட்டுக் கொண்டு போவது என்பது அமெரிக்காவில் இயலாத காரியம்.

சாதாரணமாக, 100 கி. மீட்டருக்கு மேற்பட்ட வேகத்தில் காரோட்டித்தான் அங்குள்ளவர்களுக்கு பழக்கம். எனவே, எதிர் வண்டியை நிறுத்தி வழி கேட்கவே முடியாது. வரைபடங்கள் தான் பயணத்திற்குப் பக்கத் துணைவன்.

கார் ஓட்டும் அனைவரும் அமெரிக்க உள்ள மாநில வரைப் படத்தை வைத்திருக்கின்றனர். இதனால், அமெரிக்காவிற்குள் எந்த எல்லைக்கும் சென்று வரலாம்.

என் மகள் இயக்கும் காரில் Nissan Path Finder வழிகாட்டும் கணினி அமைப்புப் பொருத்தப்பட்டுள்ளது. 'சாட்டிலைட்'டுன் தொடர்பு கொண்டு இனிய பெண் குரலில் காரை வழி நடத்துகிறது.

நாம் போகும் இடத்தினைக் குறியீடு செய்து விட்டால் போதும் நம் வேலை முடிந்தது. அதுவே வழி நடத்துகிறது.

ஆயிரம் ஆயிரம் கார்கள் பெரும் பெரும் டிரக்குகள் எவ்வித ஒலியையும் எழுப்பாமல் தாங்கள் செல்லும் பாதையில் சாலை விதிக்கு உட்படும் வேகத்தில் செல்கின்றன.

எங்கு நோக்கினும் நம்மைப் பாதுகாக்கும் கவனிக்கும் கண்காணிப்புக் காமிரா'. யார் எந்தத் தவறைச் செய்ததாலும் தப்ப இயலாது. காரோட்டிகள் மூன்று முறை தவறு செய்தால் அவர்களின் ஓட்டுநர் உரிமம் பறிக்கப்படும்.

ஒரு நாள் பழைய கார்கள் விற்கும் கடைக்குச் சென்றோம். அங்கே கூட்டம் கூட்டமாகக் கார்கள் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தன.

அதில் கார்கள் விலையும் ஒட்டப்பட்டிருந்தது. எல்லாம் பழையகார்கள். பழைய என்றால் பல்லுப்போனகிழடுகள் அல்ல. விபத்தில் சிக்கி இன்சினை மாற்றி வைக்கப்பட்ட கார்கள் அங்கில்லை.

அமெரிக்காவிற்குப் புதிதாக வருகிறவர்கள் குறிப்பாக மாணவர்கள் இந்தக் கார்களை வாங்குகின்றனர். தவணை முறையில் கார் வாங்குகிறார்கள். தவணைகட்ட முடியாவிட்டால் உடனேகார்விற்பனைக்கு வந்துவிடும் .

அமெரிக்காவில் கார் ஓட்டக் கற்றுக் கொண்டால் வாழ்க்கையின் வண்ணமே வேறு-எண்பது தொண்ணூறு வயது தாத்தாக்கள் எல்லாம் அனாயாசமாக கார் ஓட்டுகிறார்கள். பாட்டிகள் லிப்ஸ்டிக் போட்டுக் கொள்கிறார்கள்.

ஒரு கார் இருந்தால் போதும் அமெரிக்கா முழுவதையும் குறைந்த செலவில் அழகாகச் சுற்றிப் பார்த்துவிடலாம். அதற்கேற்ற வாறு அமெரிக்காவில் கார்களுக்கும் பஞ்சமில்லை.

ஒவ்வொரு விமான நிலையத்திலும் கார்கள் வாடகைக்குக் கிடைக்கும். எடுத்துக் கொண்டு எங்கே வேண்டுமானாலும் போகலாம். எத்தனை நாள் வேண்டுமானாலும் உபயோகிக்கலாம். இறுதியாக, எதாவது ஒரு விமான நிலையத்தில் காரை விட்டுவிட்டுக் கணக்கை முடித்துக் கொள்ளலாம்.

அமெரிக்காவில் பெட்ரோல் விலை கொள்ளை மலிவு. ஒரு 'காலன்' (5லிட்டர் டாலர்தான்.) நாமே; பெட்ரோல் போட்டுக்கொண்டால் 10 சென்ட்' குறையும்.

அமெரிக்காவில் ஓட்டுநருக்குச் சம்பளம் அதிகமாகும். ஒரு மணிக்கு. 12 டாலர் (600) பெரும்பாலும் நம்மவர்கள் எல்லோரும் கார் ஓட்டுகிறார்கள்.



8

# சாலைகளின் ஒழுங்கும் சுத்தமும்

*** ஒரு அமெரிக்கன் உங்களை வந்து ஓரிரு நிமிடங்கள் வெளியில் சந்திக்கின்றான். நீங்களும் அவனும் நண்பர்களாகி விடுகிறீர்கள். அடுத்த நிமிடம், அவன் விருந்தினனாக உங்களைத் தன் வீட்டிற்கு அழைக்கின்றான். அங்கே, அவன் வாழ்க்கையின் இரகசியங்கள் முழுவதையும் உங்களிடம் சொல்லி விடுகிறான். இது, அமெரிக்க இனத்தின் குணம். நாம் மிக அதிகமாக அதைப் பாராட்டுகிறோம். அவர்களுடைய கனிவு பேச்சுக்களையெல்லாம் தாண்டியது. அவர்கள், என்னை எவ்வளவு கனிவாகவும் எவ்வளவு அற்புதமாகவும் நடத்தினார்கள் என்று சொல்லத் துவங்கினால் எனக்குப் பல ஆண்டுகள் ஆகும்.''**

–சுவாமி விவேகானந்தர்– ஞானதீபம் பாகம் 11– பக். 307

அமெரிக்காவில் அகன்ற சாலைகள் அழகான பாதைகள் நீண்ட நெடிய வழித்தடங்கள் பார்ப்பதற்கே அழகாகக் காட்சி தருகின்றன. தூய்மையும் சுத்தமும் நிறைந்த சாலைகளைக் காண்பதே அழகாகத் தெரிகிறது.

எங்கு பார்த்தாலும் சாலைகள். அவை அனைத்திலுமே ஆறு வழித்தடங்கள். அனைத்துச் சாலைகளுமே பளிச் சென்று வீட்டுத் தரையைப் போல் காட்சியளிக்கின்றன.

பனிக்காலங்களில் இங்கு சாலைகளைப் பராமரிப்பதில் சிக்கல்கள் ஏற்படுகின்றன. பனிக்காலங்களில் சாலைகள் முழுவதும் பனிக்கட்டிகள் இருப்பதைச் சாலைப் பராமரிப்புப் பிரிவினர் அப்புறப்படுத்துகின்றனர்.

சாலையில் பனிக் கட்டிகள் சேர்வதைத் தடுப்பதற்காக லாரிகள் மூலம் உப்புத்தூள்களைக் கொட்டி விடுகின்றனர்.

இதனால், ஏற்படும் குழிகளையும் உடனடியாகச் சரி செய்து விடுகிறார்கள். சிறிது நேரத்திலேயே பயணங்கள் தொடர்கின்றன.

சாலைகளில் ஆட்டோ அல்லது மோட்டார்ச் சைக்கிள் போன்ற வற்றை நான் பார்க்கவே இல்லை. கோடைக் காலங்களில் மட்டும் மோட்டார் சைக்கிள்கள் சிலவற்றைப் பார்த்தேன்.

சாலைகளில் நடப்பவர்களைப் பார்க்க முடியாது. கடைகள் இருக்கும் இடங்களில் தான் மனிதர்கள் நடமாட்டம் உள்ளது.

அமெரிக்காவில் சாலைகளைக் கடப்பது எளிது. யாராவது ஒருவர் சாலையைக் கடந்து கொண்டிருந்தால் கார்கள் நின்று விடும்.

கடக்கும் இடத்தில் ஒரு விளக்குத் தூண் நிற்கிறது. அதில், உள்ள பட்டனை அழுத்தினால் சிகப்பு விளக்கு எரியும். கார்கள் நின்றுவிடும்.

விளக்கு எரிந்தாலும் எரியாவிட்டாலும் கார்கள் நின்று சாலையைக் கடப்பவருக்கு வழிவிடும். **பாதசாரிகளுக்கு இங்கு அவ்வளவு மரியாதை தருகிறார்கள்.**

நம்மூரில் இருக்கும் கார் மெக்கானிக் ஷாப்பிற்கும் இங்குள்ள மெக்கானிக் ஷாப்பிற்கும் பெரிய வித்தியாசங்கள் உண்டு. ஒரு நாள் எங்கள் காரை கார் சர்வீஸ் சென்டருக்கு எடுத்துச் சென்றோம்.

உள்ளே சென்றதும் தூய ஆடையுடன் கம்யூட்டரில் பேசிக் கொண்டிருக்கும் ஆட்களைப் பார்த்தோம். அவர்களது புன்சிரிப்புடன் கலந்த வரவேற்பு மனதை நெகிழ வைத்தது.

காரில் உள்ள ரிப்பேர்களை கம்ப்யூட்டரில் பதிவு செய்தனர். காரை ஓட்டிப் பார்த்துவிட்டு, அதில், இருக்கும் ரிப்பேர்களைப் பட்டியலிட்டுக் காண்பிக்கிறார்கள். அதற்குரிய செலவுகளையும் சொல்லிவிடுகின்றனர்.

என் கேமரா கண்கள் சுற்றிலும் சுழன்றன. அந்தக் கட்டிடத்தில் உள்ள பல பொருள்கள் காருக்குத் தேவையானதை அலங்கரித்துக் காட்டிக் கொண்டிருந்தன. பலப்பல பொருள்களைப் பார்வையிட்ட தோடு சில பொருள்களை வாங்கவும் செய்தோம்.

பொழுது போக்கும் ஓய்வு அறையில் டி. வி. ஓடிக்கொண்டிருந்து. அங்கு போய் உட்கார்ந்தோம். என்ன ஆச்சரியம் டி.வி பார்த்துக் கொண்டே கொறிப்பதற்கு வேண்டிய தின்பண்டங்களை அடுக்கி வைத்திருக் கின்றனர். வேண்டுமானால், விலைக்கும் வாங்கிக் கொள்ளலாம்.

அது மட்டுமல்ல. ஓசியில் காபி அல்லது டீ சாப்பிட ஒரு பாத்திரத்தில் நீர் கொதித்துக் கொண்டே இருந்தது. வேண்டிய அளவு எடுத்துக் கொண்டு சர்க்கரை பால் காபி தூள் அல்லது டீத்தூள் போட்டுப் பருகலாம்.

நம்மூர் என்றால் இந்த இடத்தில் கூட்டமாக இருக்கும். எனக்கே வெட்கமாக இருந்தது. நான் மட்டும் தான் அச்சமயம் ஓசி டீ சாப்பிட்டுக் கொண்டிருந்தேன்.

வாடிக்கையாளர்களை வசப்படுத்துவது மட்டும் அவர்களது குறிக்கோள் அல்ல. சேவையும், தொண்டும் அதில் இருப்பது மகிழ்ச்சியான விஷயம்.

அரை மணி நேரத்தில் கார் ரெடியாகி விட்டது. அந்த இடை வெளியில் பொழுது போக்கும் நேரம் போனதே தெரியவில்லை.



# 9

# வீடுகளின் அமைப்பு

* *"அமெரிக்காவில் ஆசாரம் பற்றி ஆழ்ந்த உணர்வு உள்ளது. நீங்கள் பெண்களுக்கு எதிரில் உங்கள் உடலைக் கழுத்திலிருந்து பாதம் வரை மறைத்து நிற்க வேண்டும். நீங்கள், உடலில் இயற்கைக் கடன் களைப் பற்றிக் குறிப்பிட முடியாது. யாராவது மலங்கழிக்கும் இடத்திற்குச் செல்கிறார் என்பது ஒருவருக்கும் தெரியாது. ஒருவன் அவ்வளவு எச்சரிக்கையுடன் வாழ வேண்டும். கைக்குட்டையில் மூக்கை ஆயிரம் தடவைச் சிந்தலாம். அதில் தவறு ஒன்றுமில்லை. ஆனால் தும்முவது பெரிய அநாகரீகச் செயல். பெண்கள் சில வேலைகளில் மார்புக்கு மேலேயுள்ள பகுதியை வெளியே காட்டு வதில் கூச்சமுறுவதில்லை. கீழே வெட்டப்பட்ட அங்கியை அவர்கள் அணிவதை நீங்கள் பார்த்திருக்கலாம். ஆனால், வெறுங்காலுடன் நடப்பது நிர்வாணத்தை ஒத்த மோசம் என்கிறார்கள். நாம் எப்போதும் ஆன்மாவைக் கவனிப்பது போல, அவர்கள் உடலைப் பாதுகாக்கிறார்கள். உடலைத் தூய்மைப்படுத்துவதற்கும் அழகு படுத்துவதற்கும் முடிவே இல்லை. இதனைச் செய்யத் தவறியவனுக்குச் சமூகத்தில் இடமே இல்லை."*

**–சுவாமி விவேகானந்தர் – ஞானதீபம் பாகம் 16 – பக். 245.**

விமான நிலையத்திலிருந்து அழைத்து வந்த மகளின் கார் வீட்டை நெருங்கியது. காருக்குள்ளே இருந்து மாப்பிள்ளை சுவிட்சை அழுத்தினார். உடனே, வீட்டின் காரேஜ் கதவு தானாகவே திறந்து கொண்டது.

கார் உள்ளே சென்றதும் மற்றொரு சுவிட்சை அழுத்தக் கதவு தானாகவே மூடிக் கொண்டது. நம்மூரில் டி. வி. யைத்தான் ரிமோட் செய்வோம். இங்கு, வீட்டையே ரிமோட் வைத்திருக்கிறார்களே? திருட்டுப் பயம் நிச்சயம் இருக்காது என்று புத்தி சொல்லியது.

இங்குள்ள சீதோஷ்ண நிலைக்குத் தகுந்தவாறு அமெரிக்காவில் வீடுகள் அனைத்தும் மரத்தாலும் மரத்துண்டுகளாலும் மரப்பலகை களாலும் கட்டப்பட்டிருக்கின்றன.

வீடுகளின் சுவர்கள் மரங்களால் கட்டப்பட்டிருந்தாலும் அவற்றின் கீழே வலுவான கான்கீரிட் போட்டிருக்கிறார்கள். அந்தக் கான்கிரீட் மேல் உறுதியாக நிற்பதற்கு மரச்சட்டமும் பலகைகளும் பொருத்தப்படுவதற்கு ஏதுவாக இரும்பு மற்றும் கான்கிரீட் வசதிகள் செய்யப்பட்டுள்ளன.

படுக்கை அறை -டி வி. அறை எல்லாமே மர வீடுகளாதலால் இரவு நேரங்களில் சில விநோதச் சப்தங்கள் கேட்கும். பயப்படாதீர்கள். மரப்பலகைகள் சோம்பல் முறிக்கும் சத்தம் தான்.

இங்குள்ள விதிகளின் படி 6000 சதுர அடிகள் நிலப்பரப்பில் 2000 சதுர அடிகளில் வீடுகள் அமைந்துள்ளன. மீதி இடங்களில் புல் தரைகள் உள்ளன. பெரும்பாலான வீடுகளில் நிலப்பரப்பிற்குக் கீழ் பேஸ்மெண்டிற்குக் கீழ் ஒரு தளம் கான்கிரீட்டால் அமைக்கப்பட்டுள்ளது.

இந்த பேஸ்மெண்ட் தளத்தைப் பொருள்களை வைப்பதற்குப் பயன்படுத்துகிறார்கள். அல்லது இன்டோர்கேம் விளையாடப் பயன் படுத்திக் கொள்கிறார்கள்.

அமெரிக்காவில் சில பகுதிகளில், சில சமயங்களில் பேய்க்காற்று அடிப்பது வழக்கம். அப்போது, வீடுகள் தரைமட்டமாகிகிடும். அப்போ தெல்லாம், இந்த நிலத்தடி நிலையம் அபயம் அளிக்கும் பகுதியாக, பாதுகாப்பாக இருக்கிறது. இங்கு, போதுமான இன்ஸ்யூரன்ஸ் செய்வதால் வீடுகளுக்கு பாதுகாப்பும் உள்ளது.

இங்கு வாடகை வீடுகள் அதாவது அபார்ட்மெண்டுகள் சுமார் 40 முதல் 80 வீடுகள் அடங்கியதாகப் பல பிளாக்குகள் உள்ளன.

அதில் டென்னிஸ் கோர்ட்- நீச்சல் குளம்- குழந்தைகள் விளையாடும் இடங்கள்- பூங்கா போன்றவை இருக்கும்.

கார்கள் ஒவ்வொரு வீட்டிலும் பொதுவான இடங்களில் ஒதுக்கபட்டிருக்கும்.

ஒவ்வொரு வீட்டிற்கும் தபால்பெட்டி சாவி வசதியுடன் ஒரு பொது இடத்தில் வைக்கபட்டிருக்கும்.

துணிகள் துவைக்கவும் உலர்த்தவும் போதுமான மிசின்கள் ஒவ்வொரு ப்ளாக்கிலும் இருக்கும்.

பனி பெய்த நாட்களில் கார்களின் மேலும் கார் நிறுத்தும் இடங் களிலும் பனி ஏராளமாகத் தங்கி விடும். சமயங்களில் பல அடி உயரம் வரை பனி இருக்கும். நகராட்சி சிப்பந்திகள் வந்து கிளியர் செய்வார்கள்.

வீட்டின் பக்கங்களில் வளர்க்கப்படும் ஒரு தனிரகப் புல் பார்க்கப் பசுமையாக இருக்கும். கண்ணுக்கும் மனசுக்கும் ரம்யமாக இருக்கும்.

பிளாட்டுகளில் லிப்ட் வசதி உண்டு. நாய்கள் பயணிக்கத் தனி லிப்ட் உண்டு.

இங்குள்ள வீடுகள் அனைத்துப் பகுதிகளிலும் கார்பெட் போடப்பட்டிருக்கிறது. மாடிப்படிகளில் கூட கார்ப்பெட் உண்டு. அதனால், நடப்பதற்குச் சுத்தமாகவும் அழகாகவும் இருக்கிறது.

குளிர்க் காலத்திற்கு இதமாக இருக்கிறது. கார்ப்பெட் இருப்பதால் நம்மூர் போல் பாத்ருமில் தண்ணீர் ஊற்றுவதும் கண்ட இடங்களில் துணி துவைப்பதும் ஏன் கக்கூசில் கூட.... அங்கு கூடத் தண்ணீர் ஊற்ற முடியாது.

இங்குள்ள கட்டடங்கள் அனைத்தும் உறுதியாகவும் கண்கவர் தோற்றமளிப்பதாகவும் இருக்கின்றன.



# 10

# எடினாவில் எனது நாட்கள்

*  **அமெரிக்கா ஒரு மகத்தான நாடு. ஏழைகளுக்கும் பெண்களுக்கும் இது சொர்க்கப் பூமி. இந்த அமெரிக்க நாட்டில் பெரும்பாலும் ஏழை என்று யாரும் இல்லை. பிறகு, உலகின் மற்ற எந்தப் பகுதியிலும் இங்கு இருப்பதுபோல் பெண்கள் அவ்வளவு சுதந்திரமும் கல்வியும் பண்பும் பெற்றவர்களாக இல்லை. இந்த நாட்டின் சமுதாயத்தில் பெண்களே அனைத்துமாக இருக்கிறார்கள்.**

–சுவாமி விவேகானந்தர் –ஞானதீபம் பாகம் 13 – பக. 245.

மின்னிசோட்டா மாநிலத்தில் உள்ள எடினாவில்தான்; எங்களது ஆறுமாதம் வாசஸ்தலம். இந்த மாநிலத்தில் 100 முதல் 1500 ஏரிகள் இருக்கின்றன. இதன் மேற்கு எல்லையில், ரெட்ரிவர் மின்னஸோட்டா ஆறுகள். வடக்கில், ரெட் ஏரியில் உற்பத்தியாகும் மிஸிஸிபி நதி மாநிலத்தில் தென் கிழக்காகப் பாய்ந்து செல்கிறது.

இம்மாநிலத்தின் தெற்கு மேற்குப் பகுதிகள் சமநிலங்கள். விவசாயத் தொழில்செழித்துள்ள பூமி.

வனத்தில் மரம் அறுத்தல் உலோகச் சுரங்கங்கள் தொழிற் சாலைகள் ஆகியவை முக்கியத்தொழில்கள்.

ஸீபீரியர் ஏரியின் வட பகுதியிலுள்ள ராயல் தீவு தேசிய ஆரணியம். அங்கே பல விலங்குகளையும் ஓநாய்களையும் பார்க்கலாம்.

சென்ற நூற்றாண்டில் சகட்டுமேனிக்கு வடக்குக் காடுகளிலுள்ள பைன் மரங்களை அறுத்துத் தள்ளி விட்டார்கள். இப்பொழுது,

விழித்துக் கொண்டு அந்தக் காட்டுப் பகுதிகளைத் தேசிய வனங் களாக்கி பைன் மரக்காடுகளுக்கு மீண்டும் புத்துயிர் தந்திருக்கிறார்கள்.

## மின்னியாபோலீஸ்

மின்னிஸோட்டா மாநிலத்தின் முக்கிய இரட்டை நகரங்கள் மின்னயாபோலீஸ்- செயின்ட் பால் ஆகும்.

பசிபிக் கரையிலுள்ள வாஷிங்டன் மாநிலத்திலிருந்து சிகாகோ செல்லும் ரயில் பாதை இந்த இரட்டை நகரங்களின் வழியே செல்கிறது.

இந்த இரட்டை நகரங்கள், மிஸிஸிபி நதிக்கரையில் அமைந்துள்ளன. நதியின் கிழக்குக் கரையில் வடமேற்குப் பகுதிக்குப் பாதுகாப்பாக ஸ்னெல்லிங் கோட்டை இங்கே கட்டப்பட்டுள்ளது.

மின்னியாபோலிஸ் நகரம், நதியின் மேற்குக் கரையில் விரிந்துள்ளது. வடக்கு மாநிலங்கள் 40 வடக்கு அட்சரேகைக்கு மேலே இருப்பதால் குளிர்க் காலத்தில் குளிர் அதிகம். வானளாவும் கட்டிடங் களை இணைக்கும் மூடிய நடைபாதைகள் மேல்நிலைகளில் அமைக்கப்பட்டுள்ளன.

குளிர் காலங்களில் தெருக்கள் வெறிச்சோடி இருந்தாலும் மக்கள் இந்த நடைபாதை வழியாக வெவ்வெறு இடங்களுக்குப் போய்வந்து கொண்டிருப்பார்கள். இந்த நடைபாதைகளுக்கு வான்வழி என்ற பெயர்.

செயின்ட்பால் நகரம் அமைதி நிறைந்த அழகான நகர். வடமேற்கே ஒரு குன்றில் தலைநகர அரசுக் கட்டிடங்கள் இன்னொரு குன்றில் செயின்ட்பால் கதீட்ரல் கம்பீரமாக எழுந்து நிற்கிறது.

இம்மாநிலத்தின் வடக்கே சிப்பேவா ஆரணியம் உள்ளது. இது, இப்பொழுது பாதுகாக்கப்பட்டுக் காடுகளையும் நீர்ப்பிடிப்புப் பகுதி களையும் அருகிக் கொண்டிருந்து வெண்கழுத்துப் பருந்துகளையும் (அமெரிக்க தேசியச் சின்னம்) தக்கவைத்துக் கொண்டிருக்கிறது.

இதன் வடமேற்கே **மிஸிஸிபி நதியின் உற்பத்தி இடத்தை** தரிசிக்கலாம். மாநிலத்தின் வடகிழக்கில் ஸீபீர்யர் ஏரிகரையில் அமைந்த நகரம் **டுலுத்.** இது, நாட்டின் சுறுசுறுப்பான துறைமுகங் களில் ஒன்று.

இரும்புக் கனிகள் நிறைந்த இரும்பு மலைகளும் இந்தப் பகுதியில் இருக்கின்றன. டுலுத்திலிருந்து ஸீபீரியர் ஏரிக்கரை வழியே

வடகிழக்கே சென்றால் கிராண்ட் மராய்ஸ் என்ற ஊர் இருக்கிறது. ஸீபீரியர் ஏரி ஆரணியம், ராயேல் தீவு ஆரணியம் எல்லாம் சுற்றிப் பார்க்கத் தகுந்த இடம்.

எடினா-அழகான நகரம். ஒரு மாநிலத்திற்குரிய அனைத்து வசதி களும் உண்டு. நம்மூர்க் காஷ்மீர் போல் இருக்கும்.

எடினாவில் தான் ஜூன் 18ம் நாள் எங்களது 29 ஆவது ஆண்டு திருமண நாளை கொண்டாடினோம்.

எனது 61 ஆவது பிறந்த நாளையும் இங்கு கொண்டாடினோம். சென்ற வருடம் திருக்கடையூரில் கொண்டாடியதை இங்குள்ள பெருமாள்....கோயிலில் கொண்டாடினோம்.

நாங்கள் கொண்டு சென்ற கிரேண்டு ஸ்வீட்ஸ், முறுக்கு, மிக்சர், தட்டை, காஞ்கதலி, மில்க் பர்பி, லட்டு, அதிரசம் முதலியவற்றை விரும்பிச் சாப்பிட்டனர்.

அமெரிக்காவில், காலையிலும் மாலையிலும் வாக்கிங் போகலாம். ஆனால், கொஞ்சம் எச்சரிக்கையுடன் செல்லுங்கள்.

இங்கு சாலையோரமாக யாருமே நடப்பதில்லை. கார்கள் அனைத்துமே 60 மைல் வேகத்துக்கு மேல் வருவதால் சாலைகளைக் குறுக்கிடுவதில் மிகுந்த கவனம் கொள்ளுங்கள். பாதுகாப்பாகப் பையில் முகவரியை வைத்துக் கொள்வது நல்லது.

பைக்குள் பத்து டாலராவது பராமரித்துக் கொள்வது நலம். சமயத்தில் காசில்லை என்றால் மண்டையை உடைத்து விடுவார்கள். ஜாக்கிரதை.

இங்கு, முதல் தடவை செல்பவர்கள் தனியாகப் போவதைத் தவிர்க்கலாம். பூங்கா நூலகம், அஞ்சலகம் என்று வெளியே சென்றால் நன்றாகப் போர்த்திக் கொண்டு செல்லனும். திடீர் என்று மழை பெய்யும் அல்லது குளிர் எடுக்கும்.

இந்திய வீடுகள் அனைத்திலும் வாஷிங்மெசின்- டிஷ்வாஷர்- மைக்ரோவேவ்- வாக்கும் க்ளீனர் நான்கும் கண்டிப்பாக இருக்கும். இவைகளை இயக்குவது எப்படி என்று தெரிந்தே ஆகவேண்டும்.

சமையலுக்குக் கேஸ் வீட்டிலேயே இருக்கும். திறந்தாலே எரியும்.

துணியை வாசிங் மெசினில் போட்டு எடுத்தல் (அது இருக்கும் இடத்திற்குச் சென்று வாசிங்மெசினில் போட்டு எடுத்தல்) பாத்திரம்

கழுவுதல் - சமைத்தல் -ஷாப்பிங் செல்லுதல்- பிறந்த பேத்திக் குழந்தையைப் பராமரித்தல் என்று நானும் மனைவியும் வேலை களைப் பகிர்ந்து கொண்டோம்.

அமெரிக்காவில் இருந்த ஆறு மாதங்களும் எங்களுக்கு எடினா தான் சொர்க்கப்பூமி.

வாக்கிங் போகும் போது கூர்ந்து கவனிப்பேன். இங்கு பத்துப் பேரில் எட்டு பேர் இந்தியனாக இருக்கிறார்கள். தமிழர்களும் அதிக அளவில் வசிக்கிறார்கள்.

அமெரிக்காவில் நம் தமிழ் மக்கள் நம் கலாச்சாரத்துடனே வாழ்கின்றனர். எங்காவது ஓர் இடத்தில் புடவை கட்டிக் கொண்டு உலவும் நம் பெண்களைப் பார்க்க முடிகிறது.

இந்திய கலாச்சாரங்களுக்கு அமெரிக்க நகரங்களில் பஞ்சமே இல்லை. நம்மூர் அத்தனை சங்கீத வித்வான்களும், நாடகக் குழுவினர் களும் இங்கு வந்து கச்சேரி செய்கின்றனர்.

இன்னொரு மகிழ்ச்சியான செய்தி இந்திய தமிழர்-மலேசிய தமிழர்-இலங்கைத் தமிழர்-தென் ஆப்பிரிக்க தமிழர் என அனைவரும் அமெரிக்காவில் சகோதர உணர்வுடன் நன்றாக இருக்கின்றனர்.

ஒவ்வொரு முக்கிய நகரங்களிலும் தமிழர் மன்றங்கள் உள்ளன. ஸ்டான்போர்டு பல்கலைக் கழகத்தைச் சுற்றியுள்ள சுமார் 150 மைல் பகுதியில் உள்ளவர்கள் நடத்தும் தமிழ் மன்றத்தின் சார்பில் 300 தமிழ்க் குடும்பங்கள் இணைந்த விழாவினை அவ்வப்போது நடத்தி வருகின்றனர்.

இதனால், நம் கலாச்சாரம் வளர்ந்துள்ளது என்பதைத் தெரிந்து கொண்டேன். குழந்தைகள் அமெரிக்க கலாச்சாரத்தில் வளர்ந்தாலும் தாய்மொழித் திரைப்படங்களைப் பார்க்க எவ்வளவு ஆர்வமாய் வருகிறார்கள் தெரியுமா?

நம்மூருக்கும், இங்கும் சிலவித்தியாசங்களை நான் கண்டதை, பழகியதை உங்களுடன் பகிர்ந்து கொள்ள ஆசைப்படுகிறேன்.

உண்மையான ஜனநாயகம் - சமதர்மம் இவைகளை இங்கே என்னால் காண முடிந்தது.

| | அமெரிக்கா | இந்தியா |
|---|---|---|
| 1. தூரத்தைக் கணக்கிடுவதில் | மைல் | கிலோ மீட்டர் |
| 2. கடைப்பிடிக்கும் எடைமுறை | பவுண்டு முறை | மெட்ரிக்முறை |
| 3. மின்சாரம் | 120 வொல்டேஜ் | 230 வொல்டேஜ் |
| 4. நாம் விரும்புவது | பேஸ்பால் | கிரிக்கெட் |
| 5. தேதி, மாதங்கள் | நாள், மாதம், வருடம் | வருடம், மாதம், நாள் |
| 6. சாலை விதிகளில் | வலது பக்கம் | இடது பக்கம் |
| 7. வாகனங்களில் ஓட்டுநர் இருக்கை | இடதுபக்கம் | வலது பக்கம் |

இங்கு 'சார்' என்று அழைக்கும் வழக்கமே கிடையாது. பெயர் சொல்லி அழைக்கும் முறைதான் உள்ளது. சுருங்கச் சொன்னால் பிரிட்டிஷாரின் அனைத்து முறைகளுக்கும் நேர் எதிராக உள்ளனர் அமெரிக்கர்கள். நாமே பலவற்றில் பிரிட்டிஷ் முறையைத் தான் இன்று வரை பின்பற்றி வருகிறோம்.

இப்படி எதை எடுத்துக் கொண்டாலும் அனைத்திலும் அவர்கள் வேறுபடுகிறார்கள். முடிவுகளை உடனுக்குடன் எடுக்கின்றனர். அனைத்துப் பிரச்சனைகளிலும் கம்ப்யூட்டர் முறையைப் பயன்படுத்தி உடனுக்குடன் முடிவு எடுக்கிறார்கள்.

அமெரிக்காவில் வசித்த ஆறு மாதங்கள் சுற்றுலா சென்ற நாட்களைத் தவிர எஞ்சிய நாட்களை இங்குதான் செலவிட்டோம்.


அமெரிக்க மக்கள் உண்மை பேசுகிறார்கள். ஒளிவு மறைவின்றிப் பேசும் மக்களாக இருக்கிறார்கள். பொது இடத்தில் கண்ணியத்துடனும் சுய கட்டுப்பாட்டுடனும் ஒழுக்கத்துடனும் நடந்து கொள்கிறார்கள்.

பொது இடத்தைக் கூடத் தூய்மையாக வைத்துக் கொள்கிறார்கள். மற்றவர்களை மதிக்கிறார்கள். நடந்து செல்லும் போது எதிர்ப்படும் போது ஒரு ஹாய்- ஒரு புன்சிரிப்பு. மற்றவர்கள் உணர்வுகளுக்கு முக்கியத்துவம் தருகிறார்கள்.

தனி மனிதச் சுதந்திரத்திற்கு மதிப்பளிக்கிறார்கள். தனி மனிதச் சுதந்திரத்திற்கு முக்கியத்துவம் தருகிறார்கள். திறமையின் அடிப்படையிலேயே ஒருவனால் இங்கு முன்னேற முடிகிறது. போட்டி பொறாமை கிடையாது.

திறமையும், உழைப்பும் இருந்தால் இங்கு வேகமாக முன்னேறலாம். இந்திய இளைஞர்கள் இங்குள்ள கம்ப்யூட்டர் சாப்ட்வேர் துறையிலும், மருத்துவத்துறையிலும் நம்ப முடியாத அளவுக்கு முன்னேறியுள்ளனர். இது, பெருமைக்குரிய விஷயமாகும்.

ஒருநாள், நீங்களும் அமெரிக்காச் செல்லும் வாய்ப்புப் பெறலாம். அப்போது இப்புத்தகத்தில் கூறியதை நீங்கள் உண்மை என உணர்வீர்கள். 'Seeing is believing' என்பது ஒரு சீனப்பழமொழி.



மிஸிஸிபி நதியின் உற்பத்தி இடம்
[பேத்தி ஆகான்ஸாவுடன்]



11

# நான் புரிந்துகொண்ட அமெரிக்கா

* ''பிறநாடுகளில், புறக்கணிக்கப்பட்டு வறுமையில் வாடிய மக்களுக்கு அமெரிக்கா புகலிடம் அளித்தது. அவர்கள் தான், இன்று அமெரிக்காவின் முதுகெலும்பாக விளங்குகிறார்கள். பணக்காரர்கள் உங்கள் பேச்சைக் கேட்கிறார்களா, உங்களைப் புரிந்து கொள்கிறார்களா, உங்களைப் புகழ்கிறார்களா அல்லது குறை கூறுகிறார்களா என்பது பற்றிக் கவலை இல்லை. அவர்கள் நாட்டை அலங்கரிக்கும் வெறும் ஆபரணங்கள்! ஆனால், கோடிக்கணக்கான ஏழை மக்கள்தாம் நாட்டின் உயிர்நாடி. எண்ணிக்கையைப் பற்றிக் கவலை இல்லை. செல்வச் செழிப்பு அல்லது வறுமை பற்றியும் கவலை இல்லை. விரல்விட்டு எண்ணக் கூடிய சிலர் தங்கள் சொல், செயல் சிந்தனை ஆகியவற்றில் ஒன்றுபட்டு நின்றால் உலகையே ஆட்டி வைக்க முடியும். இந்த உறுதிப்பாட்டிலிருந்து ஒருபோதும் தளர்ச்சி அடைய வேண்டாம். எதிர்ப்பு அதிகமாக, அதிகமாக நன்மையே விளைகிறது. அணை கட்டித் தடுக்கப்படாத ஆறு வேகம் பெறுமா? ஒரு புதிய நல் விஷயம் ஆரம்பத்தில் எதிர்ப்புகளைச் சந்திக்கும். எதிர்ப்பு வெற்றிக்கு வழி வகுக்கிறது. எதிர்ப்பு இல்லாத இடத்தில் வெற்றியும் இல்லை.''

–சுவாமி விவேகானந்தர் – ஞானதீபம் பாகம் 12 – பக். 117

அமெரிக்க வரலாறு மிகவும் சிறியது. 250 ஆண்டு காலச் சரித்திரமே அதற்குண்டு என்று வரலாற்றில் பட்டம் பெற்ற என் துணைவியார் அடிக்கடி சொல்வார்கள்.

இங்கிலாந்து மன்னனின் கொடுங்கோலாட்சியிலிருந்த தப்பிய, மத சுதந்திரத்தை நாடிய, புதிய கரைகளைத் தேடிய அமெரிக்காவின் கிழக்குப் பகுதியில் காலடி வைத்த **'பில்க்ரிம் பாதர்ஸ்'** பற்றின கதைகள் நாமறிந்ததே.

**'அமெரிக்க வெஸ்பூச்சி'** என்ற இத்தாலிய மாலுமி இருந்தார். இவர், அமெரிக்காவில் ஐரோப்பிய குடியேற்றத்துக்கு மிகவும் உதவினார் . நன்றிக் கடனுக்காக இவரது பெயரை அமெரிக்க ஐக்கிய நாடுகளுக்கு சூட்டினார்கள்.

1522ஆம் ஆண்டு அமெரிக்காவின் மேற்குப் புறத்தை முழுமையாகப் பயன்படுத்திக் கொண்ட அமெரிக்கா வெஸ்புசி என்னும் இத்தாலியனின் நினைவாக அமெரிக்கா என்று பெயர் விளங்கலாயிற்று.

**'பில்க்ரிம் பாதர்ஸ்' துணிச்சலும் புதிய மண்ணில் அவர்கள் விடாமுயற்சியால் முன்னேறக் காலூன்றியதும் தான் அமெரிக்காவின் சரித்திரம்.**

மண்ணைப் பொன்னாக்க அவர்கள் செய்த சாகசங்கள் சரித்திரங் களாயின. ஆப்பிரிக்க கண்டத்திலிருந்து கறுப்பர்களை அடிமைகளாக்கி அழைத்து வந்த அவலம் இன்றைய அமெரிக்கா மறக்க விரும்பும் சரித்திரம்.

ஆனால், அமெரிக்கர்கள் அவர்கள் அறியாமலேயே மறந்து விட்ட சரித்திரம் ஒன்று உண்டென்றால், அது அமெரிக்க இந்தியர்களைப் பற்றியது.

அமெரிக்க பசிபிக் கரையைத் தொட்ட கொலம்பஸ், அது இந்தியா என்று நினைத்ததால் மேற்குப் பகுதியில் அவர் கண்ட மனிதர்களை இந்தியர்கள் என்று அழைக்க, இவர்கள் இன்றும் இந்தியர்கள் என்று சொல்லப்படுகிறார்கள். இவர்கள், அப்போதே சிறப்பான கலாச்சாரப் பாரம்பரியப் பின்னணி கொண்டிருந்தவர்கள்.

வெள்ளையர்கள் முன்னேற, முன்னேற இவர்கள் பின்தங்கிப் போனார்கள். அதிக எண்ணிக்கையோ, அரசியல் பலமோ இல்லாத இவர்கள் எதிர்ப்பைக் காண்பிக்கும் நிலையில் இல்லை. சமீபக் காலமாக இவர்களது கலாச்சாரச் சிறப்பையும் பழமையையம் கவனத்திற்குக் கொண்டு வரும் முயற்சிகள் நடந்து வருவது பாராட்டுக் குரியதாகும்.

அமெரிக்கா ஒரு தனிக் கண்டம். உலகிலுள்ள ஐந்து கண்டங் களில் ஒன்று. அது, தென் அமெரிக்கா-வட அமெரிக்கா-மேற்கு

(இலத்தீன்) அமெரிக்கா என்று பிரிக்கப்பட்டது. அமெரிக்காதான் இப்போது, ஒரே நாடாக 'அமெரிக்கா' (அமெரிக்க ஐக்கிய நாடுகள்) என்ற பெயருடன் விளங்குகிறது.

புதிதாகக் கண்டுபிடிக்கப்பட்ட அமெரிக்க பகுதிகளில் ஆங்கிலேயர், பிரெஞ்சுக்காரர், டச்சுக்காரர், ஸ்பானியர் என ஐரோப்பியர் பலரும் குடியேறினர்.

ஒவ்வொரு குடியேற்றப் பகுதியும் ஒரு பெயருடன் அழைக்கப் பட்டது. ஆலபாமா-இல்லியனாஸ்-மிசௌரி-டெவர்-பிளமத் என்ற ஒவ்வொரு குடியேற்றப் பகுதிக்கும் ஒரு பெயர் சூட்டப்பட்டது.

அந்ததந்தப் பகுதிகளுக்கு தனி ஆளுநர் ஆட்சி மன்றம் இருந்தன. ஆனாலும், அப்பகுதிகள் இங்கிலாந்து, பிரான்சு என்று பல நாடுகளின் கட்டுப்பாட்டில் இருந்துவந்தன.

காலப்போக்கில் குடியேற்றப் பகுதிகள் ஒன்று சேர்ந்தன. 1776ஆம் ஆண்டு ஜுலை 4 ஆம் நாள் தான் அமெரிக்கா விடுதலைப் பெற்ற நாள் என்று அறிவிக்கப் பட்டது. அப்போதுதான் 'அமெரிக்கா' என்று(அமெரிக்க ஐக்கிய நாடுகள்) பெயர் சூட்டப்பட்டது.

அமெரிக்கர் ஒருவரைப் பார்த்ததும் நாம் 'அவர் அமெரிக்கர்' என்று சொல்லவிட முடியாது. காரணம், அவர்கள் இனம், மொழி, சமயம், பண்பாட்டில் வேறுபட்டவர்கள். அவர்கள், அத்தனைப் பேரும் பல நாடுகளிலிருந்து அங்கே குடியேறியவர்கள்.

ஆனால், அத்தனை அமெரிக்கரும் 'நாம் அமெரிக்கர். நமது நாடு அமெரிக்கா' என்ற ஒரே உணர்வும் நாட்டுப்பற்றும் உடையவர்கள். இந்த உணர்வினால்தான் இன்றைய உலகில் அமெரிக்கர்கள் தலை நிமிர்ந்து உலகில் நம்பர் ஒன்றாகத் திகழ்கிறார்கள்.

உலக வரைபடத்தில், அமெரிக்க எங்கிருக்கிறது? அட்லாண்டிக் கடலுக்கும், பசிபிக் கடலுக்கும் இடையில் அமெரிக்கா இருக்கிறது.

கிழக்கு மேற்காக 4500 கி. மீ. நீளம், வடக்கு தெற்காக 2500 கி.மீ. நீளம். அமெரிக்காவின் 50வது மாநிலமான அவாய் தீவு வட அமெரிக்கா விலிருந்து 3200 கி.மீ தூரத்தில் இருக்கிறது.

அமெரிக்காவில் பெரும்பாலோனோர் ஆங்கிலம் பேசக் கூடியவர்கள். அவர்கள் பேசும் ஆங்கிலத்தை 'அமெரிக்க ஆங்கிலம்'

என்பார்கள். நமது ஆங்கில உச்சரிப்புக்கும் அவர்கள் உச்சரிப்புக்கும் நிறைய வித்தியாசம் உண்டு. சென்னையில், அமெரிக்க ஆங்கிலம் பேச பயிற்சி வகுப்புகள் கூட உண்டு.


ஆனால், அமெரிக்காவில் ஆங்கிலம் தேசிய மொழி அல்ல. அங்கே 'நாட்டு மொழி' என்று எதுவும் கிடையாது. அதே போன்று, அங்கு தேசிய மதமும் கிடையாது. சமய விடுமுறையும் கிடையாது.

அதை விட வியப்பு. அங்கு கிறிஸ்துமசுக்குக் கூட விடுமுறை கிடையாது. இதே நம்மூரில் கிறிஸ்துமஸ் விடுமுறை உண்டு. உழைப்பாளி களுக்கு விடுப்பு வேண்டுமா? என்ன?

அமெரிக்காவை ஆறு மண்டலமாகப் பிரித்திருக்கிறார்கள். அங்கு சோலைவனம் முதல் பாலைவனம் வரை இருக்கின்றன. அலை கடல் முதல் மலை வரை உள்ளன.

ஒவ்வொரு மண்டலத்திலும் கலை, பண்பாடு, நிலம், நீர், பொருளாதாரம் வேறுபடும். நேரமும் வேறுபடும்.

* நியூயார்க்-சிகாகோ ஒரு மணி நேர வேறுபாடு.
* நியூயார்க்-லாஸ் ஏஞ்சல்ஸ் 3 மணி நேர வேறுபாடு.
* ஓர்லாண்டோவிலிருந்து மாலை 5.00 மணிக்குக் கிளம்பும் விமானம் 5 மணி நேரம் பறந்து லாஸ் ஏஞ்சல்ஸ் போய்ச் சேருகிறது. அப்போது, லாஸ் ஏஞ்சல்ஸ் நேரம் மாலை 6. 30 மணி.



**அமெரிக்கப் போலீஸ் நண்பருடன்**



# 12

# பாரம்பரியத்தின் பெருமையும் மதிப்பும்

* *"அமெரிக்காவில் கோடை காலத்தில் எல்லோரும் கடற்கரைக்குச் சென்று விடுகின்றனர். நானும், அவ்வாறே சென்று வந்தேன். இந்த நாட்டு மக்கள் படகு செலுத்துவதிலும் கப்பல் பந்தயத்திலும் பைத்தியமாக உள்ளார்கள். 'யாட்' எனப்படுவது லேசான படகு. இளைஞர்களானாலும் வயது முதிர்ந்தவர்களானாலும் பண வசதி உள்ள ஒவ்வொருவரும் சொந்தமாக 'யாட்' வைத்துள்ளனர். ஒவ்வொரு நாளும் இதில் ஏறி இவர்கள் கடலுக்குள் சென்று விட்டு வீடு திரும்பியதும் உண்பார்கள். குடிப்பார்கள். நடனமாடுவார்கள். இசை இரவு பகலாக ஒலித்துக் கொண்டேயிருக்கும். பியானோவின் ஓசையால் வீட்டினுள் தங்கியிருப்பதே முடியாமல் போய் விடுகிறது."*

–சுவாமி விவேகானந்தர் – ஞானதீபம் பாகம் 13 –பக. 214

நவீன அமெரிக்காவுக்கு மிகத் தொன்மையான பாரம்பரியம் இல்லை என்றாலும் அவர்களது 250 ஆண்டு சரித்திரப் பாரம்பரியமே சுதந்திர உலகத்தின் உன்னத வரலாறு என்ற பெருமை எல்லா இடங்களிலும் தெளிவாகப் பறை சாற்றிக் கொண்டிருக்கிறது.

அமெரிக்காவை உருவாக்கிய நிர்மாணித்த அரசியல் சிற்பிகளின் பாரம்பரிய வீடு-நினைவகங்கள் மிகுந்த கவனத்துடன் நேர்த்தியுடன் பொக்கிஷமாகப் பாதுகாக்கப்பட்டு வருகின்றன.

வாஷிங்டனுக்கும் ஐம்பது மைல் தொலைவில் அமெரிக்காவின் முதல் அதிபர் ஜார்ஜ் வாஷிங்டன் 250 வயது கொண்ட பாரம்பரிய வீடும் அதைச் சுற்றிய 200 ஏக்கர் நிலமும் அப்படித்தான் மிக அருமையாகப் பாதுகாக்கப்படுகின்றன.

வாஷிங்டனின் மனைவி அலங்கரித்த விதத்திலிருந்து சற்றும் மாறுபடாமல் அதே வண்ண டிசைன் திரைச் சீலைகள் விரிப்புகள் புத்தம் புதியதாகச் செய்து வைக்கபட்டிருக்கின்றன.

பெரிய இடத்தில் சிறிய வீடாக காட்சியளித்தாலும் அதில் 14 அறைகள் உள்ளன. அடிமைகளின் வீடுகள், மாவறைக்கும் ரொட்டி செய்யும் அறை, சலவை அறை, சமையல் அறை என்று அந்தக் காலத்தில் மிக நேர்த்தியுடன் கட்டப்பட்டிருப்பது என்னை வியப்பில் ஆழ்த்தியது.

வாஷிங்டனுக்குத் தோட்டக் கலையில் தனிப்பட்ட ஆர்வம் இருந்ததாம். தன்னை ஒரு விவசாயி என்று சொல்வதில் பெருமைப் படுவாராம். வீட்டை ஒட்டிப் போட்டோமாக் நதி ஓடுவதும் மலர்த் தோட்டமும் மிக அழகாக இருக்கிறது.

இந்த மாபெரும் பொக்கிஷத்தை 1858 டில் ஒரு சந்ததி யிடமிருந்து 20000 டாலருக்கு வர்னன்லேடீஸ் அசோசியேசன் வாங்கியதாம். அன்றிருந்து இதை ஒரு மியூசியம் போல் ஒரு பெண்கள் அமைப்புப் பராமரித்து வருகிறது.

இதனைப் பார்க்க விசிட்டர்கள் கூட்டம் கூட்டமாக வந்த வண்ணம் இருக்கிறார்கள். அவர்கள் வரிசையாக நிற்கும் அழகு பள்ளிச் சிறுவர்கள் குறிப்பெடுத்துக் கொள்ளும் அழகு பார்த்துக் கொண்டே இருக்கலாம்.



# 13

# மண்ணின் மைந்தர்கள்

***நான் மிக உயரமானவன்***
***நான் மிக வளர்ந்தவன்***
***நான் மிகத் தெளிந்தவன்***
***நான் பல்வேறு அனுபவங்களைப் பட்டவன்***

**– வால்ட் விட்மன் – அமெரிக்க கவிஞர்.**

அமெரிக்காவைப் போலக் கலப்படக் கலாச்சாரக் கலவை கொண்ட தேசத்தில், அந்த நாட்டின் மண்ணின் மைந்தர்களைப் பற்றி ஓரளவாவது நாம் தெரிந்து கொள்ள வேண்டாமா?

ஐரோப்பியாவிலிருந்து இங்கு குடியேறுவதற்கு முன்பு இருந்த பழங்குடி மக்கள் கொலம்பஸ்ஸினால் தவறுதலாக இந்தியர்கள் என்று அழைக்கப்பட்டவர்கள் சிவப்பிந்தியர்கள் என்பதை நம்மில் பலரும் வரலாற்றுப் பாடத்தில் படித்திருப்போம்.

ஆனால், அரிஜோனாவில் எங்கு சென்றாலும் சிவப்பிந்தியர் களைப் பற்றிய விபரங்கள் கொண்ட மியூசியங்களும் அவர்களது கைவினைப் பொருள்களின் கடைகளும் இருக்கின்றன.

பீனிக்சிலும், ஸ்காடஸ்டேல் என்னும் இடத்திலும் மிக அழகான கடைத்தெருக்கள் பிரத்யேகமாக இருக்கின்றன. அமெரிக்க இந்தியர் களின் கலைத் திறமையும் கை வண்ணமும் கற்பனை வளமும் பிரமிப்பாக இருக்கின்றன.

தி வைல்ட் வெஸ்ட் என்ற இந்தப் பகுதியில்தான் ஐரோப்பியர்கள் அவர்களுடன் சண்டையிட்டு நிலத்தைப் பிடுங்கிக்கொண்டு ஆக்கிர மித்தார்கள்.


கௌபாய் வீரர்களின் கதை இந்தப் பகுதியில் தான் புனையப் பட்டதாகச் சொல்கிறார்கள். வெகு காலத்துக்குக் 'கௌபாய்'கள் தான் ஹீரோக்களாகப் பார்க்கப்பட்டார்கள். ஆனால், சிவப்பிந்தியர்களின் வரலாற்றைப் பலரும் மறந்தே போய்விட்டனர்.

ஆனால், அவர்களது பாரம்பரியக் கலை வடிவங்களையும் கம்பளி விரிப்புகளையும் கண் கவரும் ஓவியம் தீட்டப்பட்ட மண் பானைகளையும் பார்த்தோம். அப்போது, அவர்களின் உன்னதம் புரிந்தது.

இத்தகையவர்களை ஒடுக்கி அடக்கித் தேசத்தைக் கைப்பற்றிய வெள்ளையர்கள் தான் காட்டுமிராண்டியாகத் தெரிகிறது.

ஆனால், தாங்கள் தான் இந்த மண்ணின் மைந்தர்கள் என்ற எண்ணமோ பெருமையோ உண்டாகும் அளவுக்கு இவர்களுக்கு எண்ணிக்கை இல்லை. வலிமையும் இல்லை. பொருளும் இல்லை.

வலியவன் தான் வாழ்வான் என்பது தானே உலகம்.



**கருப்பு மலைகள் சவுத் டெகோடா**



# 14

# வாஷிங்டனில் ஒருநாள்

* *ஜார்ஜ் வாஷிங்டன் பாலம் பார்த்தோம். அமெரிக்கர்கள் விஞ்ஞானத் திறனைக் ''கென்னடி டன்னலும்'' ஜார்ஜ் வாஷிங்டன் பாலமும்' 3 மைல் நீளத்தில் உள்ள மற்றொரு பாலமும் உலகுக்கு விளக்கிக் காட்டுகின்றன. இந்த நாட்டில் எங்குமே இயந்திர மயம்தான். ஆனால், தபால் நிலையத்திற்குச் சென்றால் காசுகளைப் போட்டுப் பொத்தானை அழுத்தினால் தேவையான ஸ்டாம்ப் வருகிறது. அங்கங்கே, பால்பூத்துக்கள் இருக்கின்றன. காசுபோட்டுப்பொத்தானை அழுத்தினால் அரைகாலன் பால் சுத்தமாக ஒரு காகிதப் பெட்டியில் சிறிதும் சிதறாத முறையில் அடக்கம் செய்யப்பட்டு வெளியே வருகிறது. சுமார் 10 துணிகளைப் போட்டு 35 காசு ஒரு மிசினில் போட்டால், துணிகளைச் சுத்தமாகச் சலவை செய்து அலசிக் கொடுக்கிறது. அதை, இன்னொரு மிசினில் விட்டால் 35 நிமிடங்களில் காய வைத்துக் கொடுக்கிறது.*

–வேதாத்திரி மகரிஷி – எனது வாழ்க்கை விளக்கம் பக். 170

அமெரிக்காவின் தலைநகர் வாஷிங்டனைப் பார்க்க ஒரு நாள் காரில் புறப்பட்டோம். பலமணி நேரப் பிரயாணத்திற்குப் பின்னர் வாஷிங்டனை அடைந்தோம்.

தலைநகர் என்பதை விட சுற்றுலாப் பயணிகளின் தலைநகர் என்று சொல்லலாம். அவ்வளவு கூட்டம். நியூயார்க்கிற்கும் நேர் விரோதமான நகரமாகும்.

நியூயார்க் போல் இங்கு கட்டிடங்கள் உயரமில்லாமல் இருந்தது. அதற்கான காரணம் கேட்டேன்.

வாஷிங்டனிலிருக்கும் அமெரிக்க ஜனாதிபதியின் அலுவலகமான வெள்ளை மாளிகை சராசரியான உயரமுடையதுதான். வெள்ளை மாளிகையை விட மற்ற கட்டடங்கள் உயரமாக இருப்பது மரியாதையாக இருக்காது என்பதனால்தான் கட்டிடங்களின் உயரங்கள் கட்டுப் படுத்த பட்டிருக்கின்றன.

நான்கு வரிசையில் வாகனங்கள் செல்லக்கூடிய விசாலமான சாலைகள் உள்ளன. எங்கு பார்த்தாலும் பசுமை கண்ணைக் கட்டிக் கொண்டது. சாலைகளை ஓட்டிய மலர்த் தோட்டங்கள். எங்கு திரும்பினாலும் டியூலிப் மலர்கள் கொத்துக் கொத்தாக இலையே தெரியாமல் வண்ண பூக்களுடன் சிரிக்கும். பல்வேறு மரங்கள் பச்சை பசேலெனற் புல்வெளிக்ள் நாம் எங்கு சென்றாலும் கூடவே வந்து வந்து காட்சியளிக்கும் வளமான நீர்ப் பரப்பைக் கொண்ட போடாமாக் நதி-வாஷிங்டன் நகரத்ததின் அழகு தனித்துவம் கொண்டது. மியூசியம்களும் நினைவகங்களும் பாமரர்களுக்கும் படித்தவர் களுக்கும் எழுச்சியூட்டும் கம்பீரம் கொண்டவை.

இங்கு பார்க்க வேண்டிய இடங்கள் அதிகமாக உள்ளன. சுற்றிப் பார்க்க நல்ல வசதி செய்திருக்கிறார்கள். எல்லாமே அடுத்தடுத்து இருப்பதால் நடந்தே பார்த்துவிடலாம்.

வாஷிங்டனை **'நினைவுச் சின்னங்களின் நகரம்'** என்று சொல்லலாம். அந்த அளவுக்கு எண்ணிலடங்கா நினைவுச் சின்னங்கள்.

'வாஷிங்டன் டி. சி. என்பார்கள். 'டி. சி. ஏன்பது 'கொலம்பியா மாவட்டம்' (டிஸ்டிரிக் கொலம்பியா) என்பதைக் குறிக்கும். கனடா எல்லையில் வேறு ஒரு வாஷிங்டன் (மாநிலம்) இருப்பதால் இதை 'வாஷிங்டன் டி.சி' என்கிறார்கள். இது கொலம்பியா மாவட்டத்தில் உள்ளது.

அமெரிக்கர்கள் திட்டமிட்டுக் கட்டிய நகரம்தான் வாஷிங்டன் நகரம். முன்பு காடாக இருந்தது. அமெரிக்காவின் முதல் குடியரசுத் தலைவரான வாஷிங்டன் இந்த இடத்தைத் தேர்ந்தெடுத்தார். அவர் பெயரே இந்நகருக்குச் சூட்டப்பட்டுள்ளது.

வாஷிங்டனில் காலடி வைத்ததுமே, அவரைப் பற்றி நான் படித்த என்னுடைய புத்தகங்களில் அவரைப் பற்றி எழுதிய ஒருநிகழ்ச்சி என் மனதில் நிழலாடியது.

''வழியில் நான்கு படைவீரர்கள் கனமான மரக்கட்டையைத் தள்ளுவண்டியில் ஏற்ற முயன்று கொண்டிருந்தார்கள். கட்டை

ரொம்பவும் பளுவானது. எவ்வளவோ சிரமப்பட்டும் வண்டியில் ஏற்றும்போது அங்கே அதைப் பிடித்துக் கொள்ள ஆள் இல்லாததால் ஏற்றவே முடியவில்லை.

அங்கு நின்றிருந்த கார்ப்பொரல் ''இன்னும் அதை ஏற்றுகிறீர்கள்!'' என்று கையில் பிரம்புடன் மிடுக்காக அவர்களை விரட்டிக் கொண்டிருந்தான்.

அந்தப் பக்கமாகக் குதிரைமீது வந்த ஒரு கனவான் சற்று நேரம் அதைக் கவனித்தார்.

அந்தக் கார்ப்பொரல் வண்டியின் மீது ஏறி ஒரு கை கொடுத் திருக்கலாம். ஆனால், அதற்கு அவன் தயாராக இல்லை. உடனே, அவர் குதிரையை விட்டிறங்கினார்.

'சிறிது முயலுங்கள். நானும் ஒரு கை கொடுக்கிறேன்'' என்று அவ்வண்டியில் ஏறினார். அவர் யார் என்று அறியாவிட்டாலும் அவருடைய குரலில் இருந்த வசியச் சக்தியால் அவர்கள் கட்டுண்டார்கள். பிறகு, முழுமூச்சுடன் முயன்றார்கள்.

கனவான் இருகரங்களாலும் கட்டையைப் பிடித்து அணைத்து வண்டியில் கிடத்திவிட்டார். நால்வரும் சேர்ந்து அதை நன்றாக உள்ளேதள்ளினார்கள். உடனே, வண்டியிலிருந்து இறங்கினார் கனவான்.

அவர்களுடைய வந்தனத்துக்குக்கூடக் காத்திருக்கவில்லை. குதிரை மீதேறிச் சென்று விட்டார்.

''யார் அது. உங்கள் உதவிக்கு வந்தது என்றான் கார்ப்பொரல். 'தெரியவில்லையே! உங்களுக்கும் தெரியாதா?' என்றனர் அந்நால்வரும் .. 'எங்கேயோ பார்த்தமாதிரி இருக்கிறது' என்றான் அவன்.

அன்று மறுநாள் அமெரிக்காவில் முதல் ஜனாதிபதியாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட ஜார்ஜ் வாஷிங்டனுக்கு நாட்டு மக்கள் வரவேற்புக் கூறி விருந்தளித்தார்கள். அதற்கு, அந்த கார்ப்பொரலும் சென்றிருந்தான்.

என்ன ஆச்சரியம்! அதற்கு முன் தினம் அந்தக் கட்டையை ஏற்று வதற்கு உதவியாக வந்தவர் ஜனாதிபதி வாஷிங்டனாக இருந்ததைக் கண்டு அப்படியே திகைத்துப் போய் நின்றான் அந்தக் கார்ப்பொரல்!''

சரியான தலைவரது பெயரைத்தான் இந்நகருக்கு வைத்திருக் கிறார்கள் என்று எண்ணிக்கொண்டேன்.

வாஷிங்டன் நகரம் 1791ல் கட்டத் தொடங்கப்பட்டது. 1800ல் வேலை முடிந்து தலைநகராயிற்று. 1812 ல் இங்கிலாந்து நடத்திய தாக்குதலில் அழிந்தது. மீண்டும் கட்டப்பட்டது. 1930ல் உள்நாட்டுப் போரில் பெரும் சேதம் அடைந்தது. அதன் பின்னர்தான் இப்போதைய வாஷிங்டன் தோன்றியது.

எந்த மாநிலத்தையும் சேராத வாஷிங்டன் மக்களுக்கு வாக்குரிமை கிடையாது. 1961 முதல்தான் குடியரசுத் தலைவர் தேர்தலில் வாக்களித்தனர். 1971ல் நாடாளுமன்றத்துக்கு ஒரு உறுப்பினரைத் தேர்ந்தெடுத்தார்கள்.

வாஷிங்டன் மத்திய அரசின் நிர்வாகத்தில் இருக்கிறது. நகரத்தை நிர்வகிக்க குடியரசுத் தலைவரே நிர்வாகிகளை நியமிப்பார். 1974 ல் உள்ளாட்சிச் சட்டம் வந்தது. அது முதல் நிர்வாகிகள் தேர்ந்து எடுக்கப்படுகிறார்கள்.

சுற்றுலாப் பேருந்துகளும் செல்கின்றன. புறப்படுகின்ற இடத்தில் சீட்டு வாங்கிக்கொண்டால் போதும். எங்கே வேண்டுமானாலும் ஏறலாம். இறங்கலாம்.

வாஷிங்டனைப் பொறுத்தவரையில் ஆரவாரங்களற்ற அமைதியையும் கட்டுப்பாட்டையும் ஒழுங்கையும் நான் கண்டேன்.

**லிங்கன் சிலை:**

அடுத்து லிங்கனின் பிரமாண்டமான சிலையைப் பார்க்கப் போனோம். 1922ல் அமைக்கப்பட்ட சிலை லிங்கன் மிடுக்காக உட்கார்ந்திருந்தார். 48 படிக்கட்டுகளில் ஏறி லிங்கன் மண்டபத்துள் செல்ல வேண்டும். லிங்கன் காலத்தில் அமெரிக்காவில் 48 மாநிலங்கள் இருந்ததை இந்தப் படிக்கட்டுகள் குறிக்கின்றன.

உள்ளே 36 பிரமாண்டமான தூண்கள் உள்ளன. லிங்கன் காலத்தில் 36 மாநிலங்கள் சுதந்திரமாக இயங்கியதை இந்தத் தூண்கள் எடுத்துக் காட்டுகின்றன. இந்த மாபெரும் மனிதரைப் பார்த்துக் கொண்டிருந்த போது, அவரைப் பற்றிய நிகழ்வு ஒன்றும் மனதில் நிழலாடியது.

அமெரிக்காவின் ஜனாதிபதியாக இருந்த ஆபிரகாம் லிங்கன் மிகவும் எளிமையாக வாழும் வழக்கமுள்ளவர். அவர், ஜனாதிபதியாக இருந்த சமயம் ஒரு கோடீசுவரர் லிங்கனை சந்திப்பதற்காக அவருடைய இல்லத்துக்கு வந்தார்.

அப்போது லிங்கன் தமது பூட்சுகளைத் துடைத்துக் கொண்டிருந்தார். அந்தக் காட்சியைக் கண்டு ஆச்சரியப்பட்ட அந்த கோடீசுவரர் கேலியாக 'என்ன ஜனாதிபதி அவர்களே-உங்கள் பூட்சுகளுக்கு நீங்கள் பாலீஷ் போட்டுக்கொண்டிருக்கிறீர்களே?' என்று கேட்டார்.

உடனே, ஆபிரகாம் லிங்கன் ''நீங்கள் இந்த மாதிரி செய்வதில்லையா? அப்படியானால், வேறு யாருடைய பூட்சுகளுக்கு நீங்கள் பாலிஷ் போடுவீர்கள்?' என்று கேட்டார். அந்தக் கோடீசுவரரால் எந்த பதிலும் பேசமுடியவில்லை!.

## வெள்ளை மாளிகை:

வெள்ளை மாளிகையைப் பார்த்தோம். நெஞ்சு வேகமாகத் துடித்தது. உலகச் சரித்திரங்களை, வரலாற்றை மாற்றியமைக்கும் இடமல்லவா?

எட்ட நின்றுதான் வெள்ளை மாளிகையைப் பார்க்க முடியும். நாடாளுமன்றம் சற்று தொலைவில் இருக்கிறது. புகைப்படங்களில் பார்த்த இடங்களை எல்லாம் நேரில் பார்க்கும் போது ஒரு வகை நெகிழ்ச்சிதான் ஏற்பட்டது.

வெள்ளை மாளிகைக்கும் எதிரே சுதந்திரப் பூங்காவைப் பார்த்தோம். அமெரிக்க மக்கள் தங்கள் சுதந்திர உணர்வுகளை இந்தப் பூங்காவில் நின்றுகொண்டு கோஷமிட்டு வெளிப்படுத்தலாம். ஜனாதிபதி இந்த வழியாகத் தான் தினமும் சர்ச்சுக்குப் போய்வருவார்.

வாஷிங்டனில் சமூக நல ஆர்வலர்களுக்கும் தொண்டர்களுக்கும் பஞ்சமில்லை. அவர்கள் கூட்டம் போடுவதற்கும் கோஷம் போடுவதற்கும் இசைவாக 'கேப்பிடல் கிலோ' எனப்படும் அமெரிக்க பாராளுமன்றத்துக்கும் லிங்கன் நினைவகத்துக்கும் நடுவில் இரண்டு மைல் அகலத்துக்கு விரிந்திருக்கும் 'மால்' என்னும் பொது வழி பத்து லட்சம் மக்கள் கூட்டத்தை தாங்கக் கூடியது.

நாங்கள் போயிருந்த சமயம் இது போன்ற ஒரு பேரணியைப் பார்த்ததோம்.

அமெரிக்கச் சிவில் உரிமைப் போராட்டங்களில் மரணமடைந்த வீரர்களுக்கான நினைவுத் தூணைப் பார்த்தோம். நடந்தே ஒவ்வொரு நினைவுச் சின்னமாகப் பார்த்தோம். வாஷிங்டன் நினைவுத்தூண் மகிவும் உயரமானது. நம் கண்ணில் பட்டுக் கொண்டே இருக்கிறது.

'ஸமித்ஸோனி ஸபேஸ் ஆடிட்டோரியம்' என்னும் வானியல் அருங்காட்சியத்திற்குச் சென்றோம். வானியல் ஆராய்ச்சிக்கருவிகள் அனைத்தையும் அங்கே காட்சிக்கு வைத்திருக்கிறார்கள். ரைட் சகோதரர்கள் பறந்த உலகின் முதல் விமானம் முதல் 'ஜெட்' விமானம் வரைமாதிரி இங்கே இருக்கிறது. இங்கேத்திரைப்படமும்காட்டுகிறார்கள்.

## நோட்டு அச்சிடும் இடம்:

டாலர் நோட்டு அச்சிடும் இடம் அழகிய கட்டிடத்தில் அமைந்துள்ளது. கூட்டம் அதிகமில்லை. வரிசையில் சென்று உள்ளே சென்றோம். வெள்ளைத்தாள் எப்படி டாலர் நோட்டு ஆகிறது என்பதை நாங்கள் முழுமையாக கண்டோம். இதற்காக, தனி மேடை அமைத்துள்ளார்கள். உயரே நின்று நாம் பார்த்துக் கொண்டே போக வசதி செய்திருக்கிறார்கள்.

'3.2 கோடிக்கு மேல் நீங்கள் நிற்கிறீர்கள்' என்று ஒரு அறிவிப்புத் தொங்குகின்றது. இங்கே , நாள்தோறும் 3.2 கோடி டாலர் நோட்டுகள் அச்சாகின்றன. இந்த அளவு நோட்டுகள் அச்சாகின்றன என்றால் இந்த அளவிற்கு நாள்தோறும் கழிக்கப்படுகின்றன.

இங்கே ஒரு டாலர் நோட்டுக்களின் புழக்கந்தான் அதிகம். ஒவ்வொரு நோட்டும் 18 மாதம் புழக்கத்தில் இருக்கிறது. பிறகு, கழித்து விடுகிறார்கள். அமெரிக்கா அவ்வப்போது வெளியிட்ட வெள்ளி நாயணங்களை இங்கே விற்பனை செய்கிறார்கள்.

## கென்னடி கல்லறை.

கென்னடி சுட்டுக் கொல்வதற்கு 11 நாட்கள் முன்புதான் இந்தக் கல்லறைத் தோட்டத்தில் நடந்த விழாவில் வீர வணக்கம் செலுத்திப் பேசினார்.

அமெரிக்கத் தலைவர்கள் தளபதிகளின் கல்லறை. இங்கு, ஆயிரக்கணக்கான கல்லறைகள் இருக்கின்றன. கென்னடி கல்லறையும் இங்கே இருக்கிறது. அணையாத விளக்கு ஒன்று இரவு பகலாகக் கல்லறையில் எரிந்து கொண்டிருக்கிறது.

ஒரு நாள் முழுவதும் வாஷிங்டனைச் சுற்றிப் பார்த்துவிட்டு மினியோபொலிஸ் சென்று அயர்ந்து தூங்கினோம்.

# 15



# அமெரிக்க அரசியலமைப்பு

* ''மற்ற நாடுகளின் பொதுமக்களைப் பார்க்கும் போது நமது மக்களைத் தெய்வங்களென்றே கூறவேண்டும். இந்த ஒரு நாட்டில்தான் வறுமை என்பது குற்றமாகக் கருதப்படுவதில்லை. அவர்கள் அழகுடன் அறிவும் இணையப் பெற்றவர்கள். அவர்களை நாம் இடையறாமல் வெறுத்ததாலேயே அவர்கள் தன்னம்பிக்கை இழந்து விட்டார்கள். தங்களைப் பிறவியிலேயே அடிமைகள் என்று கருதுகிறார்கள். அவர்களுக்குரிய உரிமைகளை அளித்து விடுங்கள். அவர்கள் தங்கள் சொந்த உரிமைகளைச் சார்ந்தே நிற்கட்டும். இதுதான், அமெரிக்க நாகரிகத்தின் புகழுக்குக் காரணம். உடல் கூனி பசியால் வாடி கையில் ஒரு சிறிய கோலையும் ஒரு துணி மட்டையையும் தாங்கிக் கப்பலிலிருந்து இறங்கி வரும் அயர்லாந்து மனிதனைக் கவனியுங்கள். சில மாதங்கள் அமெரிக்க நாட்டில் கழித்த பின்னர் அவன் நிமிர்ந்து அச்சமின்றி நடப்பதைப் பாருங்கள். தான் அடிமையாயிருந்த ஒரு நாட்டிலிருந்து தன்னை ஒரு சகோதரன் என்று கூறும் ஒரு நாட்டிற்கு அவன் வருகிறான்.

–சுவாமி விவேகானந்தர் –ஞானதீபம் பாகம் 7 – பக். 223.

அமெரிக்காவைப் போல் நம் நாட்டில் இரண்டு கட்சிகளே இருக்க வேண்டும் என்று என் மாணவப் பருவத்திலிருந்து என் நண்பர்களிடம் கூறுவதுண்டு. அந்த அளவுக்கு இங்குள்ள நூற்றுக்கணக்கான அரசியல் கட்சிகள் மீது எனக்கு வெறுப்பு.

நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாகப் புதிய புதிய அரசியல் கட்சிகள். பதவி தராவிட்டால் உடனே புதிய கட்சி. சாதிக்கென ஒரு கட்சி. சுயநலக் கூட்டங்களின் சுயரூபங்களை நம் மக்கள் என்றுதான் புரிந்து கொள்ளப் போகிறார்களோ?

இந்தியாவைப் போல் அல்லாமல் அமெரிக்காவில் குடியரசு கட்சி – ஜனநாயகக் கட்சி என்று இரண்டு கட்சிகள் தான் முக்கிய மானதாகும். தி. மு. க. - அ. தி மு. க. போல் இரண்டிற்கும் அதிக வித்தியாசம் இல்லை. இரண்டு கட்சிகள் தான் மாற்றி மாற்றி ஆட்சி அமைக்கிறது.

51 மாநிலங்களையும் ஒன்றிற்கு மேற்பட்ட இனங்களைப் கொண்டதுதான் அந்த நாட்டின் அரசியலமைப்பு.

எழுதப்பட்ட அரசியல் சட்டங்களில் உலக அளவில் மிகப் பழமையானது அமெரிக்க நாட்டின் அரசியல் சட்டம் ஆகும். இது 1787 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 17 ஆம் தேதி இயற்றப்பட்டுப் பின்னர் மார்ச் 4 ஆம் தேதி 1789 ஆம் ஆண்டு அதிகாரப்பூர்வமாக ஏற்றுக் கொள்ளப்பட்டிருக்கிறது.

நமது இந்திய அரசியல் சட்டம் 1949 ஆம் அண்டு நவம்பர் 26 ஆம் நாளன்று ஏற்றுக் கொள்ளப்பட்டு 1950 சனவரி 26 ஆம் நாள் அமல்படுத்தப்பட்டது. இதுவே, நமது குடியரசு தின நாளாகும்.

இந்த மக்கள் தனிமனிதச் சுதந்திரத்திற்கே முக்கியத்துவம் கொடுக்கின்றனர். ஜனநாயகம் என்பதற்கான வார்த்தைகள் அரசிய லமைப்பில் இல்லை.

ஜனநாயகம் என்பது பெரும்பான்மை மக்களுடைய ஆட்சி. அது தனி மனித சுதந்திரத்தை பாதிக்கக்கூடும் என்பதால் அவ்வார்த்தையைக் கூட அவர்கள் தவிர்த்திருக்கிறார்கள்.

இங்கு அரசுத்துறை கட்டுப்பாடு மிகவும் குறைவு. தனியார் துறைதான் மேலோங்கியிருக்கிறது.

இராணுவத் தளவாடங்களைக் கூடத் தனியார் துறையினர்தான் தயாரிக்கிறார்கள் என்றால் பார்த்துக் கொள்ளுங்களேன்.

ஐம்பத்தொரு மாநிலங்களைக் கொண்ட அமெரிக்காவில் ஒவ்வொரு மாநிலத்திலும் தனிச் சட்டங்கள் தனி அரசு மற்றும் நீதிமன்றங்கள்.

ராணுவம் வெளியுறவு மற்றும் குடியுரிமை மட்டும் தான் மத்திய அரசின் முக்கிய பணிகள்.

மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டவரே நாட்டின் ஆட்சிப் பொறுப்பை ஏற்கிறார். அவர்தான் ஜனாதிபதி என்று அழைக்கும் குடியரசுத் தலைவர் ஆவார்.

அவருக்குக் கீழே பல்வேறு துறைகளுக்கு உரிய செயலாளர் களைக் குடியரசுத் தலைவரே தேர்ந்தெடுக்கிறார். நம்மூர் மாதிரி அங்கு மந்திரிகள் என்ற பெயரில் யாரும் கிடையாது. ஒவ்வொரு துறையிலும் அனுபவம் அறிவுக்கூர்மை உடையவர்களே பொறுப் பேற்றுச் செயல்படுகிறார்கள். எவ்வளவு சந்தோஷமாக இருக்கிறது பாருங்கள்.

இங்கு நீதி நிர்வாகத் துறைக்கு மிகவும் முக்கியத்துவம் கொடுக்கப் படுகிறது. சிறுசிறு குறைபாடுகளுக்கு கூட மக்களின் நீதி மன்றத்தின் தீர்ப்பின் அடிப்படையில் நீதி வழங்கப்படுகிறது.

நீதித் துறையில் குறைபாடு இருந்தால் கடும் தண்டனை கொடுக்கப்படுகிறது. அதே சமயம், அவர்களின் நன்னடத்தையைக் கவனித்துத் தண்டனையைக் குறைப்பதற்கும் வழி வகுக்கப்பட்டுள்ளது.

அமெரிக்காவில் வாக்காளர் பட்டியல் எதுவும் கிடையாது. தேர்தல் பற்றிய அறிவிப்பு வந்ததும் ஒவ்வொருவரும் தாங்களே தேர்தல் அலுவலகத்துக்குச் சென்று வாக்காளராகப் பதிவு செய்து கொள்வார்கள். பதிவு செய்தவர்களுக்கு மட்டுமே; அங்கு ஓட்டுரிமை.

ஜனாதிபதி மக்களால் நேரடியாகத் தேர்ந்து எடுக்கப்படுகிறார். ஒவ்வொரு மாநிலத்திலும் மக்கள் ஜனாதிபதிக்கும் அவரது கட்சித் துணை ஜனாதிபதிக்கும் ஓட்டுப் போடுகிறார்கள். இது, நான்கு ஆண்டுகளுக்கு ஒரு முறை நவம்பர் மாதம் முதல் செவ்வாய்க் கிழமையன்று நடைபெறும்.

ஜனாதிபதி 2 தடவைகளுக்கு மேல் போட்டியிட அரசியல் சட்டத்தில் தடை உள்ளது.

மாநிலங்களின் மக்கள்தொகை அடிப்படையில் தேர்வாளர்கள் எண்ணிக்கை ஒதுக்கப்படும். உதாரணமாக அதிக மக்கள்தொகை கொண்ட கலிபோர்னியாவுக்கு 59 தேர்வாளர்கள்.

எந்தக் கட்சி ஜனாதிபதி அதிக வாக்குப் பெறுகிறாரோ அந்தக் கட்சிக்குத் தான் அந்த 59 தேர்வாளர்களையும் நியமிக்க உரிமை உண்டு.

அதாவது ஒரு மாநிலத்தில் 51 சதவீதம் வாக்குப் பெற்ற கட்சிக்கு எல்லாத் தேர்வாளர் உரிமையும் கிடைக்கும். 49 சதவீதம் பெற்ற கட்சிக்கு ஒன்றும் கிடைக்காது.

இந்த அடிப்படையில் 51 மாநிலங்களின் தேர்வாளர்களும் (மொத்தம் 435) செனட்டர்கள் (100) பேரும் சேர்ந்த தேர்வாளர் அமைப்பு ஜனாதிபதியை தேர்ந்தெடுக்கும்.

ஜனாதிபதிக்கு வீடோ என்ற ரத்து அதிகாரம் உண்டு. காங்கிரஸ் மூன்றில் இரண்டு பங்கு ஓட்டுகளால் அதை மாற்ற முடியும்.

ஜனாதிபதி நமது பிரதம மந்திரிக்கு இணையானவர். ஜனாதிபதி 13 துறைகளுக்கு செகரட்டரிகளை நியமிப்பார். இவர்கள் காபினட் மந்திரிகள். இவர்கள் காங்கிரசில் உறுப்பினராக இருக்கும் கட்டாயம் இல்லை.

இந்த முறையினால் பல்வேறு துறை நிபுணர்கள் இடம் பெறலாம். நம்மூர் மாதிரி அரசியல் காரணங்களுக்காக அளவுமீறிய மந்திரி சபைகள் கிடையாது.

ஒவ்வொரு மாநிலத்திற்கும் 2 செனட்டர்களைத் தங்கள் மாநில ஆட்சிமன்றம் மூலம் தேர்ந்தெடுக்கும் உரிமை உண்டு. செனட்டர் களின் பதவி காலம் ஆறு ஆண்டுகள். இரண்டு ஆண்டுகளுக்கு ஒரு முறை மூன்றில் ஒரு பங்கு செனட்டர்களில் பதவிக்காலம் முடியும். (இது நமது மாநிலங்களவைப் போன்றது.)

ஜனாதிபதியைக் கண்டித்தல் வெளியுறவு மூத்த அதிகாரிகள் நியமனம் இவற்றில் செனட்டுக்குச் சிறப்பு அதிகாரங்கள் உண்டு.

மக்கள் தொகை அடிப்படையில் மாநிலங்களுக்கு ஒதுக்கப்பட்ட எண்ணிக்கையில் 2 ஆண்டுகளுக்கு ஒரு முறை தேர்தல். பதவிக்காலம் 2 ஆண்டுகள்தான். பட்ஜெட் வருமானம் போன்றவை மக்கள் சபையில் தான் நிறைவேற வேண்டும். மொத்தம் 435 உறுப்பினர்கள். (நமது மக்கள் அவை போன்றது.)

செனட் மக்கள் சபை இரண்டும் சேர்ந்தது காங்கிரஸ். இது நமது நாடாளுமன்றம் போன்றது. இந்த காங்கிரஸ் கூடுமிடம் வாஷிங்டனில் உள்ள காபிடல் ஹில் கட்டிடம். வெள்ளை மாளிகை ஜனாதிபதியின் இருப்பிடம்.

தேர்தல்கள் ஒவ்வொரு இரண்டாண்டும் சரியாக நவம்பரில் வந்துவிடும். தேதிகள் நிலையானவை. மாநில ஆட்சியாளரானகவர்னரும் மக்களால் தேர்ந்தெடுக்கப்படுகிறார்.

அமெரிக்க மாநிலங்களுக்கு சுயாட்சி உரிமை உண்டு. நம் நாட்டில் தான் மாநிலச் சுயாட்சி கோரிக்கை இன்னும் வெற்றி பெற வில்லை. மாநிலங்களுக்கு தனி அரசியல் சட்டம் இருக்கிறது. மாநில அரசைக் கலைக்கும் உரிமை அங்கு கிடையாது. இந்தியாவில்தான் இந்த அட்டூழியம் எல்லாம். மாநில அரசுக்குத் தனிக் கொடி உண்டு.

அமெரிக்க மக்களுக்கு உள்ளூர்ப் பற்று அதிகம். நம்மூர் போல ஊர்ப் பற்றும் மாநிலப் பற்றும் உண்டு. 'வாஷிங்டனிலிருந்து எந்த முட்டாள் நமக்குக் கட்டளையிடுவது? ' என்று அங்கு கேட்பான். இங்கு 'டெல்லியிலிருந்து எந்த முட்டாள் நமக்குக் கட்டளையிடுவான்?' என்று கேட்டால் மாநில அரசைக் கலைத்து விடுவார்கள். உடனே, பிரிவினை வாதிகள் என்ற முத்திரை குத்துவார்கள்.

அன்று, குடியேறிய அமெரிக்கர்கள் மிகத் தீவிரத்ததுடன் மதித்த சுதந்திர உணர்வே இன்று பரந்த அமெரிக்க சமூகத்தின் ஆதார வேர்கள்.

அதை அமெரிக்க சாஸனம் இரண்டு நூற்றாண்டுகளாக வலியுறுத்தி வருவது மட்டுமில்லை. அமெரிக்க தேசிய அடையாளமாகவும் உணரப் படுகிறது.

அமெரிக்கா தனி மனிதனின் அவனது ஆளுமையின் சிறப்புக் குணமாகவும் நினைக்கப்படுகிறது. அமெரிக்கர்கள் வாழ்வில் அந்தரங்கத்தை மதிப்பவர்கள். பிறரின் குறுக்கீட்டை விரும்பாதவர்கள். சுதந்திரச் சமூகம். நம்பிக்கையே அதன் பலம். அதுவே, முன்னேற்றத் திற்கான மந்திரம். நீ யார் என்பது எனக்கு முக்கியமில்லை. இந்த நாடு வளர நீ உதவுகிறாயா-வா கை கொடு-நாட்டை உயர்த்துவோம்.

'நாடு உனக்கு என்ன செய்தது என்று கருதாதே! நீ நாட்டுக்காக என்ன செய்தாய்?' என்பதே அவர்களது மந்திரம்.

# 16



# பொருளாதாரச் செழுமை

* அமெரிக்காவின் மக்கள் தொகை உலகத்தின் மொத்த மக்கள் தொகையில் இருபதில் ஒரு பங்குதான். ஆனாலும், உலகத்தின் மொத்தச் செல்வத்தில் ஆறில் ஒருபங்கு முழுவதும் அவர்களிடம் உள்ளது. அவர்களுடைய செல்வத்திற்கும் போக அனுபவங்களுக்கும் எல்லையே இல்லை. ஆனாலும் ஒவ்வொன்றும் கிராக்கியாகவே உள்ளது. தொழிலாளிகளுக்கு தரவேண்டிய கூலி இங்கேதான் மிக அதிகம். ஆனாலும், தொழிலாளி முதலாளி போராட்டம் ஓயாமல் நிகழ்ந்து கொண்டேயிருக்கிறது.

–சுவாமி விவேகானந்தர் – ஞானதீபம் பாகம் 13 –பக். 166

இந்திய பொருளாதாரம் பற்றிக் கல்லூரியில் படிக்கும்போது நம்மைவிடப் பல மடங்கு அதிகமுள்ள அமெரிக்கப் பொருளாதாரத்தைக் கண்டு வியப்புற்றதுண்டு. அந்த வியப்பு இன்றும் தொடர்ந்து கொண்டே இருக்கிறது.

இந்நாட்டு பட்ஜெட்டில் வருமானம் (1999) ) 1.9. ட்ரிலியன். செலவு 1.8. ட்ரிலியன்.

தேசிய வருமானப் பங்கீடு (1974) நாட்டு உற்பத்தியில் பங்கீடு சராசரி 7600 டாலர்.

| மக்கள் தொகை | செல்வத்தில் பங்கு | ஏழைகள் |
|---|---|---|
| 1 சதவீதம் | 39 சதவீதம் | 8.6.சதவீதம் வெள்ளையர்கள். |
| 19 சதவீதம் | 46 சதவீதம் | 2.6.5. சதவீதம் கருப்பு இனம் |
| 80சதவீதம் | 15 சதவீதம் | 27. சதவீதம் ஸ்பானியர். |

மக்கள் தொகையில் வெள்ளையர்கள் 8.3 சதவீதம்

| | |
|---|---|
| கருப்பு இனத்தார் | 13 சதவீதம் |
| தேசியப்பழங்குடிகள் | 1 சதவீதம் |
| ஆசியர் | 3 சதவீதம் |

உழைப்பாளரில் 15சதம் தான் தொழிற்சாலைகளில் உழைப்பவர்கள். மற்றவர்கள், தொண்டிலும் மற்ற அறிவியல் துறைகளைச் சார்ந்த மத்தியதர வர்க்கத்தினர்

மொத்த ஜனத்தோகை 270 மில்லியன் (27 கோடி)

நாம் அமெரிக்க கடைகளில் வாங்கும் சின்னச் சின்னப் பொருள் களான துணிமணிகள், கைக்கடிகாரங்கள், பேனாக்கள், வானொலி, டி.வி. எல்லாம் சீனா, ஜப்பான் போன்ற மற்ற நாடுகளில் தயாரிக்கிறார்கள்.

சின்னச் சின்னப் பொருள்களைக் குடிசைத் தொழிலாகவோ கைத்தொழிலாகவே இங்கு செய்வதில்லை. இதனால், இங்கு ஊர்களும் நகரங்களும் சுத்தமாக இருக்கிறது.

இங்கு, கிரெடிட் கார்டு கலாசாரம் அதிகம். பர்ஸ் நிறைய சீட்டுக் கட்டுபோல அடுக்கி வைத்துத் தேய்க்கின்றனர்.

விசா கார்டு, டிராவல் கார்டு, கிரெடிட் கார்டு அது இது என பல துருப்புச் சீட்டுக்கள். நம்மூரில் பணம் கொடுத்தால்தான் மகிழ்வர். இங்கே ''கேஷ்' என்று சொன்ன உடன் ஓரங்கட்டி விடுகின்றனர்.

கார்டு (கடன்) காரர்களுக்கே இங்கு முன்னுரிமை! கேஷ் எண்ணிச் சரி பார்த்து வாங்க நேரமாகுமாம். அதே மாதிரி ஆன்லைன் பர்ச்சேஸ்!

ஆளாளுக்கு கம்ப்யூட்டரும், லாப்-டாப்பும் வைத்திருப்பதால் என்ன பொருள் வேண்டும் என்றாலும் ஆன்லைனில் பணம் செலுத்தி விடுகின்றனர். அவற்றை அழகாய் பார்சல் செய்து நம் வீட்டு வாசலில் வைத்துவிட்டுப் போய் விடுகின்றனர்.

பொய் பித்தலாட்டமில்லை. ஏமாற்று இல்லை. வாசலில் இருக்கும் பொருளை வேறு எவரும் களவாடுவதுமில்லை. ஆன்லைனில் வாங்கும்போது விலையும் குறைவு. வரியும் கிடையாதாம்.

ஒரு பொருளை வாங்கிப் பிடிக்கவில்லை என்றால் சில நாட்கள் கழித்துத் திருப்பிக் கொடுத்தால் முகம் சுழிக்காமல் பெற்றுக் கொள்கின்றனர்.

சின்னச் சின்னப் பொருள்களைச் செய்வதில் ஏற்படும் சிக்கல்களும் சிரமங்களும் செலவும் கூட்டிக் கழித்துப் பார்த்துஅவற்றை வெளிநாட்டிலிருந்து இறக்குமதி செய்து தங்களது பொருளாதாரத்தை நிலைப்படுத்திக் கொண்டுள்ளனர்.

அமெரிக்காவில், பெரிய கனரக தொழில்கள் உலகத்தின் மற்ற நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யக்கூடிய பொருள்களைத் தயாரிப்பதில் ஈடுபட்டு இருப்பதால் அவர்களின் பொருளாதாரம் ஓங்கி இருக்கிறது.

மேலும், அவர்களின் பொருள்களுக்கு உலகச் சந்தையில் நல்ல வரவேற்பு உள்ளது. அவர்களின் வியாபார நுணுக்கமும் விவேகமும் தொடர்ந்து தொய்வில்லாத பொருளாதார மேம்பாட்டிற்குத் உதவியாக இருக்கிறது.

அமெரிக்காவைப் பார்த்து, அதைப் போலத் தங்கள் நாடும் முன்னேற வேண்டும் என்ற ஆசையில் இந்தோனேசியா போன்ற கீழ்த்திசை நாடுகள் முயற்சி செய்து தோல்வியைத்தழுவிய வரலாற்றையும் நாம் பார்த்துள்ளோம். இதற்கு என்ன காரணம்?

அமெரிக்கர்களின் திட்டமிட்ட வாழ்க்கை முறையும் அவர்களது ஈடுபாட்டுடன் கூடிய செயல்முறைகளும் அவர்கள் வாழ்க்கைத் தரம் உயர்வதற்குக் காரணமாக அமைந்துள்ளன. உழைப்பும், தனி மனிதச் சுதந்திரமும், திட்டமிடுதலும் அவர்களின் பொருளாதாரத்தைச் செழுமையடைச் செய்துள்ளது.

## 17



# கிரீன்கார்டு என்னும் குடியுரிமை

* ''நெடுந்தொலைவிலுள்ள நாடுகளிலிருந்து இங்கு சேர்ந்திருப்பவர்களுள் பலர் செயலாற்றப்படுவதற்கான திட்டங்கள்-கருத்துக்கள் நோக்கங்கள் ஆகியவற்றைக் கொண்டவர்களாக உள்ளனர். எதுவாக இருந்தாலும் அது வெற்றியடைவதற்கான வாய்ப்பு உள்ள ஒரே இடம் அமெரிக்காதான்''

–சுவாமி விவேகானந்தர் – ஞானபூமி பாகம் 12 – பக். 69

அமெரிக்கப் பிரஜைகளுக்கு மட்டுமே ஓட்டுரிமை உள்ளதால் இங்கு வந்தவர்கள் ஓரளவு செட்டில் ஆனவுடன் அடுத்த முயற்சியாகத் தங்களை இந்நாட்டு பிரஜைகளாக்கி கொள்ள அதாவது குடியுரிமை பெற நடவடிக்கை எடுக்கின்றனர்.

அதாவது, அமெரிக்காவில் நிரந்தரமாகத் தங்கியிருப்பதற்காக கிரீன்கார்டு என்னும் குடியுரிமை பெற முயற்சி மேற்கொள்கின்றனர். இவ்வாறு, ஒரு நாட்டின் குடிமகன் இன்னொரு நாட்டின் குடிமகனாக ஆவதை ஆங்கிலத்தில் 'Naturalization' என்று அழைக்கிறார்கள்.

இங்கு குடியுரிமை பெறுபவர்களுக்கு ''சோஷல் செக்யூரிடி அட்டை'' கொடுக்கப்படுவதால் வங்கிகளில் கணக்கு வைத்துக்; கொள்ளவும், இன்னும் பல நன்மைகள் பெற வாய்ப்பு அளிக்கப் படுகிறது. ஓட்டுரிமையும் கிடைக்கிறது.

'நேசுரலிசேசன்' பெற வழிமுறைகள் அனைத்தும் மிகச் சுலப மாகவே பின்பற்றக் கூடிய முறையில் உள்ளன. நேர்மையுடனும் அனுதாபத்துடனும் மனுக்களைப் பரிசீலிக்கின்றனர். வீண் அலைக் கழித்தல் கிடையாது.

சரியான விபரங்களையும் சான்றுகளையும் கொடுத்தபின் அவர்களின் விசாரணையில் நம் கடந்த கால நடவடிக்கைகள் திருப்தி கரமாக இருந்தால்- நேசுரலிசேசன் அனுமதி விரைவில் கிடைத்து விடும்.

இந்த அனுமதியைப் பெறுவதற்கு அரசுக்குச் சேவைக் கட்டணம் செலுத்தவேண்டும். விண்ணப்ப மனுவில் உள்ள விபரங்களைச்சரியாகப் பூர்த்தி செய்ய வேண்டும். மனுதாரரின் தகுதியைத் தாமே முன்னமே நிர்ணயித்துக் கொள்ளும் விதமான சில கேள்விகள் உள்ளன. அவை வரிசையாக ஒன்றன் பின் ஒன்றாகக் கொடுக்கப்பட்டிருக்கும்.

கேள்விகளுக்கு ''ஆம்' என்று பூர்த்தி செய்தோமானால், நாம் குடியுரிமை பெறும் நிலையை அடைந்துவிட்டோம் என்று கணித்து விடலாம்.

ஒரு கேள்விக்குப் பதில் ''இல்லை'' என்றாலும், விண்ணப்பம் நிராகரிக்கப்படும். அப்படி நிராகரிக்கும் போது விண்ணப்பத்துடன் கட்டிய தொகையும் வீணாகிவிடும்.

நிராகரித்து விட்டால் மறுபடியும் சரி செய்தபின் மீண்டும் பணம் செலுத்தி விண்ணப்பிக்கலாம்.

சரி. விண்ணப்பத்தில் உள்ளகேள்விகளைத் தெரிந்து கொள்வோம்.

* விண்ணப்பம் செய்யும் தேதிக்கு முந்தைய காலத்தில் மூன்று ஆண்டுகளுக்கு குறையாமல் இந்நாட்டில் வசித்திருக்க வேண்டும்.

* மூன்று ஆண்டுகளுக்கு மேற்பட்டு ஐந்து ஆண்டுகளுக்கு குறைவாக வசித்திருந்தால் குடியுரிமை தகுதியைப் பெற இதற்காக அனுமதிக்கப் பட்ட சில விதி விலக்குகளின் கீழ் வருபவராக அவர் இருக்க வேண்டும். விண்ணப்பத்திலேயே விதி விலக்குகள் கொடுக்கப்பட்டிருக்கும். அப்படி வராவிட்டால் ஐந்து ஆண்டுகள் காத்திருக்க வேண்டும்.

* மனு செய்யும் தேதிக்கு முன்பாக உள்ள ஐந்து ஆண்டுகளில் வெளிநாடுகளில் தொடர்ந்து ஒரு ஆண்டோ, அதற்கு மேலோ தங்கி இருந்திருந்தால், அவர் தகுதியற்றவர். அதைக் கழித்து ஐந்து ஆண்டு கணக்கிடப்படும்.

* ஐந்து ஆண்டுகளோ, அதற்கு மேல் வசித்திருந்தாலும் விண்ணப்பம் செய்யும் நாளுக்கு முன்னதாக உள்ள காலத்தில் வெளிநாடுகளில் 30 மாதங்களுக்கு மேல் தங்கி இருந்தால் அவர் தகுதியற்றவர். கட்டாயமாக அவர் இரண்டரை ஆண்டுகள் காத்திருக்க வேண்டும்.

* விண்ணப்பம் செய்யும் தேதிக்கு முன்பாக உள்ள மூன்று மாத காலக் கட்டத்தில் அவர் வசித்த இடத்தில் தொடர்ந்து வசித்திருக்க வேண்டும்.

* ஒழுக்கமுள்ளவராக, நன்னடத்தையுள்ளவராக இருத்தல் வேண்டும்.

* அமெரிக்க நாட்டின்சரித்திரம் அரசுமுறை அடிப்படைக் கொள்கைகள் இவற்றை அறிந்திருக்க வேண்டும். தனக்குச் சொந்தமான நாட்டின் அடிப்படை விஷயங்கள் தெரிந்திருக்க வேண்டும்.

* அமெரிக்க நாட்டின் சட்டத்திற்கு உட்பட்டுத் தேவைப்படின் நாட்டின் இராணுவத்தில் சேர்ந்தோ அல்லது வேறு உள்நாட்டு சேவைகளிலோ பணியாற்றத் தயார் என்று உறுதி அளிக்க வேண்டும்.

* நாட்டைக் காக்கும் பணியிலிருந்தவரானால் அதாவது விமானப் படை, கடற்படை, இராணுவ வீரர்களாயிருந்தால் வேலையை விட்டு ஓடி வந்தவராக இருக்கக் கூடாது. அவர் செய்த வேலை தொடர்பான விபரங்கள் சமர்ப்பிக்க வேண்டும்.


* அமெரிக்க நாட்டுக்கு உண்மையானவராக இருப்பதற்கான உறுதி மொழி ஏற்க அழைக்கும் போது, அதற்குத் தயாராக இருத்தல் வேண்டும்.


* அமெரிக்க நாட்டு அரசியல் அமைப்பை ஏற்பவராக இருத்தல் வேண்டும்.

இந்த நிபந்தனைகளுக்கான படிவம் எண் 400 அரசின் நீதித் துறையிடமிருந்து பெறலாம். அதனைப் பூர்த்தி செய்து 'இமிக்ரெஷன் அண்ட் நேசுரலிசேசன் சர்வீஸ்'' பகுதிக்கு அனுப்ப வேண்டும்.

விண்ணப்ப விபரங்கள் சரியாக இருந்தால் நேர்காணலுக்கு அழைப்பார்கள். குடியுரிமை பெறத் தகுதி அடைந்த பின் அதிகாரிகள் முன்னிலையில் உறுதி மொழியை எடுத்துக் கொண்டு படிவத்தில் கையொப்பம் இட வேண்டும்.

அப்புறம் என்ன? அமெரிக்க சிட்டிசன் ஆகிவிட்டீர்கள். உலகத்தின் பணக்கார நாட்டுப் பிரஜை என்ற பெருமையைப் பெற்றுக் கொள்கிறீர்கள்.





**மவுண்ட் ரஸ்மோர்**

# 18



# இந்தியப் பெண்களுக்கு தொலைப்பேசியில் பேசுவது ஒரு வடிகால்

இந்த நூற்றாண்டில் நினைத்த நேரத்தில் கோடிக்கணக்கான மைல்களுக்கு அப்பால் உள்ளவர்களிடம் பேசிவிட முடிகிறது. எங்கெங்கோ நடக்கும் நிகழ்ச்சிகளை இங்கிருந்தே பார்த்து விடமுடிகிறது.

ஆம்! விஞ்ஞானத்தின் வேகத்தில் உலகம் சிறிதாகி விட்டது. விண்மீன்களுக்கு தூண்டில் வீசும் அசுர பயணங்களுக்கு முன் எல்லாமே நம் வசமாகிவிட்டது.

அமெரிக்காவில் வசிக்கும் இந்திய பெண்கள் குறிப்பாக, தமிழ்ப் பெண்கள் தொலைபேசியில் பேசினால் லேசில் போனைக் கீழே வைப்பதில்லை. **இதை ஒரு அமெரிக்க கலாச்சாரம் என்கிறார் எழுத்தாளர் வாசந்தி.**

நாள்தோறும், காலை ஒன்பது மணிக்கு அமெரிக்காவில் இருக்கும் எனது மகள் நிவேதிதாவின் போனில் நேரம் போவது தெரியாமல்- மனைவி பேசிக் கொண்டிருப்பார்கள்.

மகளுக்கு அங்கு அப்போது இரவு. வேலைக்குப் போய்விட்டு வந்து பேசுவாள். சமைத்துக் கொண்டு பேசுவாள். தன் கீழ் பணிபுரியும் பணியாளர்களுக்கு உத்தரவிட்டுக் கொண்டே பேசுவாள்.

மகள் இந்தியாவில் இருந்திருந்தால், ஆளும் தேருமாக ராணியைப் போல எல்லாரையும் அதட்டி உருட்டி வேலை வாங்கிக் கொண்டிருந் திருப்பாள்.

இப்பவும் பேச்சில் உற்சாகத்திற்குக் குறைவில்லை. ஆனால் பேசும் போது பல விசயங்களை ஒரே சமயத்தில் திட்டமிடும் ஒரு நிர்வாகி போல் தோன்றினாள்.

அமெரிக்காவில் டெலிபோன் கட்டணம் குறைவு. செல்போன் வைத்திருந்தால் அமெரிக்காவிற்குள் சனியும் ஞாயிறும் எத்தனை தொலைவில் இருப்பவர்களுடன் பேசினாலும் இலவசம் என்கிற சலுகை இருப்பது வசதி.

ஆனால், நம்மைப் போன்று பட்ஜெட்டில் வாழும் மக்களுக்கு தொலைப்பேசி கட்டணம் கட்டுப்படியாகுமா? என்று சிந்திப்பதுண்டு.

இதைத் தவிர, சனி ஞாயிறுகளில் வீடியோ கேமராவில் நேரடியாக மணிக்கணக்கில் அம்மாவும் பெண்ணும் பேசிக் கொள்வதைக் கவனித்துக் கொண்டே இருப்பது எனது வழக்கம். (இந்த உரை யாடலை கவனித்தே பாதிப் புத்தகத்தை எழுதி முடித்துவிட்டேன்.)

**அமெரிக்கவில் வாழும் இந்திய பெண்களுக்கு தங்கள் பெற்றோர்களுடன் - குறிப்பாக அம்மாவுடன் பேசுவது -அவர் களுக்குப் பெரிய வடிகாலாக இருப்பதை -அமெரிக்காவில் இருந்த போது நான் முழுமையாக உணர்ந்தேன்.**

இயந்திரகதி வாழ்க்கையில் தூரத்தில் இருக்கும் உறவுகளுடன் பேசுவது அங்குள்ள பெண்களுக்கு பெரிய இளைப்பாறுதலாக இருக்கிறது என்பதை நான் அங்கு கண்கூடாகக் கண்டேன்.

நேரத்துக்காகப் போராட வேண்டிய இயந்திரமாகிப் போன வாழ்வில்- சக மனிதர்களுடன் தொடர்பு கொள்ள ஒரே வழி.

இந்தியாவில் வேலைக்காரர்கள் கிடைக்கும் சொகுசில் இம்மி அசைக்காமல் மிகச் செல்லமாக வளர்ந்த பெண்கள் இங்கு தன்னந் தனியாக அசகாய சூரத்தனம் நம்ப முடியாததாக இருக்கிறது.

கைக்குழந்தை, பள்ளிக்குச் செல்லும் குழந்தை இரண்டையும் கவனித்துச் சமைத்துச் சாப்பாடு போட்டு, இடையில் கடை கண்ணிக்குச் செல்ல, பள்ளியில் விட, டேக்கேர் சென்டரில் விட, காரை ஓட்டிக் கொண்டு பல முறை டிரிப் அடித்து வீட்டிற்குத் திரும்பி,

பாத்திரம் தேய்த்து மெஷினில் துவைத்த துணியை மடித்து-கடவுளே இப்படிப்பட்ட ஓயாத வேலைக்கு நடுவில் எப்படியிருக்கே என்று கேட்க நெருங்கிய உறவினர்கள் இல்லாத நிலையில், இவர்கள் வடிகாலைத் தேடி எங்கு செல்வார்கள்?

மனித உறவின் பாதுகாப்பு உணர்வைப் பரிச்சயமான குரலின் கதகதப்பை நொடியில் தரக்கூடிய தொலைப்பேசியைவிட சிறந்த வடிகால் வேறு என்ன இருக்க முடியும்?



# 19

# அமெரிக்காவில் மகப்பேறும் பிரசவமும்

*⁎ அமெரிக்காவில் பெண்கள் ஆண்களைவிட அதிகம் படித்தவர்களாக இருக்கிறார்கள். அவர்கள் விஞ்ஞானத்திலும் தத்துவத்திலும் ஆழ்ந்த அறிவுடையவர்களாக இருக்கிறார்கள். அதனால்தான் என்னை அவர்கள் அவ்வளவு அதிகமாகப் பாராட்டவும் மதிக்கவும் செய்தனர். ஆண்கள் நாள் முழுவதும் வேலைகளில் முறுக்கிப் பிழியப்படுகிறார்கள். அவர்களுக்கு ஓய்வு மிகவும் குறைவு. ஆனால், பெண்களோ பள்ளிகளிலும் கல்லூரிகளிலும் ஆசிரியைகளாக இருக்கிறார்கள். மிகவும் அதிகமாகப் படித்திருக்கிறார்கள். அமெரிக்காவில் எந்தப் பக்கம் திரும்பினாலும் பெண்களின் ஆற்றலையும் செல்வாக்கையும் பார்க்கலாம்''*

–சுவாமி விவேகானந்தர் –ஞானபூமி பாகம் 10 –பக். 133

திருமணம் முடிந்தவுடன் ஒவ்வொரு தம்பதிக்கும் ஏற்படும் நியாயமான ஆசை- தாங்கள் பெற்றோர்கள் ஆக வேண்டும் என்பது தான்? ஒரு பெண்ணின் வாழ்க்கையில் மிக முக்கிய விஷயம் தாய்மை.

அமெரிக்கா வந்துள்ள இளம் தம்பதியினருக்கு குழந்தை செல்வமும் சீக்கிரம் ஏற்படுகிறது.

கர்ப்பக் காலத்தில் விஸ்வரூபம் எடுக்கும் பல கேள்விகள். என்ன சாப்பிடலாம்? என்ன உடுத்தலாம்? எதைச் செய்யலாம்? எதைச் செய்யக் கூடாது? இது சரியா, அது சரியா? ஆயிரமாயிரம் சந்தேகங்கள்.

இவற்றிற்கெல்லாம் துல்லியமான எளிமையான விடைகளைக் கர்ப்பிணிகளுக்கு அமெரிக்க டாக்டர்கள்விளக்கி விடுகின்றனர். இங்குள்ள வசதிவாய்ப்புகளை விட அவர்கள் கர்ப்பிணிகளை நேசிக்கும் மனப் பாங்கு பார்ப்போரை வியக்க வைக்கும். அமெரிக்காவில், குழந்தை பெற்ற தமிழகப் பெண்கள் எல்லாரும் கொடுத்து வைத்தவர்களே!

பெண்கள் கருத்தறிப்பதற்கும் கருத்தறிந்தவுடனும் டாக்டர் களிடம் ஆலோசனை பெறுவது வழக்கம். மனைவியுடன் கணவனும் டாக்டரிடம் மாதம் ஒரு முறை கண்டிப்பாகச் செல்ல வேண்டும்.

பெற்றோர்களுக்கு பிரசவத்திற்கு முன்பும் பின்பும் ஒரு தாய் என்னென்ன செய்ய வேண்டும். எப்படி, எப்படி நடந்து கொள்ள வேண்டும் என்பதைப் பற்றிக் கூறும் போது, கணவரும் உடனிருந்து கேட்டுக் கொள்ள வேண்டும். இன்ஷ்யூரன்ஸ் அவர்களுக்கு உதவுகிறது.

இங்கு பெரும்பாலும், இயற்கையான பிரசவம் தான் நடை பெறுகிறது. அந்த அளவிற்கு, தாயையும் கருவையும் கவனித்துக் கொள்கின்றனர். கர்ப்பிணிகளுக்கு, குறிப்பாக, முதன்முறையாக 'தாய்' ஆகப்போகும் பெண்களுக்கு பிரசவம் பற்றியும் தாய்மை பற்றியும் பிரசவத்துக்குப் பிறகு, குழந்தையைப் பராமரிப்பது எப்படி என்பது பற்றியும், தெளிவாக எடுத்துச் சொல்கின்றனர்.

மேலும், கர்ப்ப காலத்தின் போது ஏற்படும் உடல்ரீதியான மனோ ரீதியான மாற்றங்கள் மற்றும் கர்ப்பக் காலத்தில் ஒரு பெண் எப்படி நடந்து கொள்ள வேண்டும், கணவன் எப்படி நடந்து கொள்ள வேண்டும் என்பது உள்ளிட்ட ஏராளமான தகவல்களை இங்குள்ள டாக்டர்கள் வகுப்பு எடுத்துச் சொல்கின்றனர்.

பிரசவம் பற்றிய அச்சத்தை நீக்கிவிடுகின்றனர். இங்கு அதிகமாக, பெண் குழந்தைகளையே மக்கள் விரும்புகின்றனர். ஆனால், நமது நாட்டிலே ஆண் குழந்தைகளையே விரும்புகின்றனர். இதனை இங்குள்ள டாக்டர்கள் கேலி செய்கின்றனர்.

தாய் ஏழு மாத கர்ப்பக்காலத்தில் உறவினர் நண்பர்களை வீட்டுக்கு அழைத்து விருந்து கொடுக்கிறார்கள்.

விருந்துக்கு வருபவர்கள் பிறக்கப் போகும் குழந்தைக்குத் தேவையான தொட்டில், மெத்தை, சட்டைகள், ஷீட், குல்லாய்கள், சாக்ஸ், கிலுகிலுப்பை, பொம்மைகள், ஆடும் குதிரை, ஸ்ட்ரோலர், மூன்று சக்கர மிதிவண்டி போன்ற விளையாட்டுப் பொருட்களை

முன்னதாகவே பரிசாகக் கொடுக்கிறார்கள். இதனால், தாய் மகிழ்ச்சியடைவதால் கர்ப்பத்தில் இருக்கும் குழந்தையும் மகிழ்ச்சியாக இருக்கிறது.

மருத்துவம் மேற்கொள்ளப் போதிய வசதி இல்லாத பெற்றோர்களுக்கு அரசின் செலவிலேயே மருத்துவம் செய்கிறார்கள். குழந்தையின் வளர்ச்சி, மூளை வளர்ச்சி அதன் அசைவுகள் முதலியவை துல்லியமாகப் பரிசோதிக்கின்றனர்.

அமெரிக்காவில் இடுப்பு வலியெடுத்து, குழந்தையின் தலை தெரியும் போதுதான், மருத்துவமனையில் சேர்த்துக் கொள்வார்கள். பிரசவமான மறுநாள் டிஸ்சார்ஜ பண்ணிவிடுவார்கள்.

இங்கு, ஒரு வியப்பான செய்தி. பிரசவத்தின் போது கணவனும் உடனிருக்கலாம். இதனால் மனைவியின் மகப்பேறு வலியை கணவன் நேரில் காண்கிறான். தாய்மையின் தியாகத்தை உணருகிறான்.

குழந்தைக்கு எப்படிப் பால் புகட்டுவது என்பதைத் தெளிவாக விளக்கிக் கூறுகிறார்கள். தாய்ப்பால் கொடுப்பதைக் கடமையாகச் செய்கிறார்கள்.

தாய்ப்பால் அதிகம் சுரக்கும் போது புட்டிகளில் சேமித்துப் பதமாக வைத்துக் கொண்டும், வேண்டும் போது குழந்தைக்குக் கொடுக்கும் வழக்கம் இங்கு இருக்கிறது. தாய்ப்பால் சேமிக்கும் வழக்கமும் உண்டு.

அமெரிக்காவில், குழந்தை பிறப்பது முக்கியம். அப்போதுதான் அவர்கள் அமெரிக்கப் பிரஜைகளாவார்கள். தம் குழந்தைகளை அமெரிக்கப் பிரஜைகளாக்கும்போது அவர்கள் இந்தியாவில் வந்து செட்டில் ஆகும் உரிமையைப் பறித்துவிடுகிறார்கள். இந்தியாவில் பிறந்து வளர்ந்தவர்களுக்கே இந்தியா திரும்பிச் செல்வது சில ஆண்டுகளில் மிகமிகச் சிரமமாகிறது.

இந்தக் குழந்தைகள் அமெரிக்காவில் வளர்ந்து தாய்மொழி தெரியாமல் ஆங்கிலம் மட்டும் தெரிந்து வீட்டில் ஒரு கலாச்சாரம் வெளியே மற்றொரு கலாச்சாரம் என்கிற இருநிலையில் இந்திய மதிப்புகளுக்கும், அமெரிக்க மதிப்புகளுக்கும் உள்ள முரண்பாட்டின் இடையில் வாழ்ந்து வளரும்.- இவர்களுக்குச் சொந்த நாட்டின் கதவுகள் பிறக்கும் போதே மூடப்பட்டுவிட்டன என்று நினைக்கும்போது வருத்தமாகத் தான் இருக்கிறது.

பேரக்குழந்தைகளிடம் அன்பு காட்டலாம். ஆனால், அவர்கள் பேசும் ஆங்கிலம் புரிய வேண்டும். பேரக் குழந்தைகளிடம் அதிகப் பாசம் வைத்தால் சில சமயம் அது சிக்கலிலும் விடும்.



# 20

# குழந்தைகள் வளர்ப்பு

* ***"அமெரிக்க நாட்டுப் பெண்களின் தூய்மைதான் எவ்வளவு உயர்ந்தது தெரியுமா? இருபது இருபத்தைந்து வயதாகுமுன்னர் எந்தப் பெண்ணும் மணம் செய்து கொள்வதில்லை. வானத்துப் பறவைகள் போல இவர்கள் திரிகிறார்கள். பள்ளிக்கும், கல்லூரிக்கும் போகிறார்கள் பணம் சம்பாதிக்கிறார்கள் எல்லா விதமான வேலைகளையும் செய்கிறார்கள். ஆனாலும் என்ன தூய்மை! செல்வம் படைத்தவர்கள் இரவு பகலாக ஏழைகளுக்கு உதவுவதில் முனைந்துள்ளார்கள்."***

**–சுவாமி விவேகானந்தர் – ஞானபூமி பாகம் 12 –பக். 313**

இன்றைய குழந்தைகள் தான் நாளைய உலகம். எனவே, அமெரிக்காவில் குழந்தைகள் வளர்ப்புக்குத் தனிக் கவனம் செலுத்து கிறார்கள். பிறந்த முதல் ஆண்டு வரை தாய் தன் வீட்டில் இருந்து கொண்டு குழந்தையைப் பாலூட்டி வளர்க்கிறாள்.

இங்கு, பெரும்பாலும் இருவரும் வேலைக்குச் செல்வதால், சில மாதங்கள் கழிந்த பின்னர்க் குழந்தையை அருகில் உள்ள 'பேபி சிட்டிங் சென்டர்' என்றோ 'நர்சிங் சென்டர்' என்றோ இடங்களில் விட்டுச் சென்று சில மணி நேரங்கள் கழித்துப் பின்னர் திரும்ப வந்து வீட்டுக் அழைத்துச் செல்கின்றனர். சில தனியாரும் குழந்தைகளைப் பராமரித்து வருகின்றனர்.

சில மாதங்கள் கழித்தபின்னர் குழந்தை நடக்கத் தொடங்கிய பின்னர் வேலைக்குப் போகிறவர்கள் தங்கள் குழந்தையை காலை யிலேயே 'ப0கல் நேர பாதுகாப்பபு இல்லத்தில்'' (டே கேர் சென்டர்)

காரில் அழைத்துச் சென்று விட்டு விட்டு வேலைக்குப் போகின்றனர். வீட்டுக்கு மாலையில் திரும்பும் போது மறுபடி வந்து குழந்தையைத் தாய் அழைத்துச் செல்கிறார்.

குழந்தைகளைப் பாதுகாக்கும் இடங்களில் யாரும் குழந்தை களைதுன்புறுத்தவோஅடிக்கவோகூடாது. ஏதாவதுகாயம்இருப்பதைக் கண்டால் உடனே அங்குள்ள ஆசிரியர் அருகில் உள்ள காவல்துறைக்குத் தெரிவிக்க வேண்டியது சட்டப்படியான கடமையாகும். அதைச் செய்யாவிடில் அவரும்தண்டிக்கப்படுவார். குழந்தைகளை அரசு மிகவும் பாதுகாப்புடன் காக்கின்றனர்.

குழந்தை பிறந்த பின்னும், ஆண்டுதோறும் வரும் பிறந்த நாட்களின் போதும், கொண்டாட்டங்களும் பரிசளிப்புகளும் தொடர்கின்றன. குழந்தை வளர வளர அந்தந்த வயதுக்கேற்ற பரிசுகளாகக் கொடுக்கின்றனர்.

இந்த சென்டர்களில் குழந்தைகளுக்கு தேவையான அனைத்து வசதிகளும் உணவும் கொடுக்கிறார்கள். இதற்குரிய கட்டணத்தை வசூலித்துக் கொள்கிறார்கள்.

குழந்தைகளின் உடல் சுத்தம் பராமரிப்பதில் மிகவும் கவனம் செலுத்துகிறார்கள். ஒருவயது குழந்தைக்கு டிஸ்யூ பேப்பர்உபயோகிப்பது எப்படி- டாய்லெட் போவது எப்படி?- என்று கற்றுக் கொடுத்து விடுகிறார்கள்.

மேலும், ஸ்பூன் மூலமே சாப்பிடும் பழக்கம் ஏற்படுத்தி விடுகிறார்கள். இருப்பினும், அவ்வப்போது கைகளைக் கழுவி சுத்தப் படுத்துகிறார்கள்.

இங்கு, குழந்தையை தனியாக அறையில் படுக்க வைக்கிறார்கள். குழந்தை ஒரு அறையிலும், தாய் ஒரு அறையிலும் இருப்பார்கள். பெரும்பாலும் அமெரிக்கர்கள் குழந்தைகளுக்குத் தனி அறைகளை ஒதுக்கி விடுகிறார்கள்.

பெற்றோர்களுக்குதனிஅறை. பெண்குழந்தைகளுக்குத்தனிஅறை. ஆண் குழந்தைகளுக்கு தனி அறை. இரண்டும் பெண்ணாகவோ அல்லது ஆணாகவே இருந்தால் அவர்களுக்கு ஒரே அறை ஒதுக்கி வளர்க் கிறார்கள். அதே சமயத்தில் தாய்க்கும், குழந்தைக்கும் தொடர்பு உண்டு.

குழந்தை முணுமுணுக்கும் சத்தம் கூடக் கேட்குமாறு அனைத்து அறைகளிலும் ஒலிபெருக்கி மற்றும் இண்டர்காம் பொருத்தப்

பட்டிருக்கும். குழந்தைகளுக்கெனத் தனி அறை ஒதுக்கினாலும் அவர் களின் கல்வி மற்றும் உடல் ஆரோக்கியம் எதிர்காலம் பற்றி முன்பே அழகாகத் திட்டமிடுகின்றனர். அவர்களது நடவடிக்கைகளை உன்னிப்பாகக்கவனித்துச்சிறந்த அமெரிக்க பிரஜைகளாக வளர்க்கின்றனர்.

குழந்தைகளின் உடல் வளர்ச்சியை விட, மன வளர்ச்சிக்கே முன்னுரிமை தருகின்றனர். ஆடைகள் அழகாக உடுத்தப் பழக்குகிறார்கள். விலை உயர்ந்த விளையாட்டுச் சாமான்கள் வீடு நிறைய வைத்திருக் கிறார்கள். மரச்சுவர்களில் குழந்தைகள் பார்க்கும் வண்ணம் -வண்ண விளையாட்டுப் பொம்மைகளும் உண்டு. ரிமோட்டில் இயக்கும் பொம்மை களும் உண்டு.

சிறு குழந்தைகளைப் பெற்றோர்கள் மாலையில் ஸ்ட்ரோலர் களில் வைத்தோ நடத்தியோ பூங்காக்களுக்கு அழைத்துச் செல்கிறார்கள்.

அங்கு, மற்ற குழந்தைகளுடன் ஓடி விளையாடவும் சறுக்கு களில் இறங்கவும், படிகளில் ஏறி இறங்கவும் வாத்து, யானை, கோழி போன்ற உருவங்களில் ஏறி முன்னும் பின்னும் ஆடவும் காரில் உள்ள ஸ்டியரிங் போன்ற பூங்காக்களில் உள்ள சக்கரத்தைச் சுற்றவும் பந்துகளைப் பொறுக்கி எறிந்து விளையாடவும் வாய்ப்பு ஏற்படுத்தித் தருகின்றனர். ஊஞ்சல்களில் வைத்து ஆட்டிப் பயத்தை அந்த வயசிலேயே போக்குகிறார்கள்.

தற்சமயம், பல இடங்களில் விளையாட்டு மையங்கள் உள்ளன. இங்கு ஏராளமான விளையாட்டுகள் குழந்தைகளுக்கு உள்ளன.

குறிபார்த்துப் பந்து எறிதல், வளையத்தை எறிதல், பந்துகளில் மத்தியல் குதித்தல், பலூன்களை சுடுதல், வேகக் கார்களைக் கட்டுப் படுத்தி ஆபத்தில் சிக்கலாமல் முன்னேறுதல், ஓரிடத்தில் புகுந்து வேறு இடத்தில் வெளியேறுதல் போன்ற ஏராளமான விளையாட்டு களில் குழந்தைகளைப் பயிற்றுவிக்கின்றனர்.

குழந்தைச் சற்றுப் வளர்ந்தபின் ஹெல்மெட் அணிந்து இரு சக்கர மிதி வண்டிகளை ஓட்டி வருகிறார்கள்.

கால்களில் சக்கரம் உள்ள ஷூக்களை அணிந்து வேகமாக நடந்து பார்களில் பல பயிற்சிகளையும் குழந்தைகள் செய்கிறார்கள்.

கோடை காலங்களில் நீச்சல் குளங்களில் குழந்தைகளுக்கு நீச்சல் கற்றுத் தருகிறார்கள். அனைத்து நிகழ்ச்சிகளிலும் பெற்றோர் கூடவே இருந்து கண்காணிக்கின்றனர்.

குழந்தைகள் ஐந்து வயதாகும் முன்னரே பழகிக் கொள்வதால் பின்னர், அவர்கள் சுயமாகவே எதையும் சிந்தித்துச் செயலாற்றும் தன்னம்பிக்கை உடைய ஆற்றலைப் பெறுகிறார்கள். இவையெல்லாம் சாதாரணமாக மத்திய தர குடும்பங்களிலேயே அன்றாடம் நடந்து வருவதைக் கண்கூடாகப் பார்த்தேன்.

என் பேத்திக்கென்று ஒரு அறை இருக்கிறது. அறை முழுவதும் விளையாட்டுச் சாமான்கள் இறைந்து கிடக்கும். புத்திக் கூர்மையை வளர்க்கும் விளையாட்டுப் பொருட்கள் ஏராளமாக இருக்கும். அதனை குழந்தைகள் நேர்த்தியாக விளையாடும் அழகைப் பார்த்துக் கொண்டே இருக்கலாம்.

குழந்தைகளைப் பார்க்க வரும் நண்பர்களும் உறவினர்களும் விலை உயர்ந்த விளையாட்டுக் கருவிகளைப் பரிசளிப்பார்கள்.

குழந்தைகள் விளையாடும் போது உடைத்து விடுமோ என்ற பயமே வேண்டாம். ஏன் எனில் அங்குள்ள அனைத்துப் பொருட் களும் தரமாக இருக்கும்.


நான் கடைவீதிகளில் செல்லும் போது, அங்கு வரும் குழந்தை களைப் பார்க்கும் போது, அசைந்தாடி வரும் பொம்மைகள் தான் நினைவுக்கு வரும். அவ்வளவு அழகாக ஆடையுடுத்தி அழகாகஅழைத்துச் செல்லும் காட்சி பார்க்கப் பார்க்கப் பரவசமாகிவிடும்.

குழந்தைகளில் ஆடைகளுக்கு தகுந்தவாறு காலணிகளையும் அணிந்து வரும் அழகே அழகு. நம்மூர் போல் அடம் பிடிக்கும் குழந்தைகளை நான் பார்க்கவே இல்லை. பெற்றோர்கள் கடை களுக்கு அழைத்துச் சென்று பொருட்களை வாங்க பணம் கொடுக்கவும் பயிற்சி தருகிறார்கள்.

உணவகங்களில் ஐஸ்கீரிம் சாப்பிடும் குழந்தைகள் அவற்றை சிந்தாமல் சிதறாமல் சாப்பிடுவது கண்டு ரசிப்பேன்.

இங்குள்ள குழந்தைகள் தங்கள் பெற்றோர் பெயர், வீட்டு விலாசம், படிக்கும் பள்ளியின் பெயர், வீட்டு தொலைப்பேசி எண், புதிதாகப் பார்ப்பவர்களின் பெயரைக் கேட்டறியும் திறன் ஆகிய வற்றை கொண்டுள்ளனர். இது இவர்களைத் தன்னம்பிக்கை மிக்க குழந்தைகளாக வளர்வதற்கு உதவியாக அமைகின்றன.

குழந்தை வளர்ப்பதில் அமெரிக்கர்களுக்கு ஈடு அமெரிக்கர்களே என்று சொல்லும் வண்ணம் கொஞ்சமும் குறைவின்றிப் பெற்றோர்கள் செயல்படுகின்றனர்.



கருப்பு மலைகள் – சவுத்டக்கோடா

பேத்தி ஆகான்ஸா

# 21



# அமெரிக்காவில் இளையோர் கல்வி

* *இந்த நாட்டில் மூட்டை தூக்கி வாழும் ரயில் நிலையக் கூலி ஒருவன் உங்கள் நாட்டு இளைஞர் பலரையும் விட, உங்கள் இளவரசர்கள் பெரும்பான்மையோரை விட, அதிகமாகக் கல்வி கற்றுள்ளான். இந்துப் பெண்களுள் பெரும்பான்மையினர் எண்ணிப் பார்க்கக்கூடிய அளவுக்கும் அதிகமான கல்வியை ஒவ்வொரு அமெரிக்கப் பெண்ணும் பெற்றுள்ளார். நாமும் அந்தக் கல்வியை ஏன் பெற முடியாது? அதை நாம் பெற்றேயாக வேண்டும்?."*

**–சுவாமி விவேகானந்தர் – ஞானதீபம் பாகம் 12 – பக். 308**

அமெரிக்காவில் ஐந்தாம் வகுப்பு வரை இளையோர் கல்வி கற்பிப்பதை நேரில் பார்த்து வியப்படைந்தேன்.

அமெரிக்காவில், பள்ளிப் படிப்பிற்குரிய வயது அடைந்த எல்லாக் குழந்தைகளையும் பள்ளிக்கு அனுப்புவது பெற்றோர்களின் சட்டப்படியான கடமையாகும். தவறினால் தண்டனையும் உண்டு.

பள்ளியில் குழந்தைகள் தைரியமாகப் பேசக் கற்றுத் தருகின்றனர். ஆசிரியரையும் மற்றவர்களையும் பெயர் சொல்ல ஆனால், உரிய மரியாதையுடன் அழைக்கிறார்கள்.

இங்கு, ஆசிரியர்கள் எக்காரணத்தினாலும் மாணவர்களை அடிக்கக் கூடாது. பெற்றோர்கள் குழந்தைகளை அடிப்பது குற்றமாகக் கருதப்படுகிற நாடு இது.

இங்கு கற்பிக்கும் முறைகள் என்னை வெகுவாகக் கவர்ந்தன.

* ஒரு வரிசைக் கிரமத்தில் படங்கள் மற்றும் எண்களைக் கொடுத்து அது முறையில் அடுத்து வரவேண்டிய படங்களையும், எண் களையும் யூகித்துக் குறிக்குமாறு பயிற்சி தருகின்றனர்.

* அறிவியல், கணக்குப் பாடங்களில் மாணாக்கர்கள் திறமையை வளர்க்கும் வண்ணம் பாடங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

* கணக்குப் பாடத்தில், 3ஆம் கிரேட் பள்ளி மாணவர்களுக்கே கால் அரை முக்கால் ஒன்று தசம் பின்னம் போன்றவற்றைச் சொல்லித் தருகிறார்கள்.

* ஒரு வட்டம் வரைந்து, அதன் பாகங்களைப் பிரித்துக் காண்பித்து அவற்றில் மாறுபாடுகளைச் சொல்லிக்கூட்டியும் கழித்தும் பாடங்கள் கற்றுத் தருகிறார்கள்.

* நீளத்தை ஸ்கேல் மூலம் அளக்கக் கற்றுத் தருகின்றனர். சில பொருட்களை அவர்களாகத் தேர்வுசெய்து அளந்து காண்பிக் கிறார்கள். நாள்தோறும், பயன்படுத்தும் பல பொருட்களில் படங்களைக் கொடுத்து முதலில் அதன் நீளத்தை மனதினால் யூகித்து, குறித்து விட்டு பிறகு அதனை அளந்து சரிபார்த்து ஒப்பிட்டுத் தெரிந்து கொள்ளுமாறு பயிற்சி தருகிறார்கள்.

* மாணவர்களின் ஐந்து வருட தேர்வு விகிதங்களை ஒப்பிட கிராஃப் என்ற கட்டத்தாள்களின் உதவியால் விளக்கச்சந்தர்ப்பம் தருகிறார்கள். இதனை, மூன்றாம் வகுப்பிலேயே சொல்லித் தருகின்றனர்.

* 'பிங்கோ' என்ற விளையாட்டில் சிறிய சதுர அட்டைகளில் அச்சிடப் பட்டுள்ள பல ரக காசுகளை, அதே போல பிங்கோ அட்டையில் அச்சடிக்கப்பட்டுள்ள காசுகளோடு சேர்த்து வைக்கச் சொல்லு கின்றனர். யாருக்கு ஒரு வரிசையில் முதலில் பிங்கோ கிடைக்கிறது என்று விளையாட்டாகவும், அதே நேரத்தில் சில்லரை செலாவணி களைத் தெரிந்து கொள்ளவும் பயிற்சி தருகிறார்கள்.

ஐந்தாம் வகுப்பு வரை பல விஷயங்களில் மாணவர்கள் யூகித்துச் செயல்படும் திறன் வளர்ப்பதாகவே கல்வி முறை அமைந் துள்ளது. அமெரிக்காவின் ஆரம்பக்கல்வி பலமான அஸ்திவாரம் போன்று அமைக்கப்பட்டுள்ளது.

நம் ஊர் அரசுக் கல்லூரியைவிட, இங்குள்ள ஆரம்பப் பள்ளிக் கட்டிடங்கள் மிகப்பிரமாதமாகக் கட்டப்பட்டுள்ளன.

அதில் குழந்தைகளுக்கு ஏற்ற வகையில் மேசை நாற்காலிகள் சிறியதாக அமைக்கப்பட்டுள்ளன. குழந்தைகள் புத்தகங்கள் வைக்க ஒவ்வொரு வகுப்பு அறையிலும் தனி இடமும்-மேலணிகளைக் கழற்றி மாட்டி வைக்கும் வசதிகளும் செய்யப்பட்டுள்ளன.

அனைத்து வகுப்பு அறைகளும் குளுகுளு ஏசியில் உள்ளன. குளிர்க் காலங்களில் ஹீட்டிங் வசதி செய்துள்ளனர்.

இங்கு, பள்ளிகள் செம்பம்பர் மாதத்தில் தொடங்கி அடுத்து வருடம் ஜுலையில் நிறைவடைகின்றன. பள்ளியில் குழந்தைகள் சேருவதற்கு அவர்களின் பெற்றோர் பள்ளி அமைந்துள்ள பகுதியில் வசிப்பவராக இருக்க வேண்டும்.

அக்டோபர் முதல் தேதியில் ஐந்து வயதைப் பூர்த்தி அடைந்து அடையக்கூடிய குழந்தைகள்-கிண்டர்கார்டன் என்ற (முதல் வகுப்புக்கு முன்னாலான) தொடக்க வகுப்பில் சேர்த்துக் கொள்கின்றனர்.

குழந்தைகள் பள்ளியில் சேருவதற்கு முன்னதாகவே, பெற்றோர்கள் தங்கள் குழந்தைக்கு அதன் முதற் பெயர், கடைசிப் பெயர் பெற்றோரின் பெயர்கள், வீட்டு தொலை பேசி எண், படிக்க இருக்கும் பள்ளியின் பெயர் இவற்றை சரியாகவும் தெளிவாகவும் சொல்லிப் பழக்கப் படுத்தி விடுகின்றனர்.

ஆரம்பப் பள்ளியில் சேர விண்ணப்பம் தாக்கல் செய்யும்போது பிறந்த தேதிக்கான சான்று, உடல் ஆரோக்யத்துக்கான சான்று, குடியிருப்பை நிரூபிக்கும் இரண்டு சான்றுகள், தடுப்பு ஊசிகள் போடப்பட்டதற்கான சான்று, இவற்றை இணைத்து அனுப்புகின்றனர்.

புத்தகப் படிப்பிற்கும், எழுதுவதற்கும், கணக்குகள் போடவும், ஆர்ட் பெயிண்டிங், நுண்கலைகள், உடல் ஆரோக்கியம் முதலான வற்றில் பள்ளியில் சிறப்பான கவனம் செலுத்துகிறார்கள்.

குழந்தைகளின் சிந்தனைத் திறன், கற்பனைத் திறன் வளர்க்கப் பயிற்சி தருகிறார்கள்.

படிப்பில் சற்றுக் குறைந்த குழந்தைகளின் மேல் சிறப்புக் கவனம் செலுத்துகிறார்கள். வருட இறுதிக்குள் மற்றவர்களுக்கு இணையாக அவர்களைத் தயார் செய்துவிடுகின்றனர்.

மாணவர்கள், மேல் நிலைப் படிப்பு முடித்து வெளி வரும் போது, குறைந்த பட்சம் 90 சதவீதம் தேர்ச்சி அடைந்திருக்க வேண்டும்

என்ற குறிக்கோளுடன் பாடத்திட்டம் அமைக்கப்பட்டுள்ளது. அதற்கான தகுதியை முதல் ஐந்து வகுப்பிலேயே அமைத்துத் தருகின்றனர்.

வகுப்பு என்பதை இங்கு கிரேட் என்று கூறுகிறார்கள்.

மாணவர்கள் வரிசையாகச் சென்று பஸ்ஸில் ஏறுவதற்கும், இறங்குவதற்கும், சாலையைக் கடக்கவும் பள்ளியில் கற்றுக் கொடுக்கப் படுகிறது. மாணவத் தலைவர்கள் பேருந்து நிற்கும் இடங்களில் இருந்து தொண்டு செய்கின்றனர்.

பேருந்துகளில் ஏ. சி. வசதியும் ஷீட்டிங் வசதிகளும் உள்ளன. பயணம் செய்யும் மாணவர்கள் அதற்கான அட்டையை வைத்திருக்கின்றனர்.

அரசுப் பள்ளியிலிருந்து இரண்டு மைல் தூரத்திற்கு மேல் வசிக்கும் குழந்தைகளுக்கு பத்திரமான இலவச பஸ் வசதி தருகிறார்கள்.

மூன்றாம் கிரேடும், அதற்கு மேல் படிக்கும் மாணவர்கள் கால நிலை நன்றாக உள்ள நாட்களில் தலையில் ஹெல்மெட் அணிந்து மிதிவண்டிகளில் வர அனுமதிக்கப்படுகிறார்கள்.

பள்ளியில் பாடப் புத்தகங்களை இலவசமாகத் தருகின்றனர். ஒவ்வொரு மாணவருக்கும் தனி அலமாரி வகுப்பறைகளில் தந்துள்ளார்கள். நம்மூர் மாதிரி புத்தக முட்டையைச் சுமக்க வேண்டியதில்லை.

ஒவ்வொரு வகுப்பிலும் கம்ப்யூட்டர் வைத்து அவற்றை அறிந்து கொள்ளவும், கையாளவும், அணுகவும் அனுமதிக்கிறார்கள். தற்காலம் மற்றும் எதிர்காலத்தின் அடிப்படையில் குழந்தைகளுக்கு பாடங் களைப் போதிக்கின்றனர்.

பள்ளிக்கு வராத நாட்களுக்கு விடுப்பு விண்ணப்பம் அனுப்ப வேண்டும். தொடர்ந்து, வராவிட்டால் நிர்வாகம் பெற்றோர்களுக்கு போனில் தொடர்பு கொண்டு காரணம் கேட்பார்கள்.

குழந்தைகளின் பாதுகாப்பைக் கருத்தில் கொண்டு கால நிலையைக் கருத்தில்கொண்டும் வகுப்புகள் தொடங்கியவுடன் எல்லா பள்ளிக் கதவுகளையும் மூடிவிடுகின்றனர்.

தாமதமாக வருபவர்கள் அலுவலகத்தின் அனுமதி பெற்று மெயின் வாசல் வழியாக மட்டுமே உள்ளே வர அனுமதிக்கிறார்கள்.

பெற்றோர்கள், தங்கள் பிள்ளைகளைப் பார்க்கப் பள்ளிக்கு வரவேற்கப்படுகிறார்கள். ஆண்டிற்கு இரண்டுமுறை பெற்றோர் ஆசிரியர்

கூட்டங்கள் நடத்துகின்றனர். இக்கூட்டத்தில், குழந்தைகள் மற்றும் பள்ளியின் மேம்பாட்டினைப் பற்றிப் பெற்றோர்கள் தங்கள் கருத்து களைப் பதிவு செய்கிறார்கள்.

அதே போல் உள்ளே வரும் பெற்றோரும் மற்றோரும் பள்ளி யிலுள்ள பார்வையாளர்கள் பதிவேட்டில் பெயர், வந்த காரண,வந்த நேரம், யாரைப் பார்க்க, எதற்குப் பார்க்க போன்ற விபரங்களை எழுதிப் பார்வையாளர் சீட்டை அணிந்து குழந்தையின் வகுப்பறைக்குச் செல்ல வேண்டும்.

ஐந்தாம் கிரேடு மாணவர்களுக்கு மேல் வகுப்புக்குச் செல்லும் போது, கிராஜீவேசன் சர்டிபிகட் கொடுக்கிறார்கள். அப்போது, சர்டிபிகேட் வாங்கிக் கொள்ளும் போது நடந்து கொள்ள வேண்டிய வழி முறைகளை மற்ற குழந்தைகள் முன்னிலையில் பள்ளியில் நடத்திக் காட்டிப் பயிற்சி தருகின்றனர். இதனால் மாணவர்களில் திறமையும் தன்னம்பிக்கையும் சிறப்படைகிறது.

பள்ளியில் உடற் பயிற்சிக்கு அறை, கணினிகள் பரிசோதனைக் கூடங்கள், ஆடிடோரியம், சாப்பாடு ஹால், வெளி விளையாட்டு இடங்கள், கழிப்பறை வசதிகள் சுத்தமாக அமைக்கப்பட்டுள்ளன.

உடற்பயிற்சியை முக்கிய பாடமாக சொல்லித் தருகின்றனர். ‘ஜிம்’ கற்றுத்தருகிறார்கள். நாள்தோறும், வெளியில் சென்று விளையாட ஏற்பாடு செய்துள்ளனர். மாணவர்களிடையே சகோதர மனபான்மையை வளர்க்குமளவிற்குப் பாடத்திட்டங்களும் மற்றவைகளும் அமைக்கப் பட்டுள்ளன.

நாள்தோறும் காலையில் கொடி வணக்கம் செய்வதுடன் தேசிய ஒற்றுமைக்கான உறுதி மொழியை ஒன்றுபட எடுத்துக் கொள்கின்றனர்.

காலை உணவு, மதிய உணவு, இவை இலவசமாகவோ குறைந்த விலையிலே பெற்றோர்கள் வருமானத்துக்கேற்ப வழங்குகிறார்கள்.

வீட்டிலிருந்து உணவு கொண்டு வந்து சாப்பிடவும் அனுமதி உண்டு. பால், பிஸ்கட் போன்றவைகள் பள்ளியிலேயே வாங்கிக் கொள்ளலாம்.

குழந்தைகளின் பெற்றோர்கள் தங்கள் குழந்தைகளின் பிறந்த நாளை பள்ளியிலேயே கொண்டாட விரும்புகின்றனர். இதற்குப் பள்ளி ஆசிரியரிடம் முன் அனுமதி பெற்றுக்கொள்கிறார்கள். மற்ற பிள்ளைகள் மத்தியில் பிறந்த நாள் பாட்டுப் பாடி, கேக் வெட்டி சேர்ந்து சாப்பிட்டு சிறப்பாகக் கொண்டாடுகின்றனர். நூலகத்திற்குச் சிலர் புத்தகங்களைப் பரிசாகத் தருகின்றனர்.

பிரெஞ்சு, ஸ்பானிஷ் மொழிகளை அதற்கான ஆசிரியர்களால் கற்றுத் தருகின்றனர். உலகத்தின் தேசப்படங்களைக் காண்பித்துத் தேசங்களில் எல்லைகள், ஆறுகள், மலைகள், தீவுகள், கடல்கள், பாலைவனங்கள் போன்றவைகளை வகுப்பறைகளில் விளக்குகின்றனர்.

மாணவர்கள் தங்களைப் பற்றி மட்டுமல்லாமல், பிறருடைய எண்ணங்களையும், திறமைகளையும் மதிப்பிடக் கற்றுத் தருகின்றனர்.

ஐந்தாம் கிரேட் மாணவர்களுக்கு விருப்பப்பட்டால் பாட்டுகள் பாட வாத்தியங்கள் கற்கக் கற்றுக் கொடுக்கிறார்கள். க்ளேரினெட்கள், டிரம்கள், புளூட், சாகஸ்போன், ட்ராமபோன் போன்றவற்றைக் கையாளக் கற்றுத் தருகின்றனர்.

நாள்தோறும் 30 நிமிடம் வரை, இப்பயிற்சி நடைபெறுகிறது. மாணவர்கள் தங்கள் திறமையை வெளிப்படுத்தும் வாய்ப்புகளை வெளியிடங்களில் ஏற்படுத்தித் தருகின்றனர்.

குழந்தைகளைப் பெரிய கடைகளுக்கு அழைத்துச் சென்று பொருட்களை வாங்கவும், வாங்கியவற்றுக்கான பணம் கொடுக்கவும் பயிற்சி தருகிறார்கள்.

22



# அமெரிக்காவில் மருத்துவம்

* ***"அமெரிக்க நாட்டைச்சேர்ந்த பெண்கள் பலவேலை செய்து சம்பாதித்து வருகின்றனர். ஒருவர் மற்றவரைச் சார்ந்து பிழைப்பதில்லை. கோடீசுவரர்களின் மகள்களும் வேலை செய்து பிழைக்கிறார்கள் பின்னர், திருமணம் செய்து கொண்டு தனிக்குடித்தனம் நடத்துகிறார்கள்"***

**சுவாமி விவேகானந்தர் – ஞானதீபம் பாகம் 12 – பக் 215**

அமெரிக்காவில் சிகிச்சைக்குத்தான் முதலிடம் அளிக்கிறார்கள். கட்டணங்கள் அதிகமிருந்தாலும் வசூலிப்பது அடுத்துதான். மருத்துவர்களும் மற்றவர்களும் மனிதாபிமானத்துடன்கடமைகளைச்செய்கின்றனர். அதனால், நோயாளிகள் நிம்மதியுடன் சிகிச்சைப் பெறுகின்றனர்.

மருத்துவமனையில் சேரும் போது நம் உடல் நிலை, ஏற்கனவே பெற்ற சிகிச்சைகள் ஒவ்வாமை மருந்துகள் போன்ற பல விபரங்களை கேட்டறிந்து குறித்துக் கொள்கிறார்கள்.

மருத்துவர்களும், செவிலியர்களும், நோயாளிகளை அணுகும் போது, தங்களை இன்னார் என்று பெயர்கூறி அறிமுகம் செய்து கொண்டு என்ன பணி மேற்கொள்ள வந்திருக்கிறார் என்பதைப் பொறுப்புடன், கடமையுணர்வுடன் நமக்குக் கூறுகிறார்கள். நாம் கூறுவதையும் கவனமாகக் கேட்கிறார்கள்.

நமது சந்தேகங்களை முழுமையாகக் கேட்கிறார்கள். நாம் புரிந்துகொள்ளும்படி விளக்கம் தருகிறார்கள். சிகிச்சை முடிந்ததும் வாழ்த்தி வழியனுப்புகிறார்கள். சிகிச்சையை விட வாழ்த்து சரியான மருத்துவமல்லவா?

மருத்துவத்தின் போது நோயாளிகளுக்கு ஏதாவது கெடுதல் நேர்ந்து விட்டால் மருத்துவர் மீது வழக்குப் போட அமெரிக்கர்கள் தயவு தாட்சண்யம் பார்க்க மாட்டார்கள்.

இழப்பீடாக அவர்கள் கேட்கும் பணத்தை மருத்துவர் அவர்களுக்குக் கொடுப்பதைத் தவிர வேறு வழியில்லை.

ஆனால், மருத்துவர் இழப்பீடு தர வேண்டியிருந்தால் அதை இன்ஸ்யூரன்ஸ் கம்பெனி தந்துவிடும்.

அமெரிக்க மருத்துவமனை அனைத்தும் 5 ஸ்டார் அந்தஸ்துள்ள ரெஸ்டாரண்ட் போலவே காட்சியளிக்கின்றன.

இங்குள்ள மருத்துவமனைகளில் பணம் கட்டினால்தான் சேவை என்பதல்ல. உடற் சோதனைகளும் மருத்துவமும் மருத்துவர் களால் மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட உடனே மேற்கொள்கின்றனர்.

இங்கிருப்பது போல் உடன் வந்தவர்களிடம் நோயாளிக்குத் தேவைப்படும் மருந்துகள் உபகரணங்களை வாங்கிவரச் சொல்லி பின் மருத்துவம் பார்ப்பதில்லை.

ஒரு மருத்துவ மனையில் தலைமை மருத்துவர் இல்லாத சமயத்தில் அவருடைய உதவியாளர்கள் நோயாளிகளின் இருதயத் துடிப்பு இருதயம் இயங்கும் விதம் எல்லாவற்றையும் வீடியோ கேமரா மூலம் பதிவு செய்து விடுகிறார்கள்.

பின்னர் தலைமை மருத்துவர் வந்தவுடன் அவற்றைக் காட்டி நோயாளிக்குச் சிகிச்சை அளிக்கிறார்கள்.

மயக்க மருந்து, அறுவை சிகிச்சை, மருந்து நிர்ணயித்தல், பார்வையிடுதல், ரத்த மற்றும் பரிசோதனைகளை ஆய்வு செய்தல், எக்ஸ்ரே ஸ்கேன் போன்றவற்றிற்கான தொகைகளை மருத்துவமனை பில்களில் சேர்ப்பதில்லை. மருத்துவர்கள் அவற்றை இன்ஷ்யூரன்ஸ் நிறுவனத்திடமிருந்து பெற்றுக் கொள்கின்றனர்.

அமெரிக்கர்கள் அனைவருமே உடல் நலத்தை மிகக் கவனமாகக் கவனித்துக் கொள்கிறார்கள். ஒரு சாதாரணத் தலைவலி என்றால் கூட அவர்கள் வெறும் தலைவலி தானே என்று விட்டு விடுவதில்லை. மருத்துவரிடம் வந்து விடுகிறார்கள். அலுவலகத்திலும் அவர்களுக்கு விடுமுறையும் கிடைத்து விடுகிறது.

இளவேனிற் காலத் தொடக்கத்தில் இங்குள்ள மரங்கள் ஏராளமான பூக்கள் பூக்கும். இவற்றின் மகரந்த தூள்கள் காற்றினால் எங்கும் பரவி, அதனால் ஜலதோஷம், இருமல் போன்ற பாதிப்புகள் ஏற்படும்.

இந்நிலை இலையுதிர் காலமான அக்டோபர் மாதத்திலும் ஏற்படும். முக்கிய குளிர் மாதங்களான சனவரி பிப்ரவரி மாதங்களிலும் பனி அதிகமாகப் பெய்வதனாலும் சூரியன் இருந்தும்பனி உறைக்காத தனாலும் பெய்த பனி உருகாமல் இருக்கும்.

இந்நாட்டில், மருத்துவப் படிப்பிற்குச் செலவு மற்ற நாடுகளை விட அதிகம். அதே போல், மருத்துவர்களின் வருமானமும் இங்கு அதிகம். மருத்துவ மனைகளிலும் தனியாகவும் மருத்துவர்கள் பணி புரிந்து வருகின்றனர்.

இங்கு வேலைகளுக்கு அதிகம் சம்பளம் கிடைப்பது போல மருத்துவச் சிகிச்சைக்கு அதிகமாகச் செலவாகும். அதனால் இங்கு பணி புரிபவர்களிடம் பிற்காலத்தில் ஏற்படக்கூடிய மருத்துவச் செலவு களை ஈடுகட்டுவதற்காக வருமானத்தில் ஒரு பகுதியினை 'சோஷல் செக்யூரிடி' என்ற கட்டாயப் பிடித்தம் செய்யப்படுகிறது.

இதனால், மருத்துவச் செலவு அனைத்தும் அரசினுடையது. எனவே, செலவைப் பற்றிக் கவலைப்படாமல் அவர்களால் மருத்துவம் செய்துகொள்ள முடிகிறது.

வருமானம் இல்லாத -இன்ஸ்யூரன்ஸ் கட்ட வசதி இல்லாதவர் களுக்கு அந்த நபரின் நாட்டின் சட்டங்களினால் நிர்ணயிக்கப்பட்டுச் செயலாக்கப்படுகின்ற 'மெடிக் எய்டு' திட்டத்தின் கீழ் சில சலுகை களுடன் சிகிச்சை பெறலாம்.

இயலாதவர்களுக்கும், முடியாதவர்களுக்கும் உதவிக்கரம் நீட்டிக் குடிமக்களின் துன்பத்தைப் போக்குகின்றனர். மருத்துவர்கள் மனிதாபிமானத்துடன் நடந்து கொள்கின்றனர்.

ஓய்வு பெற்றபின் அவர்களுக்கு சோஷல் செக்யூரிடி மூலம் ஓய்வூதியமும், அரசின் 'மெடிகேர்' திட்டத்தின் மூலமாக ஓய்வு பெற்றவர் களுக்கு மருத்து வசதிகளும் கிடைக்கின்றன.

இங்கு பணி புரிபவர்கள் தங்கள் குடும்பத்தினர் மருத்துவச் செலவுகளைச் சமாளிப்பதற்காகப் பொது மருத்துவம், கண் மருத்துவம், பல் மருத்துவம் போன்ற இன்ஸ்யூரன்ஸ் பாலிசிகளை எடுத்துக் கொள்கின்றனர். மாதச் சம்பளத்தில் மெடிக்கல் பாலிசிக்காக ஒரு குறிப்பிட்ட தொகையைச் செலுத்தி விடுகின்றனர்.

'மெடிகேர்' திட்டத்தினால் மருத்துவமனைக்கு வெளியே செய்து கொள்ளும் மருத்துவச் செலவுகள் பெரும்பாலும் ஈடுகட்டப் பட்டுவிடும்.

ஆனால், மருத்தவ மனைகளில் தங்கியிருந்து செய்து கொள்ளும் மருத்துவச்செலவுகள் முழுவதையும் இத்திட்டம் ஏற்காது. அனுமதிக்கப் படாத தேவைகளுக்கு இன்ஷ்யூரன்ஸ் தான் கைகொடுக்கும்.

மருந்துகள் வாங்க நாம் செய்து வரும் செலவை அதற்கான ரசீதுகளை இணைத்து இன்ஸ்யூரன்ஸ் கம்பெனியிடம் கொடுத்துப் பணம் பெற்றுக் கொள்ள வேண்டும்.

மருத்துவரிடம் சிகிச்சை பெறச் செல்லும் போது இன்ஸ்யூரன்ஸ் கம்பெனியின் விபரங்களள அளித்து விட்டு, அதன் நகலினை வைத்துக் கொண்டு பைல் ஒன்றை ஏற்படுத்திக் கொள்ள வேண்டும்.

மருத்துவ சிகிச்சை முடிந்தபின் நம்மிடம் உள்ள பாலிசிகளின் விதிகளின்படி மருத்துவர் நம்மிடம் நாம் கொடுக்க வேண்டிய தொகையைப் பெற்றுக் கொள்கிறார். மீதியை, அவர் இன்ஸ்யூரன்ஸ் கம்பெனியிடம் பில் அனுப்பிப் பெற்றுக் கொள்கிறார்.

மொத்தத்தில், அமெரிக்காவில் மருத்து சிகிச்சைக்கான கட்டணங்கள் அதிகமிருப்பினும், உயர்தரமான சிகிச்சைகளும் கண்காணிப்புகளும் போற்றும் வண்ணம் அமைந்துள்ளன.

23



# அமெரிக்காவில் கல்வி

* *''அமெரிக்க அறிஞர்களிடையே இப்போது ஆன்மீக ஆர்வம் ஓங்கி வருகின்றது. செல்வத்தில் புரளுகின்றனர். வாழ்க்கை வசதி உச்சக் கட்டம் பெருகி விட்டன. வாழ்க்கை இயந்திரம் போன்று விரைவாக நடைபெறுகின்றது. எல்லாம் இயந்திரமயம். எனினும் மனதில் அமைதி யில்லை. வெறுப்பும், சலிப்பும் பெருகிக் கொண்டிருக்கின்றன. ஒவ்வொரு குடும்பத்திலும் சிக்கல்கள். நாட்டைச் சீர் செய்வதுதான் நமது முதற்கடமை என்று சென்ற வாரம் ஒரு வழக்கறிஞர் பெருங் கூட்டத்தில் சொற்பொழிவாற்றினார். எல்லோருடைய உள்ளங்களிலும் ஒரு பொதுவான உயர் கருத்து உருவாகி வெளிப்படுகின்றது. இந்திய நாட்டு ஞானிகள் காட்டியுள்ளார். தத்துவ விளக்கங்களும் அங்குள்ள சமுதாய அமைப்பு முறையும் மிகச் சிறந்ததாக இருக்கின்றன என்று கூறுகின்றனர். இந்தப் புனிதமான தேவையை உணர்ந்து இந்திய நாட்டு யோகிகளும், ஞானிகளும் தொண்டாற்றி இந்த நாட்டுக்கு உதவ வேண்டியது கடமையாகும். இங்கு பல யோகிகள் தொண்டாற்றி வருகின்றனர்.'*

**–வேதாத்திரி மகரிஷி – எனது வாழ்க்கை விளக்கம் பக் .192**

இந்தியக்கல்விக்கும்அமெரிக்கக் கல்விக்கும் நிறைய வேறுபாடுகள் உண்டு. இங்கிருப்பதைப்போல் புத்தக மூட்டை சுமக்க வேண்டாம். ஹோம் ஓர்க் செய்ய வேண்டாம். கல்வியறிவைப் பெருக்கும் கருவிகள் பொம்மைகள் போன்றவற்றை அதிகம் பயன்படுத்துகின்றனர்.

இங்கு, ஒன்றரை வயதிலிருந்து கல்வி தொடங்கப்படுகிறது. குழந்தைகளுக்கு பாலும், பழரசமும், தானிய உணவுகளும் ஊட்டி அறிவையும் , ஆளையும் வளர்க்கின்றனர்.

வேலைபார்க்கும் தம்பதியர்களுக்கு கேர்டேக்கர் உள்ளன.

இங்கு தரமான கல்வியைத் தருவதால் ஒரு மணி நேரத்திற்கு 5 முதல் 10 டாலர்கள் வரைச் செலவாகிறது. தொடக்கக் கல்வியைப் போல் உயர்நிலைக் கல்விச் செலவும் உயர்வாக இருக்கிறது. அரசுக் கல்வி நிலையங்களும் தனியார் கல்வி நிறுவனங்களும் உண்டு.

வருடத்திற்குச் சுமார் 20 000 டாலர்கள் வரை செலவு செய்ய வேண்டும். மாத வருமானம் 7000 டாலர்கள் உள்ளவர்களே இது போன்ற தனியார் நிறுவனங்களில் குழந்தைகளைப் படிக்க வைக்கின்றனர். மற்றவர்கள் அரசு தரும் கல்வி நிலையங்களைப் பயன்படுத்துகின்றனர்.

உயர்நிலைக் கல்வி படிப்பு முடிந்ததும் மேற்கல்வியைத் தொடரும் மாணவர்கள் படித்துக் கொண்டே வேலைபார்த்துச் சம்பாதித்துத் தங்கள் செலவுகளை, தாங்களே பார்த்துக் கொள்கின்றனர். இங்கிருந்து செல்லும் நம் மாணவர்கள் பெரும்பாலும் தாங்களே தங்கள் கல்விச் செலவிற்குப் பொருள் ஈட்டி வருகின்றனர்.

இங்கு மருத்துவக் கல்விக்கு மவுசு அதிகம். ஆனால் மருத்துவக் கல்வி படிக்க ஆண்டுக்கு 40 ஆயிரம் டாலர்கள் செலவாகும். இங்கு மருத்துவம் பொறியியல் கல்லூரிகள் தனியாக இயங்காமல் கலைகள் கல்லூரிகளுடன் இணைந்து இயங்குகின்றன.

அமெரிக்க மாணவர்கள் சுயசிந்தனை, சுதந்திரம், ஈடுபாடு, சுறுசுறுப்பு, அச்சமின்மை, அறிவு மேன்மை இவற்றில் அன்றாடப் பயிற்சி பெற்று, அறிவை வளப்படுத்திக் கொள்கிறார்கள்.

இங்குள்ள கல்விச் சாலைகளில் சீருடைகள் கிடையாது. இம்போசிசன் கிடையாது. ஆசிரியர்களை மாணவர்கள் பெயரிட்டே அழைக்கின்றனர்.

## பட்ட மேற்படிப்பு

படித்த மாணவர்கள் அமெரிக்காவுக்கு சுற்றுலா விசாவுக்கு மனு செய்யும் போதும், பட்டமேற்படிப்புப் படிக்க மனு செய்யும் போதும், அந்த மனுக்களைத் தூதரகத்தில் கவனமுடன் பாகசலனை செய்கிறார்கள். காரணம் என்ன?

மாணவர்கள் விசா கோரி, குடியுரிமை விதிகளை மீறி, அங்கேயே தங்கி வேலை பார்க்க முயலக்கூடும் என்பதாகும்.

இவர்களது மனுக்கள் தூதரக அதிகாரிகளுக்கு திருப்திகரமாக இல்லாவிடில் மனுக்களை நிராகரித்து விடுவார்கள்.

பட்டமேற்படிப்பை மேற்கொள்ள விரும்புவோர், அதற்கான விதி முறைகளைக் கண்டிப்பாகப் பின்பற்ற வேண்டும்.

மேற்படிப்பை மேற்கொள்ள விரும்புவோர் முதலில் 'ஜி ஆர். இ. என்ற 'கிராஜுவேட் ரிகார்டு எக்சாமினேசனி'ல் அதிக மதிப்பெண்கள் பெற்றுத் தேர்ச்சி பெறவேண்டும்.

இந்தத் தேர்வில் குவான்டிடேசன்-அனாலிடிகல் மற்றும் வெர்பல் இங்கிலீஸ் என்ற மூன்று பகுதிகளைக் கொண்டது. ஒரே முயற்சியில் பாஸ் செய்வது நலம்.

இவை, ஒவ்வொன்றிலும் 800 பாயிண்டுகள் பெற்றால், சிறந்த அமெரிக்க கல்லூரிகளில் சேர்ந்து விடலாம்.

இத்தேர்வுக்கான கைடுகள் புத்தகக் கடைகளில் கிடைக்கின்றன. இத்தேர்வு நியூஜெர்சி நாட்டிலுள்ள பிரின்ஸ்டன் சென்டரிலிருந்து மேற் கொள்ளப் படுகிறது.

அதன் பின்னர், டோபில் (T.O.E.F.L.)Test Of English as a Foreign Langauge என்ற தேர்வை எழுத வேண்டும். இதில், எழுத்துத் தேர்வு மற்றும் நேர்முகத் தேர்வு உண்டு.

மேற்படி, தேர்வுகளில் கம்யூட்டர்களும் ஹெட்செட்டுகளும் உபயோகப் படுத்தலாம். கேள்விகளை அமெரிக்கர்கள் கேட்பார்கள். பதிலை கம்யூட்டர் மூலமாகத் தெரிவிக்க வேண்டும். தேர்வு முடிவுகள் உடனே அறிவிக்கப்படும். இரண்டு தேர்வுகளுக்கும் சேவைக் கட்டணம் செலுத்த வேண்டும்.

இதில் தேர்ச்சி பெற்றவர்கள் தாங்கள் படிக்க விரும்பும் கல்லூரியைத் தேர்வு செய்து அக்கல்லூரியிடமிருந்து விண்ணப் படிவம் பெற வேண்டும்.

இங்கு, ஒவ்வொரு பல்கலைக் கழகமும் குறைந்தது 500 ஏக்கர் நிலப்பரப்பில் உள்ளன. நான், இங்கு, கலிபோர்னியா மாநிலப் பல்கலைக்

கழகம்-லாங் பீச் கலிபோர்னியா பல்கலைக்கழகம் - லாஸ் ஏஞ்சல்ஸ்-ஸ்டான்போர்டு பல்கலைக்கழகம் ஆகிய பல்கலைக் கழகங்களைப் பார்வையிட்டேன்.

நாம் விரும்பும் மூன்று கல்லூரிகளுக்கு விண்ணப்பங்களை அனுப்பி அதில் எந்தக் கல்லூரியில் அனுமதி கிடைக்கிறதோ அதன் கடிதத்தை இணைத்துத் தூதரகத்துக்கு மனு செய்ய வேண்டும்.

இந்த விண்ணபத்தில், கல்லூரியில் படிக்க விடுதியில் தங்க முதலான செலவின் விபரங்கள் இருக்கும்.

மேற்படி, செலவினங்களைச் சமாளிக்க இந்திய வங்கிகளிட மிருந்து கடன் பெற வசதி உள்ளது. வங்கிக் கடன் பெறுவதாக இருந்தால் அதற்கான 'கடன் அளிக்கப்படும்' என்ற உத்தரவாதத்தை மேற்படி விண்ணபத்தில் இணைத்து அனுப்ப வேண்டும்.

விண்ணபத்தில் கேட்கப்பட்டுள்ள அனைத்து விபரங்களையும் பதிவு செய்ய வேண்டும். நாம் பெற்ற மதிப்பெண்கள், விளையாட்டுச் சான்றிதழ்கள் போன்றவை உதவிகரமாக இருக்கும். வீட்டில் தங்கிப் படிப்பதாயின் அதற்கான சான்றுகளும் இணைக்க வேண்டும்.

அனுமதி கிடைத்த கல்லூரியின் கடிதம் மற்றும் போட்டோ நகல்கள் இதர சான்றுகள் விசா கட்டணம் ஆகியவற்றைத் தூதரகத்துக்கு அனுப்பவேண்டும்.

பின்னர், தூதரகத்திலிருந்து நேர்முக தேர்வுக்கு அழைப்பு வரும். அவர்களுக்குஅனைத்தும்திருப்திகரமாக இருந்தால் விசாகிடைத்து விடும். விபரங்கள் சரியாக இல்லாவிட்டாலும், வேறு தேதியில் வரச் சொல்லி மனுவைப் பரிசீலித்து விசா தருவார்கள்.

அடுத்து என்ன? விமான டிக்கெட் எடுப்பதுதான். மாணவர் களுக்கு சில ஏர்லைன்சில் 50 சதவீத சலுகைகள் உள்ளன. பயன்படுத்திக் கொள்ளலாம்.



# 24

# தொலைக்காட்சி

* ''தொலைக்காட்சி பேட்டி கண்டு வினாவெழுப்பவுள்ள திரு நான்சி அம்மையாருக்கு என்னை திருமதி மார்த்தா அறிமுகம் செய்தார். அவர் சிறிது நேரம் என்னோடு பேசினார். பல வினாக்கள் எழுப்பி யோகம், ஞானம், மதம், ஆன்மா, கடவுள் எல்லாவற்றுக்கும் விடைபெற்றார். அவருக்கு அளவு மீறிய உற்சாகம் ஏற்பட்டு விட்டது. டி வி. காட்சி படமெடுக்கவும் ஒளிப்பதிவு செய்யவும் ஏற்பாடு செய்யப்பட்டது. நாங்கள் மூவரும் வரிசையாக நாற்காலி களில் அமர்த்தப்பட்டோம். திருமதி நான்சி அம்மையார் முதலில் பாதிரி அவர்களையும் பிறகு, மார்த்தா அம்மையாரையும் ஒவ்வொரு கேள்வி கேட்டுப் பின் என்னிடம் பேசினார். என்னைப் பற்றியும், நமது இந்திய நாட்டைப் பற்றியும் அங்குள்ள ஆன்மீகச் செல்வம் பற்றியும் நான் வந்த நோக்கம், செய்யும் பணி, தங்கும் காலம், குண்டலினி யோக விளக்கம் பயன் எல்லாவற்றையும் பற்றி விசாரித்துப் பதில் பெற்றார். பிறகு, மற்ற இருவர்களையும் குண்டலினி யோகப் பயிற்சி பெற்ற பிறகு அவர்கள் அனுபவங்கள் பற்றி விசாரித்தார். 40 நிமிடங்கள் பேட்டியில் குண்டலினி யோக முறை பற்றியதாகவே அந்த நிகழ்ச்சியை மாற்றி விட்டார்.

– வேதாத்திரி மகரிஷி – எனது வாழ்க்கை விளக்கம் பக் 195

அமெரிக்க நகரங்களில் 24 மணி நேரமும் நூற்றுக்கணக்கான சானல்கள் கிடைக்கின்றன. தற்போது, தமிழ் சேனல்கள் அனைத்தும் கிடைக்கின்றன. இங்கு 100 டி. வி. நிலையங்கள். ஒவ்வொரு டி. வி . செட்டிலும் அத்தனை சேனல்களையும் பார்க்கலாம். அவ்வளவு பெரிய வளர்ச்சி.

இங்கு டி. வி. பெரிசாக இருக்கும். தரைமட்டத்திலிருந்து பார்க்கலாம்.

அமெரிக்கா செல்பவர்களுக்கு இந்தத் தொலைக்காட்சிகள்தான் பொழுது போக்க உதவுகின்றன. இங்கு, ஒவ்வொரு பொருள்களுக்கும் ஒரு சானல் உண்டு.

பி.பி.சி. என்றால் செய்திதான் வரும் என்பது போல பல சேனல்களில் தனித்தனி ப்ரோக்ராம் நடந்து கொண்டே இருக்கும். ஒரு ஆண், ஒரு பெண். ஒருத்தருக்கொருத்தர் சகஜமாகப் பேசிக் கொண்டே நியூஸ் சொல்வார்கள். வானிலை இவர்களுக்கு முக்கியம். புயல் வருமுன் பெயர் வைத்துவிடுவார்கள்.

பிடித்தமாக ஓரிரு நிகழ்ச்சிகள் இருக்கும். உங்கள் மனைவிக்கு 'ப்ரைஸ் இஸ் டைட்' : உங்களுக்கு 'ஜெனரல் ஹாஸ்பிட்டல்' இப்படி ஏதாவது பிடிக்கலாம்.

எல்லாமே சிலிக்கான் பள்ளத்தாக்கின் மத்தியில் டி. வி. யில் ஒவ்வொரு மனிதநேயத்தனத்துக்கும் 24 மணிநேரச் சானல்கள். சமையல் குறிப்புக்கு தனி சானல், உடற்பயிற்சிக்கு தனி, திரைப்படங்களுக்கு, பிரயாணத்திற்குக், கார்ட்டூன்களுக்கு, ஹாலிவுட் திரைப்படங்களுக்கு, செய்திகளுக்கு, செய்தி தலைப்புக்கு, ஜனாதிபதி தேர்தல் விவாதங்களுக்கு, கோர்ட்டுக்கு என்று தனித் தனி சேனல்கள்.

வீட்டைப் பராமரிக்க தனி சேனல். வீட்டு வேலையில் அம்மாவிற்கு எப்படி எல்லாம் உதவியாக இருக்கலாம் என்பது தனி சேனல். தினம் முழுவதும் பண்டங்களை விற்பனை செய்யும் எச்யுவிசி சானல் பார்க்கலாம். பத்திரிக்கை நியூஸ் முதலில் புரியாது. எல்லா நியூசும் ஒரே மாதிரிதான் இருக்கும்.

பாத்திரங்களைக் கழுவுவது, அறைகளை சுத்தம் செய்வது, வீட்டைப் பெருக்குவது, துணிகளை மடித்து வைப்பது போன்ற வேலைகளைத் துல்லியமாகக் காட்டுகின்றனர்.

காரைக் கழுவுவது எப்படி? தண்ணீர் குழாயிலிருந்து கார்களை எப்படி சுத்தம் செய்வது, காரை பளிச்சிடச் செய்வது எப்படி போன்ற செய்முறைகளை ஐந்து வயது குழந்தைகளுக்கே கற்றுத் தருகிறார்கள்.

குழந்தைகளுக்காக 24 மணி நேரமும் ஒளிபரப்பாகும் சேனல் உள்ளது. காலையில் கல்வியறிவு நிகழ்ச்சியாகக் குழந்தைகள் மனதில் பதியும் வண்ணம் எளிமையாகப் புரியும் வண்ணம் காட்டுகிறார்கள்.

குழந்தைகள் காட்சிகளைப் பார்த்து, சிரித்து மகிழும் அதே நேரத்தில் பாடமும் கற்றுக் கொள்கிறார்கள். அதே நேரத்தில், விளையாட்டோடு உடல் ஆரோக்கியம்- உடல் சுத்தம் போன்ற பயனுள்ள விஷயங்களையும் கற்றுக் கொள்கின்றனர்.

அரசியல் செய்திகள் மிகவும் துல்லியமாக அலசப்படுகின்றன. ஆளும் கட்சியைப் பற்றிய விமர்சனத்தை முகதாட்சணியம் இல்லாமல் அலசுகிறார்கள்.

கோர்ட்டுகளில் நடைபெறும் வழக்குகள் விசாரணை செய்யப் படுவதை விரிவாகவும் விளக்கமாகவும் காட்டுகிறார்கள்.

விளையாட்டுப் பற்றிய நேரடி காட்சிகளும், விமர்சனங்களும் பற்றிக் காட்டுகிறார்கள். இங்குக் கூடைப் பந்து போட்டிகள் நாளும் நடைபெறுகின்றன. நாள்தோறும் அவற்றை தொலைக்காட்சி மூலம் பார்த்து ரசிப்பது அமெரிக்கர்களின் வழக்கம்.

ஞாயிற்றுக்கிழமை காலை வேளைகளில் அனைத்து டி.வி சேனல் களிலும் கிறித்துவ போதகர்கள் பேசுவார்கள். கேட்டுப் பார்க்கலாம். கடவுளைப் பற்றி சில செய்திகள் நமக்கும் பொருத்தமாக இருக்கும்.

சராசரி அமெரிக்க குழந்தைகள் 13 வயதுக்குள் ஒரு லட்சம் வன்முறைச் செயல்களை டி. வி. யில் பார்க்கிறார்கள் என்று ஆய்வு சொல்கிறது. ஆனால் இவைகளால் அவர்கள் மனம் பாதிக்கப் படுவதில்லை என்கிறார்கள்.

டி. வி. என்பது அவர்கள் கொடுப்பதை நாம் பார்க்க வேண்டிய கட்டாயம் பொதிந்துள்ள ஊடகம். அதைப் புத்தகங்களோடும், பத்திரிக்கைகளோடும் ஒப்பிடமுடியாது என்பது என் கருத்து.

இங்கு, திரைப்பட அரங்குகள் அனைத்து வசதிகளையும் கொண்டவையாக உள்ளன. ஒரே டிக்கட். எங்கு வேண்டுமானாலும் உட்கார்ந்து கொள்ளலாம். சமதர்மம் தான்.

காம இச்சைகளைத் தூண்டும் திரைப்பட அரங்குகளின் வெளியில் ஓஓஓ என்று குறியிடப்பட்டிருக்கும். இவைகளில் அதிகமாய் நம் இந்திய மாணவர்களைப் பார்க்கலாம்.

25



# நயாகராவில் நனைந்தோம்

முதன் முதலில் அமெரிக்கா போகிறவர்கள் அவசியம் பார்க்க வேண்டிய இடங்களில் நயாகராவும் ஒன்று.

நாங்கள் இருந்த இடத்தில் இருந்து ...........கி.மீ. தூரத்தில் நயாகராஇருக்கிறது. நயாகரா நியூயார்க் மாநிலத்தில் பஃப்லோ நகரத்தில் தான் அமைந்துள்ளது.

நயாகரா அருவியின் ஒரு நுனி மட்டும்தான் அமெரிக்க எல்லையிலிருக்கிறது. அந்த அழகின் முழு முகம் பார்க்க வேண்டுமானால் அந்த எல்லையை அடுத்த கனடாவுக்குள் செல்ல வேண்டும். கனடா செல்ல விசா வாங்க வேண்டும்.

முன்பெல்லாம் விசாவை கனடாவின் நுழைவாயிலில் கொடுத்தார்கள். இப்போதைய நிலைமை வேறு.

காரில் பயணிக்கும் போது நயாகரா விபரங்களை அறிந்தோம்.

உலகின் மிகப் பெரிய அருவி. நயாகரா. கண் இமைக்கும் நேரத்தில் 7 லட்சத்து 90 ஆயிரம் காலன் தண்ணீர் கொட்டுகிறது.

1678 ல் பாதர் லுநியிஸ் என்ற பிரெஞ்சுக்காரர் நயாகராவைக் கண்டு பிடித்தார். உலகின் பெரிய அருவி என்றாலும் உயரமானது அல்ல. இதைவிட உயரமான அருவிகள் உள்ளன. ஆனால், அருவி அகலம் 4350 அடி.

மலையிலிருந்து நீர் கொட்டுவதை நீர்வீழ்ச்சி என்கிறோம். ஆனால், நயாகரா நீர் வீழ்ச்சி அப்படியல்ல. பல மைல்களுக்கு அப்பாலிருந்து நீர் விழுச்சியின் தண்ணீர் வருகிறது.

நம்மூர் அகண்ட காவிரியைப் போல் நான்கு மடங்கு அகலத்திற்கு நீர் பரப்பு கடல் போல ஓரிடத்தில் காட்சி தருகிறது.

பரந்து ஓடிவரும் தண்ணீர் நீர் வீழ்ச்சி அருகில் வரும்போது பரப்பளவு குறுகி அதள பாதாளத்தில் வேகமாகக் கொட்டுகிறது. கொட்டும் வேகத்தில் நீரின் துளிகள் நீண்ட தூரத்தில் தெளிக்கிறது.

அமெரிக்கா, கனடாவின் எல்லையில் நயாகரா இருக்கிறது. அமெரிக்காவிலுள்ள ஒரு ஏரியிலிருந்து நயாகரா ஆறு உற்பத்தியாகிறது. அந்த ஏரியின் பெயர் "ஏரி. ஆங்கிலத்தில் 'ஏடக' என்கிறார்கள். கனடாவில் உள்ள உண்டாகியோ ஏரியில் போய் இந்த ஆறு கலக்கிறது.

அமெரிக்காவில் இருந்து விமானத்தில் நயாகராவைப் பார்க்கப் பறந்து வந்தால் இந்த ஏரியைக் காட்டுகிறார்கள். கனடாவிலிருந்து காரில் வந்தால் ஆற்றை, ஏரியைப் பார்த்துக் கொண்டே போகலாம்.

நயாகாராவின் முழு அழகையும் பார்க்க வேண்டுமென்றால் கனடாப் பகுதியிலிருந்துதான் பார்க்க வேண்டும். நீர்த்திவளைகள் தெரித்து மேக மூட்டம் போலக் காட்சி தருவதைப் பார்ப்பது ஓர் அழகு.

ஒரு சிறிய மலையிலிருந்து தான் இந்த அருவி விழுகிறது. மலையின் கிழக்குப் பகுதி அமெரிக்காவுக்கும் சொந்தம். மேற்குப் பகுதி கனடாவுக்கு உரிமை.

கனடா பகுதியில் அருவியின் அகலம் 2950 அடி. 158 அடி உயரத்திலிருந்து தண்ணீர் விழுகிறது.

அமெரிக்கப் பகுதியில் அருவியின் அகலம் 1400 அடி. 167 அடி உயரத்திலிருந்து தண்ணீர் விழுகிறது.

அருவியிலிருந்தது வீழும் நீரில் பத்தில் ஒன்பது பங்கு, கனடாப் பகுதியில் விழுகிறது. மீதி ஒரு பங்குதான் அமெரிக்கப் பகுதியில் விழுகிறது. கனடா நாட்டிலிருந்தும் விசைப்படகில் வந்து விழிகளுக்கு விருந்து படைத்துச் செல்கிறார்கள்.

அந்தக் காலை-மாலை வேளையில் நயாகராவைப் பார்க்கப் புத்தழகுடன்பொலிந்தது. எத்தனைமுறைபார்த்தாலும்முதலில்பாப்பது போன்ற அதே அழகு. கொஞ்சங்கூட சலிப்பு வரவில்லை. சுற்றிப் சுற்றிப் பார்த்தோம்.


ஆண்டுதோறும் ஒரு கோடிப்பேர் நயாகராவைப் பார்க்க வருகிறார்கள். நாங்களும் பார்த்தோம்.

ஒரு ஸ்டீம் படகில் எங்களை நீர் வீழ்ச்சி அருகில் அழைத்துச் செல்கிறார்கள். நாங்கள் நதிநீரை எதிர்த்து அருவியை நோக்கிப் பயணமானோம். மேகப்பஞ்சுகளாய் அருவியின் புகைச்சாரல் அந்த புகை மூட்டத்திற்குள் நுழையும்போது, நாடி நரம்புகளில் பனிநீர் புகுந்தது போல் ஒரே 'சில்'

குழந்தைகள் உற்சாகத்தில் குதூகலிக்கின்றனர். உற்சாகச் சிலிர்ப்பு. அதோடு பயங்கரமான திரில் வேறு.

நீர்த்தகடுகள் கீழிறங்கும் இடம் நெருங்க நெருங்க உற்சாகத்தால் நாடிநரம்புகள் இரத்தக் குழாய்களெல்லாம் வெடித்து விடுவது போன்ற உணர்வு. என் துணைவியார் பயந்தே போய்விட்டார்.

தண்ணீர்ப் பறவைகளின் ''கீச் கீச்'' சிறகுகளின் 'பட பட' ஆயிரக்கணக்கான பறவைகள் நீர்வீழ்ச்சியின் தாளத்திற்க்கேற்ப ஒலி எழுப்பிப் பறந்து செல்வது பறவை நடனமாய் காட்சி அளிக்கிறது.



**நயாகரா நீர்வீழ்ச்சி**

நீர் வீழ்ச்சியின் முகத் தோற்றத்தை இயந்திரப் படகிலிருந்து பார்த்த போது மெய்சிலிர்த்தது. நீர்வீழ்ச்சியின் அடியில் அதளபாதாளத்தில் நின்று ரசிக்கும் வாய்ப்பும் கிடைக்கிறது. குழந்தைகள் முதியோர்கள் அந்த இடத்திற்குப் போக இயலாது. வாலிபர்களுக்கு திரில்லிங் அனுபவம்.

நயாகரா குகை என்ற இடத்திற்குப் போனதும் தனியான பிளாஸ்டிக் உடை தருகிறார்கள். கால்களுக்கு தனியே தனித்த ஷூக்கள் தருகிறார்கள். அவற்றை அணிந்து கொண்டுதான் அங்கு செல்ல வேண்டும்.

நயாகராவிலிருந்து நாங்கள் விடைபெறும் போது ஒரு கனவு பிரதேசத்திலிருந்து விடைப்பெற்றுச் செல்வது போன்ற உணர்வு. விலகிப் போகும் வலி தெரிந்தது. ஆனால், மனதிலே ஒரு புத்துணர்வும் நயாகராவைப் பார்த்த கோடிக்கணக்கான மக்களில் நாமும் ஒருவர் என்ற உணர்வும் ஏற்பட்டது.



# 26

# நூலகங்கள்

* “இங்கு யோகம் என்றால் எல்லோரும் யோகாசனப் பயிற்சி என்றே நினைக்கின்றனர். ராஜயோகம் என்ற முறையில் யோகானந்தரின் கிரியா யோகமும்- மகேஷ் யோகியின் ட்ரான் சென்டென்டல் யோகமும் பரவலாகப் பின்பற்றப்படுகின்றன. “ஹரே கிருஷ்ணா” இயக்கமும் நன்றாகப் பரவி வருகிறது. இந்த பக்தி மார்க்கம் பெரும்பாலோர்க்கு எளிதாக இருக்கிறது. புகை பிடித்தல், மது அருந்துதல், மாமிசம் உண்ணல் அடியொடு நீக்கிவிட வேண்டும். எண்ணிறந்த அமெரிக்கர்கள் இவ்வாறு வாழ்வில் திருத்தமும் மாற்றமும் பெற்றுள்ளனர். இதை ஒரு நல்ல சேவையாகவே நான் கருதுகிறேன். இங்கு ராமகிருஷ்ண மடம் தத்துவ போதனைத் துறையில் மிக நல்ல தொண்டாற்றி வருகிறது. ஆன்மீகத் துறையில் ஆர்வமுள்ள அனைவரும் விவேகானந்தர் அவர்களின் நூல்களை நன்கு பயின்றுள்ளனர்.”

வேதாத்திரி மகரிஷி எனது வாழ்க்கை விளக்கம் பக். 186

* உங்களுக்குப் புத்தகம் படிக்கும் பழக்கமிருந்தால், அமெரிக்கா அருமையான பூமி. சின்ன ஊரில் கூட அருமையான நூலகம் இருக்கின்றன. பத்துப் புத்தகங்களைத் தள்ளிக் கொண்டு வரலாம்.

இங்குள்ள நூலகங்கள் மலைப்பூட்டுகின்றன. ஒவ்வொரு பகுதியிலும் நூலகங்கள். அமெரிக்க வரலாறு. உலக யுத்தங்கள் மற்றும் அமெரிக்கச் சுற்றுலாவைப் பற்றிய விளக்கத் தட்டு அத்துணையும் இங்கு கிடைக்கின்றன.

அமெரிக்காவில் நூலகங்கள் மிகுந்த யூனியன் சிட்டியில் அரசு நூலகங்கள் உண்டு. இங்கு எல்லா வகை நூல்களும் உள்ளன. வரி கட்டுவோர் அனைவருக்கும் நூல்களை எடுக்க அட்டை கொடுக்கிறார்கள்.

அதனை வைத்து விரும்பிய புத்தகங்கள் மட்டுமின்றி இசைத்தட்டு வீடியோ கிளிப்பிங், சி. டீ. க்கள் போன்ற எதனையும் எடுத்துச் செல்லலாம். நூலகத் தேவைகள் பயன்பாட்டுக்கு உரிய வகையில் வரிப் பணத்தில் நன்கு திட்டமிட்டு முறைப்படுத்தப் பட்டுப் பாதுகாக்கப் படுகின்றன.

அதேபோல் 'பார்ன்ஸ் அண் நோபின்' போன்ற புத்தகக் கடைகளில் சந்தோஷமாக ஓசியில் படிக்க அனுமதிக்கிறார்கள். ஏன். உட்கார நாற்காலிகூட எடுத்துப் போகலாம்.

அமெரிக்க நாடாளுமன்ற நூலகம் வாஷிங்டனில் இருக்கிறது. உலகின் மிகப் பெரிய நூலகம் இது. உலகில் வெளியாகும் அத்தனை நூல்களும்-எந்த மொழியாக இருந்தாலும் சரி இங்கே இருக்கின்றன.

வாஷிங்டனின் லைப்ரெரி ஆப் காங்கிரெஸ்ஸில் அமர்ந்து படித்தால் பொழுது போவதே தெரியாது. உலகத்துக் காவியங்களை எல்லாம் இங்கு படித்து ருசிக்கலாம். என் வாழ்நாள் முழுவதையும் இங்கு கழிக்க ஆசைதான்.

எனது நூல்களும் இங்கே இடம் பெற்றிருக்கின்றன. அவற்றைப் பார்க்க ஆசைதான்.

நூலகத்துக்குப் போய் நூலின் பெயர், ஆசிரியர் பெயரை எழுதிக்கொடுத்துவிட்டு வந்துவிட வேண்டும். இரண்டு நாள் கழித்துப் போனால் எடுத்து வைத்திருப்பார்கள்!.




# செய்தித்தாள்கள்

* *என்னைப் பேட்டி காண அமெரிக்க பெண் நிருபர் 13.7.72 காலையில் வந்தார். சுமார் 27 வயது இருக்கலாம். நன்றாகக் கல்வியில் தேர்ந்தவள். யோகத்திலும் தத்துவ தெளிவிலும் ஓரளவு திறன் பெற்றவள். ஒரு போட்டோ கிராபரும் உடன் வந்திருந்தார். பெயர், ஊர், வயது, சாதனை, தொழில், குடும்பம் பற்றிப் பல கேள்வி களைக் கேட்டபின் யோகத்தைப் பற்றி வினவினாள். நான் தெளிவாகக் குண்டலினி யோக முறையைப் பற்றியும் மகராசனம் நீரோ மஸ்குலர் மூச்சுப்பயிற்சி இவை பற்றி விளக்கினேன். அவற்றைச் செய்து காட்ட முடியுமா என்றாள். உடனே, அவற்றை முறையாகச் செய்து காட்டினேன். எல்லா நிலைகளையும் படம் பிடித்துக் கொண்டார்கள். மொத்தம் சுமார் 25 போட்டோக்கள் இருக்கும். சுமார் 1.30 மணி நேரம் பேசியிருந்தபின் அன்போடு விடைபெற்று அந்த நிருபரும் போட்டோகிராபரும் சென்றார்கள்.*

வேதாத்திரி மகரிஷி – எனது வாழ்க்கை விளக்கம் பக். 172

*அமெரிக்கா போன்ற நாடுகளில் 1400 பத்திரிக்கைகள் உள்ளன. வருடத்துக்கு 550000 புத்தகங்கள் வெளியாகின்றன.*

*வாஷிங்டனில் வெளிவரும் 'வாஷிங்டன் போஸ்ட்' என்ற நாளிதழ் உலகப் புகழ் பெற்றது. வாஷிங்டனில் வெளிவருகிறது. அதன் விலை 25 சென்ட். இது வாஷிங்டனில் வாங்கினால் விலை 25 சென்ட். வேறு நகரங்களில் வாங்கினால் கூடுதலாக ஒரு டாலர் தர வேண்டும். ''வாஷிங்டனுக்கு வெளியே விலை வேறுபடும்' என்று அதில் அச்சிடப்பட்டிருக்கிறது.*

அமெரிக்கர்கள் நாள்தோறும் நாட்டு நிலைமையையும் உலக நடப்புகளையும் அறிந்து கொள்வதில் அதிகம் ஆர்வம் காட்டு கின்றனர். அதற்கு செய்திதாள்களும், டி.வி. யும் துணையாக இருக்கின்றன.

செய்தித்தாள்களில் வரும் கருத்துக்களை விலாவாரியாகத் தங்களுக்குள் விவாதித்துக் கொள்வார்கள். நம்மூரில் எத்தனை பேர் இவ்வாறு செய்கின்றனர்.

தனி மனிதப் பிரச்சனைகளுக்கும் செய்தித்தாள்களில் தலைப்புச் செய்திகள் வருகின்றன.

உதாரணமாக:

* திருமணம் ஆகாமல் இருக்கும் பெண்களின் நிலைமை- திருமணம் ஆகாமல் தாயாகும் பெண்களின் எண்ணிக்கைப் பெருகி வருகிறது. இதற்குத் தீர்வு என்ன?
* 80 வயதிற்கு மேல் உள்ளவர்கள் கார் ஓட்டுவதில் ஏற்படும் பிரச்சனைகள். அதற்குத் தீர்வு என்ன?
* குடியரசுத் தலைவர் என்றாலும் சாதாரணக் குடிமகன் என்றாலும் தவறு செய்தால் நார் நாராகக் கிழித்து கட்டுரைகள். விமர்சனங்கள்.
* சிகாகோ நகரைச் சுற்றி வசிப்பவர்களுக்கு ஏற்படும் இரைச்சல் தொல்லைகளை எப்படி களைவது என்பது பற்றிய கட்டுரைகள்.
* அமெரிக்க இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு இல்லாமை குறித்தும், ஆசியர்கள் அதிக அளவில் இங்கு வருவது போன்ற கட்டுரைகள். விமர்சனங்கள்.

இங்கு ஆண்டுக்கு முக்கால் பாகம் பனிக்காலம் . அதனால், செய்தித்தாள்களை வீட்டிற்கு முன்பு அப்படியே போட்டு விட மாட்டார்கள். பாலித்தின் பைக்குள் போட்டு வீட்டிற்கு முன்பு வைத்து விட்டுச் செல்கிறார்கள்.

பேப்பர் போடுபவர்கள் காரிலும் வந்து போடுகிறார்கள். மழை பெய்தாலோ அல்லது வேறு எதாவது பாதிப்பு ஏற்பட்டாலோ அன்று செய்தித்தாள் கிடையாது.

இங்கு செய்தித்தாள்கள் பெரிய சுருள்களாக கண்ணிற்கும் கருத்திற்கும் விருந்தாக நாள்தோறும் வருகின்றன. செய்திகள் பத்துப் பக்கம் என்றால் அதில் வரும் விளம்பரங்கள் 15 பக்கங்களில் வருகின்றன.

சமைத்துப் போட்டார்கள். அவர்கள் முகத்தில் பெருமகிழ்ச்சி. எங்களுக்கும் மன நிறைவு. எப்பொழுதாவது அமெரிக்க உணவகங் களுக்குப் போவதுண்டு.

* காலையில் சீரியல் என்ற பல வகைத் தானியங்கள் அடங்கிய கலவையைப் பாலில் கலந்து சாப்பிடுகிறார்கள். குழந்தை களுக்கும், வயதானவர்களுக்கும் தனித்தனியான சீரியல் உண்டு. இதைத் தவிர பிரட், பேன்கேக், சாண்ட்விட்ஸ், டோனெட்ஸ் போன்றவை காலை உணவாகச் சாப்பிடுகிறார்கள்.

* மதியம் உணவு சற்று அதிகமாக எடுத்துக் கொள்கிறார்கள். பர்கர் எனப்படும் மாட்டிறைச்சி மிகவும் பிரசித்திப் பெற்றுள்ளது. பழங்கள் மற்றும் பழச்சாறு அதிகமாகவே சாப்பிடுகிறார்கள். சேன்ட்விட்ச், பிசா போன்ற உணவுகளை மதிய நேரங்களில் சாப்பிடுகிறார்கள்.

* இரவு உணவாகக் குறைவாகச் சாப்பிடுகிறார்கள். பிசா, சாண்ட்விட்ச் பழங்கள் போன்றவை உணவாக இருக்கிறது. ஓயின் பரவலாக உணவு அயிட்டமாக இருக்கிறது. விலையும் மலிவாக இருக்கிறது. டி-காபி பொதுவாகப் பால் இல்லாமல் இருக்கிறது. சிலபேர் காபியில் கட்கமும் சர்க்கரையும் கலந்து அருந்துகிறார்கள். பொதுவாக உடல் ஆரோக்கியத்திற்கேற்ற உணவுகளைச் சாப்பிடுகிறார்கள்.

* இந்த அமெரிக்காவில் பெரும்பான்மை பகுதிகளில் தட்பவெட்ப நிலை குளிர்காலங்களில் மைனஸ் டிகிரி கூட இருக்கிறது. ஏப்ரல் முதல் ஆகஸ்ட் வரை மிதமாக இருக்கும். சில சமயங்களில் 100 டிகிரி எப் இருக்கும். கோடைக்காலம் அவர்களுக்கும் குதூகலம். எந்தக் காலமானாலும் அமெரிக்கர்கள் விரும்பிப் பருகுவது கோலா ஆரஞ்ச் போன்ற குளிர் பானங்கள்

* சில வீடுகளில் டின் டின்னாக கேன் கேனாக பழச்சாறும் சோடாவும் அடுக்கி வைத்திருக்கிறார்கள். சாப்பிடும்போதும் மற்ற நேரங் களிலும் கையில் பானம் இருந்து கொண்டே இருக்கிறது. அவர்கள் அருந்திக் கொண்டே பேசுகிறார்கள். கார் ஓட்டுகிறார்கள். அலுவலையும் பார்த்துக் கொள்கிறார்கள்.

* சில உணவகங்களில் சாப்பிடுவதற்கு ஏராவது காசுக்கு வாங்கிக் கொண்டு அங்குள்ள குளிர்பானத்தை இலவசமாகத் தண்ணீர்போல அடிக்கடி பிடித்தும் குடித்தும் செயல்படுவது வியப்பாக இருந்தது.

* காபி, டீ குடிப்பதில் நம்மைப் போல் அவர்களுக்கு மோகம் இல்லை. குளிர்பானம் அருந்துவதையே அவர்கள் விரும்பு

கிறார்கள். பால் சர்க்கரையை சின்னச் சின்ன பாக்கெட்டில் கொடுக்கிறார்கள். விமானமானாலும், விடுதியானாலும் இதே பாணியைத்தான் கையாளுகிறார்கள்.

* வீட்டிற்கு வரும் விருந்தினர்கள் விரும்பி அருந்துவது குளிர் பானமே. பீர் போன்ற மற்ற மது பானங்களின் அணி வகுப்பு தனி வகை. அதையும் அவர்கள் உணவில் ஒரு அயிட்டமாக சேர்த்துக் கொள் கிறார்கள். நம்மவர்களைப் போல் போதைக்காகச் சாப்பிடுவதில்லை.

அமெரிக்கர்கள் சகட்டு மேனிக்கு சாப்பிட்டுப் பழக்கப் பட்டவர்கள். அதுவும் 'ஜன்க்புட்' என்று அதிகக் கொழுப்பும் மாவுச் சத்தும் கொண்ட உணவை தின்று தின்று ஊட்டமான பாலையும் வெண்ணெயையும் விழுங்கி திமு திமு என்று உடம்பை வளர்த்ததில் ஒரு தலைமுறையே குண்டர் தலைமுறையாக இருக்கிறார்கள்.

நம்மவர்கள் இந்தியன் ஸ்டோர்களிலிருந்து ஒரு மாசத்துக்குத் தேவையான சப்பாத்தி நான் வகைகளை வாங்கி வந்து நம்மவர்கள் வைத்து காலண்டரைப் பார்த்துச் சாப்பிடுகிறார்கள்.

இங்கு எல்லா உணவு விடுதிகளும் தரமான உணவுகளைத் தருகின்றன. அதுவும் குறைந்த விலையில் தருகின்றன. ஆனால் இந்திய உணவு விடுதிகளில் விலைகள் தான் அதிகம்.

மசால் தோசை 5 டாலர். (ரூ.550) இப்படி அனைத்தும் விலை அதிகம்.

நியூயார்க்கில் இந்திய சைவ உணவகங்கள் இருக்கின்றன. இப்போது, அமெரிக்கர்களே இந்திய உணவை விரும்பிச் சாப்பிட இந்திய ஓட்டல்களுக்கு வருகிறார்கள். லேக்ஸிங்டன் என்ற இடத்தில் ஏகப்பட்ட இந்திய உணவகங்கள்.

உடுப்பி, சென்னை கார்டன், கார்டமம், அன்னபூர்ணா என்று ஒரு பெரிய பட்டியல் போடலாம். ஆனால், இந்த உணவகங்கள் உள் அலங்காரத்தில் கவனம் செலுத்துவதில்லை.

உடுப்பி உணவகம் நம் சிற்றூர் ஒன்றில் சாப்பிடுவது போன்ற ஒரு உணர்வைத் தந்தது.

அமெரிக்கர்களுக்கு இந்திய தோசை பிடித்த உணவு. சென்னை கார்டென் ஆறடி தோசை கொடுக்கிறதாம். அமெரிக்கர்களுக்கு மாளாத பிரமிப்பு. கொஞ்சம் அழகுணர்ச்சி, சுகாதாரத் தரம், வியாபாரச்சாமர்த்தியம் இவை எல்லாம் ஒருங்கே இருந்தால் இட்லி தோசை விற்றே நியூயார்க்கில் கோடீஸ்வரராக உயர்ந்துவிடலாம்.

சான்பிரான்ஸிஸ்கோவில் எக்கச்சக்கமான இந்தியக் கடைகளும், உணவகங்களும் பெருகிவிட்டன. ஸிலிகன் பள்ளத்தாக்கில் தமிழோசை எதிரொலிக்க ஆரம்பித்த பின் சரவணபவன் ஓட்டலும் வந்து விட்டது.

மவுன்டன் வ்யூ என்ற இடத்தில் கடைத் தெருவின் மையத்தில் அடக்கமான அந்த சரவணபவன் ஓட்டல் முன் நிற்கும் கூட்டம் சுவராஸ்யமான கலவையாக இருக்கிறது. உள்ளே இடமில்லாததாதல் வெளியே காத்திருக்கிறார்கள்.

பல அமெரிக்கர்களும் நிற்கிறார்கள். பார்க்கும் இடங்களில் எல்லாம் தமிழ் முகங்கள். கேட்கும் திசையில் எல்லாம் தமிழ் பேச்சு. தவிர, குஜராத்திகள், பஞ்சாபிகள், தெலுங்கர், கன்னடியர் என்று பாரதத் தேசமே நிற்கிறது.

இங்கு பஃபேயில் சாப்பிட்டுவிட்டால் ஆர்டர் செய்து சாப்பிடுவதை விடச் செலவு குறைவு. பஃபேக்களில் முதலில் சூப், பிறகு ஸ்டார்டர் (கொறிக்க) சாலட் தேவையான மெயின் சோர்ஸ் இறுதியில் டெஸ்ஸர்ட் (இனிப்புகள் ஐஸ்கிரீம்) என்று பல முறை எழுந்து போய் தட்டுகளில் நிரப்பிக் கொள்ளலாம்.

ஒவ்வொரு முறையும் புதிதாகத் தட்டுகளை எடுத்துக் கொள்வோம். சாப்பிட்ட தட்டை ஓட்டல் சிப்பந்தி வந்து எடுத்துப் போவார். சாப்பிட்டுவிட்டுக் கைகழுவக் கிண்ணத்தில் தண்ணீரெல்லாம் வராது. பேப்பர் நாப்கினில் துடைத்துக் கொண்டு போகவேண்டியதுதான்.

சாப்பாடு பார்சல் என்றால் சிப்பந்தியிடம் 'டு கோ' என்று சொல் வேண்டும். ' டு கோ' என்றால் பார்சல் என்று அர்த்தம்.

ஓட்டலில் சாப்பிட்ட பின் டிப்ஸ் கொடுப்பது இங்கு வழக்கம். சாப்பிட்ட உணவின் செக்கில் 5-10 சதவீதத் தொகை டிப்சாகக் கொடுப்பது வாடிக்கை.

தமிழ்ச் சங்கமோ அது போன்ற ஒரு அமைப்போ ஏற்பாடு செய்திருக்கும் நாடகப் பட்டிமன்ற இசை நிகழ்ச்சிக்கான நோட்டீஸ் களையும் சிலர் வினியோகித்துக் கொண்டிருக்கிறார்கள். உள்ளே இருக்கும் பலகையில் சரவண பவன் அறிவிப்புப் பலகையில் நாக்கில் எச்சூறும் அத்தனை பண்டங்களின் பட்டியலும் இருக்கின்றன.

அதே சுவை. அதே மணம். ஆனால் சர்வர்கள் மட்டும் நம்மவர்கள் இல்லை.

லோக்கல் ஹஸ்பானிக் மொழி பேசும் ஆட்களை அமர்த்தியுள்ளார்கள். நாள்தோறும், சுமார் 250 வாடிக்கையாளர்கள் வருவதாகவும், சனி, ஞாயிறுகளில் 600 பேர் வருவதாகவும் சொன்னார்கள்.

இங்குள்ள பிஸாக்களைக் கண்டு பிரமித்தோம். தாம்பாளம் போன்ற பிஸா ஆவி பறக்க மேசைக்கு வந்ததும் டிஷ்யூ பேப்பரில் நாசுக்காகச் சுற்றிப் பிடித்து - சிலிக்கன் பள்ளத்தாக்குக்கு வந்திருக்கும் தமிழர்கள் மஷ்ரூம் சீஸ் பிஸா துண்டங்களைப் பகிர்ந்து சுவைக்கிறார்கள்.

மேற்கத்திய உணவு வகையில் உப்பு உரப்பாக பிஸா இருப்பதால் இந்தியர்களுக்கு இந்தியாவில் மட்டுமல்ல அமெரிக்காவிலும் இது விருப்பமான உணவாக இருக்கிறது. இங்குள்ள பிஸா சாப்பிட்ட பிறகு அத்தனை ருசியானதை நம்மூரில் சாப்பிட்டதில்லை.

மாலை உணவை சீக்கிரம் முடித்துக் கொள்ளும் பழக்கமுள்ள அமெரிக்கர்கள் ஏழு மணிக்குள் பிஸா சாப்பிட்டுப் போய்விடுகிறார்கள். அதற்குப் பிறகு, வருகிறது இந்தியர்களின் பட்டாளம். அதில், அதிகப் பட்சம் தமிழர்கள் . அவர்கள் கூடவே வருவது சளசள தமிழ்ப்பேச்சு.

29



# வாடிக்கையாளர்களைக் கவரும் வால்மார்ட்

நம் சென்னையில் ஸ்பென்சரில் எல்லாச் சாமான்களும் வாங்குவது போன்ற கடைகள் ஜே. சி. போன்னி, மேசி மற்றும் வால் மார்ட் என்ற ஸ்டோர்கள் சிறந்த இடங்களாகும்.

வால்மார்ட் என்ற மாபெரும் சங்கிலித் தொடர் விற்பனை மையங்கள் எங்களை வியப்பில் ஆழ்த்தின. சீனாவில் தொடங்கி இன்று அமெரிக்க நகரங்களில் முக்கிய பங்கு வகிக்கிறது. எல்லா புதுமைப் பொருள்களும் குறைந்த விலையில் கிடைக்கின்றன.

பிளாக் ப்ஸ்டர் என்ற மாபெரும் கடையில் பற்பல வகைத் திரைப்படத் தட்டுக்கள் கிடைக்கின்றன. தமிழ்ப்படங்களும் ஏராளமாக உள்ளன. எங்கள் பொழுதுபோக்கு நடுப்பகல் முழுவதும் திரைப்படம் பார்ப்பதில் கழிந்தது.

இதுபோன்ற கடைகள் அமெரிக்காவின் சிறிய நகரங்களிலும் கூட உள்ளன. இங்கு விலையும் குறைவாகவே உள்ளன. இக்கடையினுள் நுழைந்து பார்ப்பதே சிறந்த பொழுதுபோக்காக எனக்கு அமைந்தது. இந்தியா திரும்பும் போது இங்கு சில பொருட்களை நண்பர்களுக்காகவும் உறவினர்களுக்காகவும் வாங்கினோம்.

இங்கு கிடைக்காத பழ வகைகளே இல்லை எனலாம். சீத்தா பழத்திலிருந்து சீமை எலந்தை வரை கிடைக்கும். ஸ்ட்ராபெர்ரி, குவி செர்ரி, திராட்சை, சப்போட்டா, வாழை, மாதுளை, அத்தி, பெரிபோன்ற பழ வகைகளைச் சாப்பிடலாம்.

இங்குள்ள மிகப் பெரிய ஷாப்பிங் சென்டர்களையும் அவை அழகாகச் சுத்தமாகப் பராமரிக்கப்பட்டிருப்பதையும் வசதி வாய்ப்பு களையும் பார்த்தவர்கள் மகிழ்ச்சியடைகின்றனர்.

இந்தியாவை நினைவுபடுத்த இந்த இந்தியன் ஸ்டோர்கள் இருக்கின்றன. உள்ளே நுழைந்ததும் வாசனை மூக்கைத் துளைக்கிறது. எல்லா பருப்பு காய்கறி வகைகள் ஊறுகாய் என்று அனைத்தும் பார்க்கலாம்.

இந்தியன் ஸ்டார்களை நிர்வகிப்பவர்கள் பெரும்பாலும் குஜராத்திகள். காலை ஸ்டோர் திறந்த கையோடு கடுகடுவென முகத்தை வைத்துக் கொள்கிறார்கள்.

தற்போது இந்த பிசினசில் ஸ்ரீலங்கா தமிழர்களும் நுழைந்திருக் கிறார்கள் என்பது அவர்களது இன்முகம் காட்டியது.

எங்களைப் போன்று ஆறுமாதங்கள் தங்கித் திரும்பிச் சென்ற பின்னர் தாங்கள் அமெரிக்கா சென்ற பெருமையையும் அங்குள்ள வசதி களைப் பற்றியும் நண்பர்களிடமும் உறவினர்களிடமும் அடிக்கடி கூறுவதோடு தம் பிள்ளைகளின் வளமான வாழ்க்கை வசதிகளைப் பற்றியும் பெருமையுடன் மகிழ்ச்சியுடன் பேசிக் காலத்தை ஓட்டுவார்கள்.



# 30

# விவேகானந்தர் கர்ஜித்த சிகாகோ

* "சர்வ மத மகாசபை சிகாகோவில் நடந்தது. மன்னரும் வேறு நண்பர் களும் இந்துக்களின் சார்பில் என்னை அனுப்பினர். கடந்த இரண்டாண்டு கோடைக் காலத்தைத் தவிர மூன்றாண்டுகள் நான் அமெரிக்காவிலேயே தங்கினேன். அமெரிக்க மக்கள் மிக உயர்ந்தவர்கள். அவர்களின் எதிர்காலம் சிறப்பாக இருக்கும். அவர்களைக் கண்டு நான் வியப்படைகிறேன். அவர்களிடையே எனக்கு ஏற்ற நண்பர்கள் பலரைக் கண்டேன். ஆங்கிலேயரிடம் காணப்படும் பல தவறான கருத்துக்கள் அமெரிக்கர்களிடம் இல்லை. புதிய கருத்தாக இருந்தாலும் அளந்து ஆராயும் இயல்புடையவர்கள் அமெரிக்கர்கள். அவர்கள் சிறந்த விருந்தோம்பிகள். நம்பிக்கைக்கான அத்தாட்சி களைப் பார்ப்பதில் நேரத்தை வீணாக்குவதில்லை."

–சுவாமி விவேகானந்தர் – ஞானதீபம் பாகம் 7 . பக் 185

நோபல் பரிசு பெற்ற 79 விஞ்ஞானிகள் சிகாகோவில் பயின்றவர்கள் என்று பொது அறிவுத் தேர்வுக்குப் படித்ததில் இருந்து என்றாவது ஒரு நாள் சிகாகோவில் காலடி வைக்க வேண்டும் என்று கனவு இன்று நினைவாகியது.

சிகாகோவின் புறநகரான ஹைடி பார்க்கில் அமைந்திருக்கும் சிகாகோ பல்கலைக்கழகம் 1890 ஆம் ஆண்டு ஜான் ராக் பெல்லர் என்ற எண்ணெய் கம்பெனி அதிபரால் ஆரம்பிக்கப்பட்டது.

உலகில் நோபல் பரிசு பெற்ற விஞ்ஞானிகளை அதிகமாக உருவாக்கிய பெருமை இப்பல்கலைக் கழகத்திற்கு உரியதாகும். மனிதனால் ஏற்படுத்தப்பட்ட அணுக்கரு தொடர்வினை இப்பல்கலைக் கழகத்தில் தான் நடத்தப்பட்டது.

காற்றாடும் மாநகரம் (The Windy City) என்றழைக்கப்படும் இந்த நகர் சுமார் 1920 ஆம் ஆண்டுகளில் பிரபல்யம் வாய்ந்த அல் கபைன் (Al Capand) போன்ற கொள்ளைக் கூட்டங்கள் நடமாடிய நகரமாகும். ஆனால், தற்பொழுது இந்தச் சட்ட விரோதக் கும்பல்களின் நடவடிக்கைகள் கட்டுப்படுத்தப்பட்டிருக்கின்றன.

சிகாகோவின் முக்கிய இடங்களைப் பார்க்க மகளின் மினியோ போலிசிலிருந்து காரில் கிளம்பினோம். ஆறு மணி பயணம்.

வழி எங்கும் சிறிய மலைகள். பச்சைப் பசேலென்று மரங்கள் குறுக்கும் நெடுக்கும் பல ஆறுகள், ஓடைகள், எல்லாம் கண்கவர் காட்சிகள்.

சிகாகோ நகரை அடைந்ததும் பெரிய பெரிய குடியிருப்புக்கள் தென்பட்டன. ஒவ்வொரு வீட்டிற்கும் பின்பகுதியில் பெரிய கார்ஷெட். அது கார் ஷெட் இல்லையாம். குட்டி விமானம் நிறுத்தும் ஹெங்கர். வீட்டிற்குப் பின்னால் போய் பார்த்தால் விமான ஓடுதளம். எல்லா வீடுகளுக்குப் பின்புறமும் ஒரு விமான ஓடுதளம் இருக்கிறது.

ஆகாயத்தை நிமிர்ந்து பார்த்தேன். குட்டி விமானங்கள் சில பறந்து கொண்டிருந்தன. வீட்டின் விலை என்ன தெரியுமா? நம்மூரில் 9 கோடி ரூபாய். இங்கு வீடு வாங்குபவர்கள் குட்டி விமானம் வைத்திருக்க வேண்டுமாம்.

அமெரிக்காவின் மூன்றாவது பெரிய நகரம் சிகாகோ. 1833ல் உருவாக்கப்பட்ட நகரம். 1871ல் தீயில் கருகிப் பின்னர் பிரமாண்டமான நகரமாக எழும்பியிருக்கிறது. இந்நகரில் 30 லட்சம் பேரும் புறநகரில் 60 லட்சம் மக்களும் வசிக்கிறார்கள்.

**மிக்சிகன் ஏரி.**

இங்குள்ள கடலைப் பார்க்கலாம், வாங்க என்றார்கள்.

'கடலா?'

''ஆமாம். உப்பில்லாமல் கடல் தண்ணி உள்ள கடல் பார்க்கலாம்''

நான் ஆச்சரியத்தோடு 'சரி' என்றேன்.

அந்தக் கடல் பக்கம் சென்று ஒரு கை நீரைச் சாப்பிட்டோம். உண்மையில் அதில் உப்புச் சுவை இல்லை.

'ஏன் இந்தக் கடல் உப்புக் கரிக்கவில்லை' என்றோம்.

'இது கடல் அல்ல. ஏரி. சிகாகோ நகருக்கே தண்ணீர் தருவது இந்த ஏரிதான்.' என்றனர். மீண்டும் ஆச்சரியப்பட்டோம்.

பார்வை பரப்புகளுக்குள் அடங்காத மிகப் பிரமாண்டமாக விரிந்திருந்த அந்த ஏரி எங்களைப் பார்த்து அலை உதடுகளால் சிரித்தது.

பிரசித்திப் பெற்ற மிகப் பிரமாண்டமான உலகிலேயே ஐந்தாவது மிகப் பெரிய ஏரியான மிச்சிகன் ஏரிக் கரையில் தான் சிகாகோ அமைந்துள்ளது. இந்த ஏரியின் அதிகபட்ச நீளம் 494 கி.மீ. அதிக பட்ச அகலம் 290 கி.மீ. அதிக பட்ச ஆழம் 923 அடி. இதன் பரப்பளவு 58016 சதுரகி.மீ. (இது தமிழ் நாட்டின் பரப்பளவில் பாதியாகும். பிரமிப்புத்தானே வரும்) உலகிலேயே முதல் வடிகால் இங்குதான் அமைக்கப்பட்டது.

இந்த ஏரிக்கென்று ஒரு செயற்கை ஆறு வெட்டப்பட்டு அதனை எதிர்த் திசையில் ஓட விட்டிருக்கிறார்கள்.

அன்று இரவு தூக்கத்தில் கூட ஏரியைக் கடலாய் கண்டு ஏமாந்த சுகம் என் நெஞ்சுக்குள் பசுமையாகப் பதிவாகியிருந்தது. என் ஞாபக அலைகள் பின்னோக்கியது.

## விவேகானந்தர் மண்டபம்:

சிகாகோவிற்கு நாங்கள் சென்றதே விவேகானந்தர் மண்டபத்தைப் பார்க்க வேண்டும் என்பதற்காகத்தான். சிகாகோவில் நிறையக் கலைக் கூடங்கள் இருக்கின்றன. கலைகள் செழிக்கும் நகர். அங்கு ஐந்து பல்கலைக் கழகங்களும் உள்ளன.

இப்போது, கலைக்கூடமாக இருக்கும் மண்டபம் விவேகானந்தருக்கு உலகப் புகழ் தேடிக் கொடுத்த மண்டபம். இங்கு நடந்த உலக சமய மாநாட்டில் கலந்து கொண்டு 'அன்புள்ள சகோதர சகோதரிகளே' என்று அன்று விவேகானந்தர் பேசிய பேச்சுத்தான் அவருக்கு உலகப் புகழைத் தேடித்தந்தது. உலகமே அவரைத் திரும்பிப் பார்த்தது.

இந்து மதத்துக்கு உலக அரங்கில் மிகப்பெரிய அங்கீகாரத்தைப் பெற்றுத் தந்தவர்களில் விவேகானந்தர் குறிப்பிடத்தக்கவர்.

உலக மதங்களின் பாராளுமன்றம் சிகாகோ நகரில் இந்த மண்டபத்தில்கூடியபோது அதில்சுவாமிஜியும் பங்கெடுத்துக்கொண்டார்.

அவரை ஒரு சாதாரணப் பிரதிநிதியாகத்தான் அங்கிருந்தவர்கள் முதலில் கருதினார்கள். அந்த மாநாட்டுக்கு வந்திருந்தவர்கள் பலரும் பேசிய பிறகு அவருக்குப் பேசுவதற்குச் சந்தர்ப்பம் அளித்தார்கள்.

சுவாமிஜி பேச ஆரம்பித்த உடன் கணீரென்ற அவருடைய குரலும், அழகான ஆங்கிலத்தில் இந்து மதத்தின் ஆழமான கருத்துக் களை அவர் வெளியிட்ட விதமும் அங்கிருந்தவர்களை மெய்சிலிர்க்கச் செய்தன. சுவாமிஜியின் பேச்சுக்குப் பிறகு, முன்னால் பேசிய எவருடைய பேச்சும் எடுபடவில்லை.

அன்றைக்குக் கூட்டம் முடிந்தபோது மறுநாளும் சுவாமிஜி பேசுவார் என்று அறிவிக்க வேண்டிய கட்டாயம் கூட்ட நிர்வாகி களுக்கு ஏற்பட்டது.

அதைப் போலவே, ஒவ்வொரு நாளும் கடைசி பேச்சாளராக இருக்கும்படி சுவாமிஜியைக் கேட்டுக் கொண்டார்கள்.

ஏனெனில், முன்னாலேயே அவர் பேசிவிட்டால் அவர் பேசி முடித்த உடன் மற்றவர்களின் பேச்சைக் கேட்க கூட்டம் இருக்காது என்கிற பயம் அமைப்பாளர்களுக்கு இருந்தது.

அவருடைய பேச்சைப் பற்றி அபிப்பிராயம் தெரிவித்த அங்கிருந்த பத்திரிகைகள் இவ்வளவு ஆழமான கருத்துக்களைக் கொண்டுள்ள மதத்துக்குச் சொந்தகாரர்களான இந்திய மக்களிடம் கிறித்துவ மதத்தைப் பரப்புவதற்கு முயற்சிப்பதைப் போன்ற முட்டாள்தனம் எதுவும் இல்லை என எழுதின.


இந்திய ஆன்மிகமும், கலாச்சாரமும் உலகத்தாரால் மதிக்க படுவதற்குக் காரணமாக சுவாமிஜியின் சிகாகோ சொற்பொழிவு அமைந்தன.

ஆனால், விவேகானந்தர் பேசிய இந்த மண்டபத்தில் இது பற்றிய ஒரு கல்வெட்டுக்கூட இல்லை. இது பரவாயில்லை. விவேகானந்தரை அமெரிக்காவிற்கு அனுப்பிய இராமநாதபுர மன்னர் என்ற கல்வெட்டே தமிழகத்தில் இல்லை. ஆனால், உலக மக்களின் மனங்களில் இந்த வரலாறு பதியப்பட்டுள்ளது.

**சியர்ஸ் டவர்ஸ்**

அதன்பின்னர் நாங்கள் சியர்ஸ் டவர் என்னும் கட்டிடம் பார்த்தோம். நியூயார்க்கில் உள்ள பழமையான உயர்ந்த பலவற்றை

விட, இந்த சியர்ஸ் டவர் இன்னும் கொஞ்சம் உயரமானது. சமீப காலம் வரை உலகிலேயே மிக உயரமான கட்டிடம் என்று கருதப் படும் டவர் இது.



**சியர்ஸ் டவர் உச்சியில்**
**மனைவி, மகள், மருமகன், பேத்தி**

110 மாடிகள் கொண்ட இக்கட்டிடத்தின் உயரம் 1450 அடி. அதன் மீது பொருத்தப்பட்டுள்ள ஆன்டனாவையும் சேர்த்து அதனுடைய உயரம் 1729 அடி. இக்கட்டடம் 1973 ஆம் ஆண்டு கட்டி முடிக்கப்பட்டிருக்கிறது. தற்போது, உலகளவில் மூன்றாவது உயரமான கட்டிடமாகும் இது.

லிப்டின் மூலம் அந்தக் கட்டிடத்தின் உச்சிக்குச் சென்று பார்த்தோம். மின்மினிப் பூச்சிகள் பறக்கிற காங்கிரீட் காடுகளாய் டவரைச் சுற்றி வெகு ஆழத்தில் தெரிந்தது சிகாகோ நகரம்.

மெக்சிகன் ஏரி மற்றும் நகரின் நாலாப் பகுதியையும் இக்கோபுரத்தின் 103 ஆம் மாடியில் இருந்து பார்த்தோம். 110 மாடிவரை அலுவலகங்கள் இருக்கின்றன. ஆனால், அங்கு செல்ல அனுமதி இல்லை. இந்தக் கட்டிடங்கள் நம்மூரைப் போல கான்கிரீட்டில் கட்டப்படவில்லை.

ஒன்பது சதுர இரும்பு குழாய்களைக் கோபுரமாக உயர்த்தி உள்ளனர். அதில் ஐந்து பைப்புகள் குறிப்பிட்ட உயரத்தில் நின்று விடுகின்றன. மற்ற மூன்று சதுரக் குழாய்கள் அடுத்த நிலை வரை செல்கின்றன. இறுதியில் ஒரேயொரு சதுரக் குழாய் மட்டும் உச்சி வரை உயர்ந்து நிற்கிறது.

கட்டிடத்தின் உச்சியில் இருக்கும் போது, ''எதையாவது வித்தியாசமாய் உணர்கிறீர்களா?'' என்று மகள் நிவேதிதா கேட்டார்.

நாங்கள் அமைதியாக இருந்தோம்.

'இல்லை இந்த டவர் கொஞ்சம் ஆடும்'' என்று சர்வ சாதாரணமாகச் சொன்னபோது, அதிர்ச்சியில் நாங்கள் ஆடிப்போய்விட்டோம்.

பயப்படாதீங்க. இங்கே காற்று வேகமாக பலமாக வீசுங் கறதுனாலே அதைச் சமாளிக்கறதுக்காக இந்த டவரைக் கட்டும்போதே ஒரு அங்குலம் அசைந்தாடுவது மாதிரி கட்டியிருக்காங்க..' என்று நிவேதிதா சொன்னபோது எங்களுக்கு மிகவும் பிரமிப்பாக இருந்தது.

இந்த டவரை நிர்மாணிப்பதில் நமது இந்தியக் கட்டிடக்கலை நிபுணர் ஒருவரின் பங்கும் இருந்திருக்கிறது என்று கேள்வியுற்ற போது மிகவும் பெருமையாக இருந்தது.

இங்குள்ள மீன் அருங்காட்சியகத்தில் உலகின் அனைத்து மீன் வகைகளையும் பார்த்து இரசித்தோம். மீன்களைத் தண்ணீருக்கு அடியில் இருந்து பார்க்க முடியும். உலகின் மிகப் பெரிய நதிகளின் (கங்கை உட்பட) மீன் வகைகளை இங்கு பார்க்கலாம்.

அடுத்து, இங்குள்ள மில்லினியம் பூங்காவிற்குச் சென்றோம். அதிநவீன பார்க் மட்டும் அல்ல. கலைநிகழ்ச்சிகள் நடத்தப்படும் இடமாகவும் உள்ளது. கூரை இல்லை. நிகழ்ச்சி நடக்கும்போது தார்பாய் போட்டு மூடுவார்களாம். இங்குள்ள பிரமாண்ட அரங்கில் 12000 பேர் அமர்ந்து நிகழ்ச்சிகளைப் பார்க்கலாம்.

இங்குள்ள பிரசித்திப் பெற்ற முக வாயிலை வடிவமைத்தவர் இந்தியாவின் மும்பையில் பிறந்த அனீஸ் கபூர் என்பவராவார். இது, ஒரு சிறுநீரக வடிவக் கண்ணாடி. எல்லேரையும் கவரும் ஒரு கலை நயத்துடன் வடிவமைக்கப்பட்டுள்ளது.

அமெரிக்காவின் மிகவும் பிரசித்திப்பெற்ற காபி கடையான Star Buck Coffee என்ற கடைக்குள் நுழைந்தோம். விதவிதமான காபி வகைகள் அங்கே பட்டியலிடப்பட்டிருந்தன. அதைக் காபி குடித்து மகிழ்ந்தோம்.



மில்லினியம் பூங்கா



# 31

## அமெரிக்கப் பெண்கள்

* "இங்கு பெண்களும் ஆன்மிகத் துறையில் மிகவும் தீவிரமாக ஈடுபடுகின்றனர். இந் நாட்டில் ஆண்களும், பெண்களும் முதலில் தங்கள் கல்வியையும், திறமையையும் வளர்த்துக் கொள்கின்றனர். கார் ஓட்டுதல், டைப் அடித்தல், சமையல் செய்தல், சுத்தமாகவும், கவர்ச்சியாகவும் வைத்துக் கொள்ளுதல் முதலிய திறமைகளைப் பொதுவாக எல்லோரும் உடையவர்களாக இருக்கின்றனர். எல்லோருக்கும் செல்வம் சேர்க்கும் திறமை இருக்கிறது. அதற்கு ஏற்ப வேலை வாய்ப்பும் சமுதாயத்தில் இருக்கிறது. நிலவளமும், நீர்வளமும் பொருந்தியுள்ள நாடு இது. வாழ்க்கைத் துறைகள் எல்லாவற்றிலும் விஞ்ஞானம் ஊடுருவிச் சிறப்புச் செய்து வருகின்றது. எனினும் மிதமிஞ்சிய செல்வத்தாலும் வாழ்க்கை வசதிகள் பெருக்கத்தாலும் போக்குவரத்து நெருக்கடியாலும் பொதுவாக மக்கள் வாழ்வில் சலிப்பும் அமைதியின்மையும் நிலவி வருகின்றது. இந்த நிலைமையிலிருந்து ஒரு மாற்றத்தை வாழ்வில் பெற்று அமைதி காணவே பல சிந்தனையாளரும் ஆன்மிக நெறியை நாடுகின்றனர்."

–வேதாத்திரி மகரிஷி – எனது வாழ்க்கை விளக்கம் பக். 194

'பெண்கள் இரவு நேரத்தில் தனியாக நடந்து செல்லும் நிலை இருந்தால்தான் அது உண்மையான சுதந்திரம்' என்று காந்தி அன்று சொன்னார். அது, இந்தியாவில் நடக்கவில்லை. ஆனால், அமெரிக்காவில் நம் பெண்கள் நடுஇரவில் தனியாக கார் ஓட்டுகிறார்கள். தனியாக வசிக்கிறார்கள். இதுதான் அமெரிக்கா.

இங்கு எல்லா இடங்களிலும் எல்லா வேலைகளிலும் பெண்களைப் பார்க்கலாம். பெண்கள் செய்யக் கூடாதது என்று எந்த வேலைக்கும் இங்கு தடையில்லை.

வீட்டுவேலைகளையும் சமையல் வேலைகளையும் கூட சமமாகப் பிரித்துக் கொண்டு செயல்படுகிறார்கள். பெரும்பாலான வீடுகளில் 'பஃபே' முறைதான். பெண்களை உட்கார வைத்து ஆண் பரிமாறும் காட்சி கூட இங்கு சில இடங்களில் பார்க்கலாம்.

உடை அணிவதிலும் இங்கு ஆணுக்கும் பெண்ணுக்கும் வித்தியாசம் கிடையாது. ஆணைப் போலவே ஜீன்ஸ் டி சர்ட் கிராப் கலர் கண்ணாடி என்று அணிந்து அசத்துகிறார்கள்.

சில பெண்கள் சிகரெட் கூட வெளிப்படையாகப் பிடிக்கிறார்கள். ஆணும் பெண்ணும் சேர்ந்து மதுவும் அருந்துகிறார்கள். ஆனால் டிசன்சி தெரிகிறது. உணவில் மதுவை ஒரு அயிட்டமாக வைத்துக் கொள்கின்றனர்

ஒன்றிரண்டு பெண்களைத் தவிர பெரும்பான்மையான பெண்களுக்கு தொப்பை கிடையாது. அதனால், ஆணைப் போலவே உடலமைப்புக் கொண்டிருக்கின்றனர்.

பெண்களுக்கு அமெரிக்காவில் அனைத்துத் துறைகளிலும் சமத்துவம் இருக்கிறது. பெரிய கோடீஸ்வரர் வீட்டுப் பெண் கூட வேலைக்குச் சென்று சம்பாதித்து தனியே வசிக்கின்றார். படிப்பும் வேலையும் கிடைத்து விட்டால் வீட்டிற்குப் பாரமாக பெண்கள் இருப்பதில்லை. திருமணம் ஆகாதப் பெண்கள் தனிக்குடித்தனம் நடத்துகிறார்கள்.

இங்கு பெற்றோர்கள் ஓர் ஊரில் இருப்பார்கள். அவர்களது பெண்கள் 250 மைல்களுக்கு அப்பால் இருப்பார்கள். அதனால், அந்தப் பெண்கள் அங்குள்ள பெண்கள் விடுதியில் தங்கிவிடுகின்றனர் ஆனால், அமெரிக்காவில் ஒரே ஊரில் இருவருமே வேலை செய்வார்கள். ஆனால், குமரிப் பெண்கள் தனியாக வீடுபார்த்துக் கொண்டு தங்கியிருக்கிறார்கள். தனிச் சமையல். தனிக் கார். தனிமையாக இருப்பது அமெரிக்கக் கலாச்சாரம்.

தற்போது, அமெரிக்காவில் இருக்கும் தமிழ்குடும்பப் பெண்கள் நிலைமை தனிக்குடித்தனம் என்றாகி விட்டது. அவ்வளவு தைரியம் வந்துவிட்டது.

அமெரிக்காவில் பெரிய பெரிய பதவிகளில் பெண்கள் உயர் அதிகாரியாகப் பணிபுரிகின்றனர்.

ஒரு சாப்ட் கம்பெனியின் தலைமை நிர்வாகி தனக்கு கீழ் உள்ள பணிபுரிபவர்களிடம் ''எனக்கு நாளைக்குப் பிரசவம்'' என்று கேசவலாகச் சொல்லி போகிறார். பிரசவ வலி வரும் வரை இங்கு பெண்கள் பணிபுரிகின்றனர்.

அமெரிக்கப் பெண்கள் குறித்த சுவாமி விவேகானந்தர் தனது சொற்பொழிவுகளிலும் எழுத்துக்களிலும் வானளாவப் புகழ்ந்துள்ளார். அவற்றில் சில கருத்துக்களைப் பார்க்கலாம்.

இந்நாட்டில் உள்ள திருமணமாகாத பெண்கள் மிக நல்லவர்கள். சுயமரியாதை மிகுந்தவர்கள். இவர்கள் விரோசனனின் வம்சத்தில் பிறந்தவர்கள். ஊரைப் போற்றுவதே இவர்களின் தர்மம். உடலைச் சொகுசாக வைப்பதும் அதற்கு மெருகு கொடுப்பதும் அவர்களின் கவனமெல்லாம் உடலின் மீதே உள்ளது. நகம் வெட்ட ஆயிரம் கருவிகள், முடி வெட்ட பத்தாயிரம் கருவிகள் உள்ளன. அவர் களுடைய உடை வகைகளையும், உடல் சிங்கார முறைகளையும் வாசனைத் திரவியங்களையும் கணக்கிடவே முடியாது.


அமெரிக்கப் பெண்களுள் பலர் நன்றாகப் படித்தவர்கள். பேராசிரியர்களையும் வெட்கப்படச் செய்பவர்கள். யாருடைய அபிப்பிராயத்தையும் அவர்கள் பொருட்படுத்துவதும் இல்லை. அவர்களின் நற்குணங்களில்- என்ன கருணை! எத்தகைய நல்ல எண்ணம்! நல்ல செயல்! இந்த நாட்டிலுள்ள ஒருவன் இந்தியாவைக் காண வந்தால் ஒருவரும் அவனைத் தொடவும் மாட்டார்கள். இங்கோ என்னை நல்ல குடும்பத்தினரின் வீடுகளில் தங்கள் மகனைப் போலவே பழக அனுமதித்துள்ளனர். நான் குழந்தையை ஒத்தவன். அந்தக் குடும்பப் பெண்கள் எனக்காகக் கடைகளுக்கு செல்கின்றனர். என் தேவைகளை நிறைவேற்ற ஓடுகின்றனர்.

அமெரிக்க பெண்களைப் பொறுத்த வரையில் அவர்கள் எனக்குக் காட்டும் பேரன்புக்கு நான் நன்றி கூறுவதென்பதே இயலாத காரியம். அவர்களுக்குக் கடவுள் அருள்வாராக. இந்த அமெரிக்காவில் ஒவ்வோர் இயக்கத்திற்கு உயிர்நாடியாக இருப்பவர்கள் பெண்களே. தேசியக் கலாச்சாரத்தின் பிம்பங்களாக இருப்பவர்களும் அவர்களே. ஏனெனில், அமெரிக்க ஆண்கள்தம்மைத்தாமே பயிற்றிக் கொள்வதிலேயே மூழ்கியுள்ளார்கள்.

நான் அமெரிக்கப் பெண்களின் வளர்ப்புப் பிள்ளை போன்றவன். அவர்கள் உண்மையிலேயே என் தாய்மார்கள். ஒவ்வொன்றிலும் அவர்கள் சிறந்து விளங்காவிட்டால் யார்தான் விளங்குவர்?

அமெரிக்கப் பெண்கள் செய்வதில் பதினாறில் ஒரு பங்குகூடச் செய்ய என்னால் முடியாது. அவர்கள் உருவத்தில் லட்சுமிகள். குணத்தில் சரஸ்வதிகள். ஜகதம்பாவின் அவதாரமே.

இந்நாட்டுப் பெண்களைக் காண நான் வியப்பால் திகைத்து நிற்கிறேன். அன்னை அவர்களுக்கு எப்படி அருள் செய்திருக்கிறார் தெரியுமா! என்ன ஆச்சரியமான பெண்கள்! அன்பரே! ஆண்களை அவர்கள் ஒரு மூலையில் தள்ளிவிட அல்லவா இருக்கிறார்கள்! இந்தப் போட்டியில் ஆண்கள்தாம் கீழே போகிறார்கள். அன்னையே எல்லாம் உன் அருள்தான்! இந்த பால் வேற்றுமை உணர்ச்சியை நான் வேரறுக்காமல் விடமாட்டேன்! ஆன்மாவில் பால்வேற்றுமை இருக்கிறதா என்ன?



அமெரிக்கப் பெண்ணுடன்



32

# வாழ்வியல் வாழ்க்கை கட்டமைப்பு

அமெரிக்காவில் வசிக்கும் இந்திய குடும்பத்தினர் இந்தியாவில் இருப்பதைவிட அதிக 'இந்திய தனத்துடன்' வாழ்கின்றனர்.

ஒரு காலத்தில் இந்தியா என்ற ஒரு தேசம் இருப்பதாகக் கூடத் தெரியாத ஒரு மிதப்பில் இருந்தது. இப்போது அமெரிக்காவின் பிரபல நாளிதழ்களிலும் டி.வி. யிலும் இந்தியாவின் பொருளாதார முன்னேற்றம் குறித்தும் 'சைனாவை இந்தியா முந்திவிடும்' என்ற ரீதியிலும் செய்திகள் வருகின்றன.

வேலைக்குப்போகும் பெண்கள் சிறு வயது குழந்தைகள் உள்ள தம்பதிகள் அல்லாட வேண்டிய கஷ்டம் இல்லாமல் கைக்கு உதவியான காட் ஜட்டுகள்-சுலபமாகச் சமைக்கக்கூடிய வகையில் நறுக்கப்பட்ட காய்கள் தேங்காய்த் துறுவல்.

அமெரிக்க காற்றுக்கு ஏற்ற வகையில் மனைவிக்குப் பணிவாக உதவும் இந்திய ஆண்கள்!

இருவரும் வேலைக்குப் போவதால் குழந்தையை யார் பார்த்துக் கொள்வார்கள் என்ற கவலை இல்லாத வகையில் டே-கேர் சென்டர்கள் இருப்பது மிகப் பெரிய உதவியாக இருக்கின்றன.

பரதநாட்டியம், வாய்ப்பாட்டு கற்றுக் கொடுக்க ஒவ்வொரு நகரத்திலும் ஆட்கள் இருக்கிறார்கள். குழந்தைகளுக்கு ஆடல் பாடல்

கற்றுத் தருகிறார்கள். நமது பாரம்பரியத்தின் பெருமைகளைக் குழந்தைகளுக்கு சொல்லிக் கொடுக்க பால விஹாரங்கள் இருக்கின்றன.

இந்திய கடவுள்கள் அமெரிக்காவில் கட்டப்பட்ட அழகிய சுத்தமான கோவில்களில் பத்திரமாக இருக்கின்றன. இங்கிருந்து சென்றுள்ள குருக்கள் நமது பண்பாட்டினை ஒட்டிப் பூசை புனஸ்காரம் முதலியவற்றில் சிறப்பாகச் செயல்படுகிறார்கள்.

இங்குள்ள கோயிலுக்கு நாங்கள் அடிக்கடி போவதுண்டு. வீட்டுக்குப் பக்கத்தில்தான் கோயில்.

கோவில்களை அழகாகவும், சுத்தமாகவும் வைத்திருக்கிறார்கள். தினந்தோறும் பொங்கல், புளியோதரை, தயிர்ச்சோறு என்று வருகிறவர்களுக்கு கொடுக்கிறார்கள்.

ஒரு பெரிய பாத்திரத்தில் வைத்துவிடுகிறார்கள். பக்கத்தில் காகிதத் தட்டு பிளாஸ்டிக் கரண்டி . தேவையான சாப்பாட்டை எடுத்துக்கொண்டு கீழ்த் தளத்துக்குப் போய்விட வேண்டும். அங்கு சாப்பிட்டுவிட்டுக் கை கழுவக் குழாய் இருக்கிறது.

அமெரிக்காவிலிருக்கும் தமிழர்களின் மிகப் பெரிய சிக்கல் தலைமுறை இடைவெளி.

தமிழ்நாட்டின் கலாச்சாரச் சூழலில் பிறந்து தமிழ்ப் பண்பாட்டைக் கொண்டிருக்கிற பெற்றோர்களும் அமெரிக்க சூழலில் பிறந்து அந்தப் பண்பாட்டில் பழகிய அவர்களுடைய குழந்தைகளும் பலவிதங்களில் முரண்பட நேர்கிறது. இன்னும் சரியான தீர்வு காணப்படாத முடிச்சாக அந்தப் பிரச்சினை இறுக்கம் கொள்கிறது.

இந்தப் பிரச்சினைகளைத் தாண்டி வாழும் மனப்பக்குவம் வாய்ந்த குடும்பங்கள் அமெரிக்காவில் சொற்பமே.

இந்தியர்கள் பெரும்பாலும் தம் அடையாளங்களை மறைக்கத் தான் விரும்புகிறார்கள். இங்கு, அமெரிக்காவில் வாழும் எந்த இந்தியரைச் சந்தித்தாலும் இந்தியாவைப் பற்றி விசாரிக்கும்போது ஒரு ஏளனத் தொனி தெரிகிறது.

இங்குள்ள தமிழர்கள் சபா அமைத்துத் தமிழகத்தில் உள்ள முன்னணி பாடகர்களை அழைத்து மிகுந்த ஆர்வத்துடன் கிடைக்கும் சந்தர்ப்பங்களில் எல்லாம் கைதட்டி உற்சாகப்படுத்திக் கச்சேரி கேட்கிறார்கள். அருமையான ஒலி, ஒளி அமைப்புக் கொண்ட அரங்கு களில் மூன்று மணி நேரம் மெய்மறந்து பாடுகிறார்கள்.

சென்னையில் இருந்து செல்லும் ட்ராமா லைட் ம்யூசிக் குழுக்கள் அமெரிக்க ஆர்வலர்களைப் படுத்துகிறார்கள் என்று தான் கலிபோர்னியா பிரதேசத்தில் பேசிக் கொண்டார்கள்.

ஒரு அம்மணி விசா விண்ணப்பத்துக்குக் கொடுத்த 600 ரூபாயிலிருந்து கணக்காக சென்னியில் கத்தி வைத்துப் பணம் கறந்து விடுவாராம். மெல்லிசைக்காரர்கள்வந்தவுடன்பாட்டில்கேட்கிறார்களாம்.

ஒருநாள் இசைக் கச்சேரிக்குச் சென்றிருந்தோம். தமிழக மண்ணின் வாசனை கமகமத்தது. பாடகர்கள் அசத்தினார்கள். சிறப்பாக விஷ்ணுப்ரியா ராகத்தில் சுப்ரமண்யரைப் பற்றிய பாட்டு, கல்யாண வசந்தத்தில் ராகம், தாளம், பல்லவி. இறுதியில் மதுரை மணி ஸ்பெஷல் 'எப்போ வருவாரோ!'.

# 33



# வயதுக்கு தடையில்லா பூமி

* ***"சிகாகோவில் விஞ்ஞானிகளிடையே பிரபஞ்ச ஒருங்கிணைப்புத் தத்துவத்தைக் காந்த தத்துவ விளக்கத்தோடு விளக்கினேன். அந்தத் தத்துவத்தில் மிகவும் ஒன்றிப் போன விஞ்ஞானி ஒருவர் இந்தியா மகாகாணத்தைச் சேர்ந்த இராமலிங்கப் படேல் ஆவார். அவர் முயற்சியால் இந்தத் தத்துவத்தை உலகத்திற்குப் பரப்ப ஒரு அறக்கட்டளையை 'அகில உலக வேதாத்திரி மகரிஷி தத்துவக் கல்வி ஆராய்ச்சி அறக்கட்டளை' என்ற பெயரில் நிறுவினார். அதற்கு அவரே தலைமைப் பொறுப்பையும் ஏற்று நடத்தி வருகிறார். அந்த அறக்கட்டளை அமெரிக்கச் சட்டப்படி பதிவு செய்யப்பட்டது."***

**வேதாத்திரி மகரிஷி – எனது வாழ்க்கை விளக்கம் பக். 233**

ஒரு விஷயம் நாம் அமெரிக்கர்களிடமிருந்து கண்டிப்பாகக் கற்றுக்கொள்ள வேண்டும். அங்கு வயது என்பது சட்டப்படியே ஒருவரின் ஆற்றலை, திறமையை நிர்ணயிக்கும் அளவுகோல் கிடையாது.

இன்றைய முதியவர்கள் முன்னாள் இளைஞர்கள். தங்கள் குடும்பத்துக்கும் நாட்டுக்கும் சேவை செய்து ஓய்ந்தவர்கள்.

அமெரிக்காவில் வயதானவர்களுக்கு அதிகம் மரியாதை வழங்குகிறார்கள். அவர்கள் சுதந்திரத்துடனும் தன்னம்பிக்கையுடனும் வாழ உதவுகின்றனர்.

இங்கு முதியோர் நலன் காக்க 'தி ஓல்டர் அமெரிக்கன் ஆக்ட்' என்ற சட்டம் உள்ளது. இதன் மூலம் முதியவர்கள் சட்டப்படிப் பாதுகாக்கப்படுகின்றனர்.

நகரசபைகளிலும் டவுன்சிப்களிலும் முதியோர்களின் நலன் காக்க முதியோர்கள் கூடுமிடங்கள் கட்டப்பட்டுள்ளன. அந்த அலுவலகத்திற்கு, தேவைப்படும் பணியாளர்களும் உள்ளனர். இதற்கு அரசு மானியமும் கிடைக்கின்றது.

அதன் எல்லைக்குள் வசிக்கும் வயதான ஆண் பெண் இங்கு பதிவு செய்து கொள்கிறார்கள். முதியோர்கள் வசதியுடன் வாழ வேண்டுமென்பது அமெரிக்காவின் முழுப்பிரதானமாக உள்ளது.

ஒவ்வொரு சீனியர் சென்டரும் ஒரு தலைவரால் நிர்வகிக்கப் படுகிறது.

நாங்கள் தங்கியிருந்த எடினாவில் ஒரு பெரிய மால். அங்கு 80 வயதைத் தாண்டிய முதிய பெண்தான் கம்ப்யூட்டர் பில் போடுவார். பெரியடிபார்ட்மென்டல்ஸ்டோர்களில், மியூசியம்களில்வயதானவர்கள் வேலை பார்க்கிறார்கள்.

இங்கு வயதாகிவிட்டது என்று சொல்வதே அவமானகரமான விஷயமாகக் கருதப்படுகிறது.

இங்கு வயதைக் காரணம் காட்டி ஒருவரை வேலையிலிருந்து தூக்க முடியாது. பென்டகனிலும் நீதித்துறையிலும் பத்திரிக்கைத் துறையிலும் படுகிழங்கள் வேலைப் பார்க்கிறார்கள்.

நம்மூர் டி.வி. யில் சிக்கென இளசுகள் தான் செய்தி வாசிப்பார்கள். இங்கு எல்லாம் ஐம்பதைத் தாண்டிய அனுபவசாலிகள் தான் செய்தி வாசிக்கிறார்கள். செய்திகளை வயதானவர்கள் சொன்னால் நம்பகத்தன்மை அதிகம் இருக்குமாம்.

சில இடங்களில் 'சீனியர் சென்டர்' என்று ஐம்பதைத் தாண்டியவர் களுக்கான ஒரு க்ளப் இருக்கிறது. அங்கு உறுப்பினராக இருப்பவர் களுக்குப் பல வசதிகள் உண்டு. குறைந்த விலையில் சாப்பாடு, மொழிகள் கற்க வகுப்புகள்-அவர்களது வரிகள் செலுத்த- மனிசார பில் கட்ட உதவி பிக்னிக் ஏற்பாடுகள் போன்ற அனைத்து உதவிகளும் குறைந்த கண்டனத்துக்குப் பெறுகின்றனர்.

ஸ்காட்ஸ்டேலிலும், பீனிக்சிலும், 65-ந்து வயதுக்கு மேற்பட்டவர்கள் 4,00,000பேர் ஆரோக்கியமாக-தாங்களே கார் ஓட்டுபவர்களாக இருக்கிறார்களாம்.

வயது முதிர்ந்த பெண்கள் வசிப்பதற்கு 'எஸ்செக்ஸ் இல்லம்' இயங்கி வருகிறது. எல்லா ஊர்களிலும் இப்படி இல்லங்கள் உண்டு. இதனை முதிய பெண்கள் நடத்துகின்றனர். ஒரு முறை இங்கு சென்று பார்த்தோம்.

முதியவர்களுக்கேற்ற அழகான படுக்கை அறைகள், பொழுது போக்கு அம்சங்கள், விசாலமான அறைகள் பார்ப்பதற்கே ஆரோக்யமாக இருந்தது.

உணவில் எத்தனை வகையான பழங்கள். வயிறு நிறைய ஆரோக்யமான உணவுகள் சாப்பிடுகிறார்கள். எல்லாவற்றையும் விட இனிமை, முதிய பெண்களின் அன்பான உபசரிப்பு. சிரித்துச் சிரித்து இனிமையாகப் பேசுகிறார்கள்.

இங்கு முதியவர்களுக்குக் கிடைக்கும் சலுகைகளைப் பார்த்து வியந்து போனேன்.

* தங்களால் முன்னர் செலுத்தப்பட்ட சோஷியல் செக்யூரிடி சந்தாவிலிருந்து வயதான கலத்தில் மாத வருமானம் கிடைக்கிறது.
* தொடர்ந்து வேலையை மேற்கொண்டு செய்பவர்களுக்கு- வேலை இல்லாத நாட்களுக்கு ஊதிய உதவி தருகிறார்கள்.

  சீனியர் சென்டர்களுக்கு கட்டணம் இன்றிப் பயணம் செய்து மலிவு விலையில் கொடுக்கப்படும் தரமான உணவை உண்டு- வீட்டிற்குச் செல்ல பேருந்து வசதியும் கிடைக்கிறது.
* கால நிலைக்கேற்றவாறு உணவு மற்றும் பழவகைகள் மருத்துவர் களாலும், டையடீசியன்களாலும் சீனியர் சென்டர்களில் அறிவிக்கிறார்கள்.
* மருத்துவரின் உதவி பெற பேருந்து வசதி குறைந்த கட்டணத்தில் தேவையான நேரத்தில் தருகிறார்கள்.
* மாதா மாதம். இலவசமாக ரத்த அழுத்தம் சோதனை, ரத்தத்தில் சர்க்கரை நிலை, உடல் எடை போன்றவை அரசு செவிலியர்களால் பரிசோதனை செய்து முடிவைச் சொல்கிறார்கள்.
* கடைகளில் பொருள்கள் வாங்கி வர, வீட்டிலிருந்து செல்லவும், வீட்டுக்குத் திரும்பவும் பேருந்து வசதி அளிக்கிறார்கள்.
* சீனியர் சென்டர்களில் பயிற்சி பெற்ற நபர்களால் உடற்பயிற்சி வகுப்புகள் நடத்தப்படுகிறது.

* கம்ப்யூட்டர்கள் மூலமாகப் பாடம் குறைந்த கட்டணத்திலே அல்லது இலவசமாக அந்தந்த நகரத்தில் கற்றுத் தருகிறார்கள்.

* சீனியர் சென்டர்கள் மூலம் அண்டையிலுள்ள வெளி நாடுகளுக்கும், வெளியூர்களுக்கும் குறைந்த செலவில் பார்த்து வர வசதி செய்து தருகிறார்கள்.

* பேருந்து ரயில்களில் பயணம் செய்யவும் பார்க்குகள், கடைகள், வங்கிகளில் சலுகைகள் பெறவும் முடிகிறது.

* சீனியர்செல்லும்இடங்களில்மரியாதையுடன்உதவிகள்கிடைக்கிறது.

* இலவசமாக சீனியர் சென்டர்களில் கைத் தையல் முறைகள் கற்றுக் கொடுக்கின்றனர்.

* சீனியர் சென்டர்களில் டி.வி. சினிமாக்கள் நூலகப் புத்தகங்களைப் படிப்பது, ஆர்ட் பெயிண்டிங், ஆங்கிலம், ஸ்பானிஷ் போன்ற மொழிகளைக் கற்கத் தகுந்த பயிற்சி பெற்றவர்களால் நடத்தப்படுகிறது.

* தங்களுடைய உடைமைகளையும் உடலையும் பாதுகாத்துக் கொள்ள அறிவுரைகளையும் ஆலோசனைகளையும் தருகிறார்கள்.

* விழாக்கள் கொண்டாடுவது, சீட்டு விளையாட்டு போன்ற பொழுது போக்குகளை அனுபவிக்க முடிகிறது.

* பள்ளிகளுக்கு தன்னார்வத் தொண்டர்களாகச் சென்று தங்கள் நேரத்தைக் குழந்தைகள் மத்தியில் செலவிட முடிகிறது.

நியூஜெர்சி நகரில் உள்ள 'ஈஸ்' விண்ட்ஸர் சீனியர் சென்டரில் 100 வயதை அடைந்துவிட்ட சிலரும் நாள்தோறும் அச்சென்டருக்கு சுத்தமான உடை உடுத்திக் காரில் வந்திறங்கி உணவை உட்கொண்டு வீடு திரும்புகின்றனர். பிங்கோ விளையாட்டிலும் பங்கேற்று வெற்றி பெறுகிறார்கள்.

சீனியர் சிட்டிசனான நான் இச்சலுகைகளை எல்லாம் நம்மக்கள் நம் நாட்டில் பெறும் நாட்களை ஆவலோடு எதிர்பார்த்துக் காத்துக் கொண்டிருக்கிறேன்.



34

# நியூயார்க் – நல்ல நியூயார்க்

* *"இந்த நாட்டில் நியூயார்க் வாசிகளே அதிக உறுதிபடைத்தவர் களாக உள்ளனர். எனவே, எனது பணித்தலத்தை இங்கேயே அமைக்க முடிவு செய்துவிட்டேன்."*

– சுவாமி விவேகானந்தர் – ஞானதீபம் பாகம் 15 – பக். 251

ஹட்சன் ஆற்றங்கரையில் நியூயார்க் அமைந்துள்ளது. இது, இயற்கையாக அமைந்துள்ள ஒரு துறைமுகப் பட்டிணம். உலகம் முழுவதிலிருந்தும் இங்கு கப்பல்கள் வந்து போகின்றன.

ஆங்கிலப் படங்களில் காட்டப்படும் அமெரிக்காவைக் கொஞ்சம் கூட மாறாமல் நான் நியூயார்க்கில் அடையாளம் கண்டு கொண்டேன்.

புதிய நாடான அமெரிக்காவில் குடியேறியவர்கள் அங்கு அமைத்த நகரங்களுக்கு தங்கள் தாயகத்தில் உள்ள நகரங்களின் பெயர்களையே பெரும்பாலும் சூட்டி மகிழ்ந்தனர். "புதிய" என்ற சொல்லை மட்டும் சேர்த்துக் கொண்டனர்.

நியூயார்க், நியூஜெர்சி, நியூ இங்கிலாந்து, நியூ ஆம்ஸ்டர்டாம் என்பவை அப்படிப்பட்ட சில நகரங்களாகும்.

நியூயார்க் அமெரிக்காவின் மிகப்பெரிய நகரமாகும். இதன் புறத்தோற்றம் பிரமிப்பூட்டுவது. இங்குள்ள ஜனச் சமுத்திரம் அலாதி யானது. அமெரிக்க பெருநகரங்களில் தனித்துவம் கொண்டது. இங்கு சுமார் 80 லட்சம் மக்கள் வாழ்கிறார்கள். அமெரிக்காவின் பொருளாதாரமே நியூயார்க்கில்தான் உள்ளது.

''குளோவன்னி ட வீரசோன்'' என்ற இத்தாலிய மாலுமிதான் 1524 ல் நியூயார்க் துறைமுகத்தைக் கண்டுபிடித்தார். அதற்கு முன்பே ஹட்சன் என்ற ஆங்கிலேயர் அங்கு போய் வந்ததால் அவரது பெயர் அங்கு ஓடும் ஆற்றுக்கு (ஹட்சன் ஆறு) பெயரிடப்பட்டுள்ளது.

டச்சுக்காரர்கள் மன்காட்டினில் குடியேறினார்கள். ''நியூ ஆம்ஸ்டர்டாம்'' என்று பெயரிட்டனர். 1664 ஆம் ஆண்டு இங்கிலாந்துப் படைகள் மன்காட்டனைக் கைப்பற்றிக் கொண்டன. ''நியூ யார்க்'' என்று தங்கள் நாட்டிலுள்ள நகரின் பெயரைச் சூட்டினார்கள்.

1898 சனவரி முதல் நாள் பக்கத்திலுள்ள 4 பெரிய பகுதிகள் சேர்க்கப்பட்டு நியூயார்க் பெரிய நகரமாக விரிந்தது.

இங்குதான் புகழ்பெற்ற கொலம்பியா பல்கலைக் கழகம் 1754ல் நிறுவப்பட்டது.

நியூயார்க்கில் 20 ஆயிரம் தொழிற்சாலைகள் இருக்கின்றன. அமெரிக்காவில் தயாராகும் ஆடைகளில் 25 சதவீதம் நியூயார்க்கில் தயாராகிறது. தொப்பி முதல் நகைகள் வரை இங்கு செய்யப்படுகின்றன.

இங்குதான் புகழ்பெற்ற கென்னடி விமான நிலையம் உள்ளது.

அமெரிக்காவின் மிக நீளமான பாலம் - 'வீரசோன் பாலம்' நியூயார்க்கில் உள்ளது.

உலகப் புகழ் பெற்ற 'நியூயார்க் டைம்ஸ்' நாளிதழ் நியூயார்க்கில் வெளியாகிறது.

நியூயார்க் பாதாள ரயில் பாதையின் மொத்த நீளம் 381 கி. மீ. நாள்தோறும் 5 லட்சம் பேர் பயணிக்கிறார்கள்.

அமெரிக்காவின் முதல் குழந்தைகள் அருங்காட்சியகம் 1899 ல் நியூயார்க்கில் அமைக்கப்பட்டது.

நியூயார்க் நகரைப் பார்த்துப் பிரமித்து நின்றேன். அடுக்கி வைக்கப்பட்டது போல விண்ணைத் தொடும் அடுக்கு மாடி கட்டடங்கள். ஒரு கட்டடமும் முழுசா என் காமரா கண்களுக்குள் வரமுடியாத உயரம்.

காரிலிருந்தும், பஸ்ஸிலிருந்தும் எந்தக் கட்டடத்தையும் பார்க்க இயலாது. அவ்வளவு உயரம். கழுத்து நிச்சயம் சுழுக்கிக் கொள்ளும். கட்டடங்களின் உயரத்தை அளக்கும் ஆசையில் நானும் என் மனைவியும் மேல் தளத்தில் அமர்ந்து படம் எடுத்தோம்.

நியூயார்க் ஐந்து சின்னத் தீவுகளைக் கொண்ட பெரிய நகர மாகும். இதை ஓர் ஐலண்ட் சிட்டி என்று அழைக்கிறார்கள். படகிலிருந்து கொண்டு மென் ஹட்டன், புருக்லீன், ஸ்டேட்டன் ஆகிய மூன்று தீவு களை தெளிவாகப் பார்க்க முடிகிறது. பிரான்ஸ் மற்றும் கியூன் தீவுகளைச் சரியாகப் பார்க்க இயலவில்லை.

நமது சென்னை மாதிரி இங்கு பல மொழி பேசுபவர்கள் உள்ளனர்.

நியூயார்க்கை ரசிக்க வேண்டுமானால், நடை முக்கியம். நடப்பதே அங்கு சுகம். கூட்டத்தைப் பார்த்து வாயைப் பிளந்து நிற்கிறேன். பிரமிக்கிறேன். தெருக்களில் பிரவகிக்கும் ஜன சக்தியைப் பார்க்கையில் என்னுள் சக்தி பிறக்கிறது. தொற்றிக் கொள்ளும் சக்தி அது.

ஆணும், பெண்ணும் 'சிக்' என்று இருக்கிறார்கள். நடக்கிறார்கள் அப்படி. நிற்காமல் நடந்த படியே இருக்கிறது ஜனத்திரள்.

ஆனால், அந்த ஜனத் திரளுக்கு அமெரிக்க வெள்ளை முகம் இல்லை. எல்லா நிறங்களும் உலகத்து எல்லா மொழிகளும் சங்கமித்த ஜன சமுத்திரத்துக்குப் பிரத்தியேக முகம் எப்படி இருக்க முடியும்? நியூயார்க்கிற்கு இணை நியூயார்க்தான்.

நியூயார்க்கிலும் லாஸ் ஏஞ்சிலீஸிலும் வெள்ளை அமெரிக்கர்கள் சிறுபான்மையினர். நியூயார்க்கில் நாற்பது சதவிதம் தானாம்.

கடந்த பத்தாண்டுகளில் இந்திய அமெரிக்கர்களின் மக்கள் தொகை இரட்டிப்பாகி விட்டதாம். கலிபோர்னியா, ஸிலிகன் வாலீயில் ஒரு குட்டி இந்தியா இருக்கிறது. ஸ்பானியர்கள், இத்தாலியர்கள், கிரேக்கர்கள், ஐரிஷ், ஜப்பானியர், யூதர்கள், முஸ்லீம்கள் என்று பல தேசத்து பல இனத்துக் கலவை இது.

கடந்த பதினைந்து இருபது ஆண்டுகளாக அமெரிக்கா அதிக ப்ரவுன் (நம் நிறம்) நிறமாக வருவதாகவும் வரும் ஆண்டுகளில் அது அதிகரிக்கக் கூடும் என்று ஆய்வு சொல்கிறது.


இங்கு வசிக்கும் நம்மவர்கள் இந்தியாவில் வாழ்வது போலவே இங்கும் வாழ்க்கை முறையை மாற்றாமல் வாழ்பவர்கள். இந்தி சினிமா, இந்தி சினிமா பாட்டு, இந்திய கடவுள்கள், இந்திய சாப்பாடு ஆகிய எதையும் புறக்கணிக்காதவர்கள்.

இங்கு யாருடைய வாழ்விலும் நகரம் குறுக்கிடாததாலேயே இங்கு யார் வேண்டுமானாலும் நிம்மதியாக வாழ முடியும் என்று எங்கள் ஊர்ப் பெண் ரம்யா கூறினாள். கார் டிரைவரும் இதைத்தான் கூறினார்.

நியூயார்க் நகருக்கு உட்படாத ஒரு தீவும் உண்டு. அதுதான் 'நியுஜெர்சி' நகர். நியூயார்க் நகரில் நெருக்கடி அதிகமானதால் மக்கள் இங்கு குடியேறினார்களாம்.

நம்மூர் மக்கள் பலரும் நியுஜெர்சியில் வசிக்கிறார்கள். இங்குள்ள மக்கள் காலையில் அலுவல் வேலையாக நியூயார்க்கிற்குச் சென்று பின்னர் மாலை வீடு திரும்புகின்றனர். நியுஜெர்சியை நியூயார்க்குடன் இணைக்க மேம்பாலம் உள்ளது.

உலகப்புகழ் பெற்ற வால் தெரு.... படகு முகாமிற்கு அருகிலுள்ளது. பங்கு வர்த்தகம் செய்பவர்களுக்குப் பரிச்சயமான இடம். உலகில் மிகப் பெரிய பங்குச் சந்தை இங்குதான் உள்ளது. நடந்து வந்த போது வெண்கலத்திலான ஒரு காளைமாட்டின் சிலை இருந்தது.



**வால்ஸ்டீரிட்**

'வால்ஸ்டீரிட்' என்கிற வர்த்தகத் தெருவில் புல்லிஸ், பியரிஸ் என்பது இரண்டுவிதமான போக்கு. இது பங்கு வர்த்தகம் செய்பவர்களுக்குத் தெரியும். புல்லிஸ் டிரண்ட் என்பதைக் குறிக்கக் காளையில் உருவம் வைத்துள்ளார்கள். காளையினை ஒரு போட்டோ எடுத்து விட்டு நகர்ந்தோம்.

நியூயார்க்கில் வேலைபார்ப்பதும், தனியாக ஒரு பெண் வாழ்வதும் பாதாள ரயிலில் பயணித்து இரவு நேரத்தில் வீடு திரும்புவதும் பிரச்சனையே கிடையாது என்று ரம்யா சொன்னதும் நம்பவே முடியவில்லை.

ஐந்து ஆண்டுகளில் அமெரிக்க சமூகப் பார்வையில் நிறைய மாற்றம் வந்திருப்பதை, தான் உணர்வதாக நான் நியூயார்க்கில் சந்தித்த என் நண்பரின் பெண் மாலினி தெரிவித்தாள்.

## சுதந்திரத் தேவி சிலை:

1886 ஆம் ஆண்டு பிரெஞ்சு அரசாங்கத்தால், அமெரிக்க, பிரெஞ்சு நட்புறவை வலியுறுத்தும் வகையில் பரிசளிக்கப்பட்டது இச்சிலை.

தாமிரத்தினாலான இச்சிலை 151 அடி உயரமுள்ளது. கம்பீரமாக இருக்கும் சுதந்திரதேவி சிலையை வடிவமைத்த சிற்பி பிரேடரிக் ஆகஸ்டி பார்தோல்டி என்பவரென்றாலும், இதன் பிரமாண்டமான உள்கட்டமைப்புளைச் செயதவர் குஸ்தவ் ஈபில் என்பவராவார்.

இச்சிலையின் அருகே போகக் கடலில் பயணம் செய்ய வேண்டும். இந்தச்சிலை பற்றிய விபரப்பலகை அங்குள்ளது. அமெரிக்க சுதந்திரச் சிலையின் மீது ஏறிப் பார்க்க வசதி உண்டு.

அந்தச் சிலைக்குள்ளேயே வளைத்து, வளைத்து இரும்புப் படிக்கட்டுகள் அமைக்கப்பட்டுள்ளன. அதில் ஏறுவது கடினம். சிலையின் இடுப்பு உயரம் ஏறுமுன்னர் கால்கள் தளர்ந்த மூச்சிரைக்கும்.

இரும்புச் சட்டங்களில் தலை இடிபடலாம். மிகக் கவனமாய் ஏறினோம். விடுதலைச் சிலையின் தீபச்சுடர் ஏந்திய வலக்கை அருகே இடநெருக்கடியிருக்கும்.

அங்கிருந்து வெளியே பார்த்தால் அச்சமாக இருக்கும். பெரிய கப்பல்கள் கூடச் சிறியதாகத் தெரியும். குளிர் மிகுந்த உப்புக் காற்று உடலை இறுக்கும்.

இறங்குவதற்கு வேறு பாதை உண்டு. அதிலும் வேகமாக இறங்க முடியாது.

இந்த குஸ்தவி ஈபில் என்பவர்தான் பாடகசிலுள்ள உலக அதிசயங்களில் ஒன்றான ஈபில் கோபுரத்தைக் கட்டியவராவார். இதன் உள் கட்டமைப்பும் ஈபில் கோபுரத்தைப் போன்றதாகும்.

2012 ஆம் ஆண்டு மட்டும் சுமார் 50 லட்சம் மக்கள் இதைக் காண இங்கே வருகை தந்துள்ளார்களாம். கப்பல்களைக் கூட இச்சிலையைப் பார்த்துதான் துறைமுகத்திற்குச் செலுத்துவார்களாம். புகைப்படம் எடுத்துக் கொண்டு அடுத்த இடத்திற்குப் புறப்பட்டோம்.

## எம்பயர் ஸ்டேட் பில்டிங்

எம்பயர் ஸ்டே பில்டிங் என்னும் இந்தக் கட்டிடம் உலகப் புகழ் பெற்றது.

1931 ஆம் ஆண்டு கட்டி முடிக்கப்பட்டது இக்கட்டிடம். சுமார் 40 ஆண்டுகள் உலகத்தின் மிக உயரமான கட்டிடமாகத் திகழ்ந்தது. இதற்குப் பக்கத்தது தெருவில்தான் 1970 ஆம் ஆண்டு கட்டப்பட்ட உலக வர்த்தக மையமான இரட்டைக் கோபுரம் கட்டப்பட்டதும் நியூயார்க்கின் இரண்டாவது கட்டிடமாக மாறியது.


2001 ஆம் ஆண்டு செப்டம்பர் 11 ஆம் நாள் உலக வர்த்தக மையத் தாக்குதலுக்குப் பிறகு நியூயார்க்கின் மிக உயரமான கட்டிடம் இப்போது இதுவேயாகும்.

நியூயார்க் நகரின் ஐந்தாவது அவின்யூ மற்றும் 34 ஆவது தெரு சந்திக்குமிடத்தில் அமைந்திருக்கும் இது 120 மாடிகள் கொண்ட கட்டிடம். ஆனால், 103 ஆவது மாடியில்தான் பார்வையாளர்கள் அனுமதிக்கப்படுகிறார்கள். இங்கிருந்து நியூயார்க் நகரை நான்கு பக்கமும் சுற்றிப் பார்க்க முடிந்தது.

இதனை வடிவமைத்தவர்கள் கிர்கரி ஜான்சன். 1250 அடி உயரமுள்ள இக்கட்டிடத்தை 410 நாட்களில் கட்டி சாதனைப் படைத்துள்ளனர்.

சாதனைப் படைத்த நிறுவனத்தினுடைய தலைவர் நியூயார்க்கின் முன்னாள் கவர்னர் ஆல்பர்ட்-இ-ஸ்மித் என்பவராவார். இதன் தரைத்தளம் மட்டும் 27 லட்சம் சதுர அடிகளைக் கொண்டது.

அந்திப்பொழுதானபோது மின் ஒளியில் நகரே திருவிழாக் கோலம் கொண்டது போன்ற தோற்றத்தைத் தந்தது. பிரதானச் சாலைகளும் குறுக்குத் தெருக்களும் மிகவும் தெளிவாகத் தெரிந்தன.



எம்பயர் ஸ்டேட் பில்டிங்



35

# அமெரிக்கர்களை அச்சுறுத்தும் விஷயம்

* ***"ஒரு நாடு வளம்பெற நாகரிகத்தில் சிறப்படைய ஆட்சி நிர்வாகத் திறன், விஞ்ஞான வளர்ச்சி, ஆன்மிக வளர்ச்சி மக்களிடம் சமுதாய நல உணர்வு இவை நாலும் தேவை. இங்கு ஆன்மீக வளர்ச்சி மாத்திரம் தான் சிறிது குறைவு. அது, காலத்தால் உயர்ந்துவிட வாய்ப்பு இருக்கின்றது."***

**–வேதாத்திரி மகரிஷி – எனது வாழ்க்கை விளக்கம் பக்.175**

ஆறு மாதங்களில் அமெரிக்கர்களின் ஆழ்மனதில் புதைந்துள்ள ஒரு கருத்தை என் மனதில் பதிவு செய்து கோண்டேன்.

அமெரிக்க பொருளாதாரம் மிக மிக மோசமாக இருக்கிறது என்பதைச் செய்தித்தாள்களில் மட்டும் படிக்கவில்லை. நான் சந்தித்தவர்கள் எல்லாம் இதனை என்னிடம் ரகசியமாகச் சொன்னார்கள்.

ஏற்றம் இறக்கம் எல்லாம் இயற்கைதானே? இதனைப் போய் இவ்வளவு இரகசியமாகச் சொல்கிறார்களே என்று வியந்தேன். நாட்கள் ஆக ஆகத்தான் அவர்களை நான் ஓரளவுக்குப் புரிந்து கொண்டேன். இங்கு கெட்ட சேதியை யாரும் உரத்தக் குரலில் சொல்வதில்லை.

உலகப் பணக்காரர்களாக வலம் வந்தவர்கள், உலகத்தின் சொர்க்கத் தேசமாக மாபெரும் வல்லரசாக இறுமாப்புடன் வாழ்ந்தவர்கள்.

இடியாய் வந்த இரட்டைக் கோபுரத் தாக்குதலுக்குப் பிறகு, அமெரிக்கர்களை ஓரளவு அச்சம் தொற்றிக் கொண்டதை உணர்ந்தேன். மேலும், பொருளாதாரத் தேக்கம்.

பத்தாதற்குப் பொருளாதாரத்தை மேலும் மோசமாக்கும் ஈராக் போர், ஆப்கானிஸ்தான் போர்- சந்தைச் சரிவால் பணி நீக்கங்கள் என்று அவர்களிடம் ஏமாற்றங்களும் எரிச்சலும் இருப்பதைக் காண முடிகிறது.

இதனால், இந்தியாவின் மீது பலரின் பார்வையையும் படிந்து பொறாமையால் எரிச்சலுடன் பார்க்கிறார்கள். கடந்த மூன்று ஆண்டுகளில் அவுட்சோர்சிங் முறையில் அமெரிக்க வேலைகள் இந்தியர்களுக்கு இந்தியாவிலேயே கிடைத்துவிடுகிறது. இது, அமெரிக்கர்களுக்கு கிடைக்க வேண்டிய பணிகள்.

இதனால், அங்கு வேலையில்லாத் திண்டாட்டம். இரண்டு மில்லியன் வேலை வாய்ப்புகள் வெளியே செல்ல அவர்கள் எப்படி அனுமதிக்கலாம் என்ற கேள்வியும், வாதமும், விவாதமும் நாள்தோறும் நடைபெற்று வருகின்றன.

ஆறு மில்லியன் அமெரிக்கர்கள் வேலை இல்லாமல் இருப்பதாகக் கூறுகிறார்கள். இதனால் நம்மீது அவர்களுக்கு, வயிற்றெரிச்சல் ஏற்படுவது இயற்கை தானே?

ஆனால், இதற்கெல்லாம் நாம் காரணமல்லவே! அமெரிக்க கார்ப்பொரேட் கம்பெனிகள் வியாபாரத் தந்திரம் தானே இது.

இந்த இண்டர்நெட் யுகத்தில் எங்கிருந்து வேண்டுமானாலும் வேலைக்கு ஆட்களை எடுக்கலாமே? அதுவும், அமெரிக்கர்களுக்கு கொடுக்கக் கூடிய குறைவான சம்பளத்திற்கு அதுவும் புத்திசாலி இந்தியர்களை வேலைகளுக்கு அமர்த்துவது கம்பெனிகளுக்கு இலாபமாக இருக்கிறது. இதனால்தான், இந்த மாற்றம் ஏற்பட்டிருக்கிறது என்பது அமெரிக்கர்களுக்கும் தெரியும்.

அதனால் தான், அவுட்சோர்சிங் செய்ய கார்ப்பொரெட் கம்பெனிகளுக்குத் தடை விதிக்கக் கோருகிறார்கள். ஆனால் இந்தக் கார்ப்பொரேட் கம்பெனிகளே, அரசியலை நிர்ணயிக்கும் காலக் கட்டத்தில் இது எப்படி சாத்தியமாகுமா?



# 36

# பெருமை சேர்க்கும் இந்தியர்கள்

நியுயார்க் வசந்த காலக் கலை நிகழ்ச்சிகளில் கவனிக்க வேண்டிய எட்டுப் பேர்கள் பட்டியலில் நம்ம ஊர் ஏ. ஆர். ரஹ்மானின் படம் போடப்பட்டிருந்தது. நியூயார்க் டைம்சில் இந்தியருக்குப் பெருமை சேர்க்கும் விதமான இதனைச் செய்தியாக வெளியிட்டிருந்தார்கள்.

அன்று சிகாகோவில் உலக சர்வ சமயச் சபையில் முழக்கமிட்ட விவேகானந்தரை உலகமே திரும்பி பார்த்தது. அது, இன்றும் தொடர்கிறது.

இந்தியாவின் 'விப்ரோ'விலிருந்தும், 'இன்போசிஸிலிருந்தும் தமிழர்களும், கன்னடக்காரர்களும், தெலுங்கர்களும், அமெரிக்காவின் ஸிலிகன் வாலியை நிரப்பி விட்டார்கள்.

கட்டுப்பெட்டி தமிழர்களின் வாரிசுகள் கலிபோர்னியாவிலும் ஸான்பிரான்ஸிஸ்கோவிலிலும் மினியோபொலிசிலும் என்று அனைத்து நகரங்களிலும் வெள்ளைக்காரர்கள் செய்த வேலைகளில் சக்கை போடு போடுகிறார்கள்.

வாழ்வின் முன்னேற்றத்தைக் கருதியும் சிலர் அமெரிக்கா தரக் கூடிய வசதிகளைக் கண்ட பிரமிப்பினாலும் இங்கு தங்கி விட்டார்கள்.

நம்மூர் குப்பனும், சுப்பனும், இராமனும், லெட்சுமணனும், வேணியும், நாகலெட்சுமியும் தங்கள் வாரிசுகளைப் பார்க்க ஸிலிகன் பள்ளத்தாக்கிற்கு பயணம் செய்வது அதிகரித்து வருகிறது.

அமெரிக்க நிறுவனங்கள் ஆசியாவிலிருந்து வேலைக்கு ஆட்களை வரவழைப்பது என்பது உள்ளூரில் அறிவில்லை என்பதால் அல்ல. அமெரிக்கர்களை வேலைக்கு அமர்த்தினால் 3 மடங்கு அதிகச் சம்பளம் தரவேண்டும்.

இந்தியக் கம்பெனிகளுக்கு கொடுக்கும் ஒப்பந்தத் தொகையை விட அங்குள்ள கம்பெனிகளுக்கு அதிகம் கொடுக்க வேண்டியிருக்கும்.

மேலும், அமெரிக்கர்களின் அறிவுக்கும் திறமைக்கும் சற்றும் குறையாதவர்கள் ஆசியாவிலிருந்து குறைவான பணத்துக்குக் கிடைக்கும் போது, அதிகப் பணம் செலவழித்து அமெரிக்கர்களை வைத்தால் அவர்களுக்கு அங்குள்ள விதிப்படியும் பல சலுகைகள் அளிக்க வேண்டி வரும். அதனால், படித்த திறமை வாய்ந்த அமெரிக்கர்களிடையே பெரிய அதிருப்தி நிலவுகிறது.

மேலும், வெளிநாட்டுக் கம்பெனிகளுக்கு அளிக்கும் சலுகைகள் குறைக்கப்படவேண்டும் என்று ஜனநாயகக் கட்சியைச் சேர்ந்த ஜான் கெர்ரி தேர்தல் பிரச்சனையையே கிளப்பிவிட்டார்.

ஒபாமா பதவிக்கு வந்ததும் கூட விசாவில் சில கெடுபிடிகளைக் கொணர்ந்தார். இது, எல்லாவற்றையும் மிஞ்சி நமது நாட்டு அறிவு அங்கு வேலைபார்த்துக் கொண்டிருக்கிறது.

அமெரிக்காவிற்கு வந்து சேர்ந்த இந்தியர்கள் எல்லாம் சராசரிக்கு மேற்பட்ட அறிவு உள்ளவர்கள். படிப்பில் நாட்டமுள்ளவர்கள். சாதிப்பவர்கள். அமெரிக்க இந்தியர்களில் சாதனை புரிந்தவர், கொழுத்த பணக்காரர் ஆகியோரின் பட்டியல் அதிகரித்துக் கொண்டே வருகிறது. இந்தியர்கள் புத்திசாலிகள் என்று பரவலாகக் கருதப்படுகிறது.

இருப்பினும், சில இந்திய கம்பெனிகள் இந்தியர்களையே சுரண்டுவதை அறிந்த போது மனம் மிகவும் வேதனையடைந்தது. அமெரிக்க கம்பெனிகள், இந்திய கம்பெனிகளிடமிருந்து மென்பொருள் நிபுணர்களைக் குறுகிய கால ஒப்பந்தத்தில் வரவழைக் கொன்றன. அதற்கான மொத்தக் கட்டணத்தை இந்திய நிறுவனங்கள் பெறுகின்றன. ஆனால் கிடைப்பதில் இங்குள்ள பணியாளர்களுக்கு 25 சதவிதமே கொடுப்பதாகச் சொல்லப்படுகிறது. இது, எனக்கு தாங்க முடியாத அவமானத்தைத் ஏற்படுத்தியது.

37



# சொர்க்க பூமியின் இரகசியம்

* **"அமெரிக்கா ஒரு மகத்தான நாடு. ஏழைகளுக்கும் பெண்களுக்கும் இது சொர்க்க பூமி. இந்த அமெரிக்க நாட்டில் பெரும்பாலும் ஏழை என்று எவரும் இல்லை. பிறகு, உலகின் மற்ற எந்தப் பகுதியிலும் இங்கு இருப்பது போல் பெண்கள் அவ்வளவு சுதந்திரமும், கல்வியும், பண்பும் பெற்றவர்களாக இல்லை. இந்த நாட்டின் சமுதாயத்தில் பெண்களே அனைத்துமாக இருக்கிறார்கள்."**

**–சுவாமி விவேகானந்தர் – ஞானதீபம் பாகம் 13 – பக் 245**

உலகில் அமெரிக்கா செல்வச் செழிப்பிலும் தொழில் வளர்ச்சியிலும் முதன்மை இடத்தில் இருக்கிறது. அமெரிக்காவை யாரும் மிஞ்சிவிட முடியாது. அமெரிக்கா அமெரிக்காதான். இதற்குக் காரணம் என்ன?

அமெரிக்க மக்களின் கடுமையான உழைப்பு, உழைப்பு, உழைப்பு என்றால் மிகையாகாது. வெற்றி என்பதற்கு வேறு ஒரு பெயரும் உண்டு. அதுதான் உழைப்பு. உழைப்பு மட்டும்தான் அமெரிக்கர்களை மற்றவர்களிடமிருந்து பளீரென வேறுபடுத்திக் காட்டியது.

உழைப்பு என்பது ஓடுகிற ஆறு போன்றது. உழைப்பவன் முன்னேறுகிறான். உழைக்காதவன் தேங்கிய சாக்கடை போலாகிறான். உளி படாத கல் சிலையாவதில்லை.

'கஷ்டப்பட்டு உழையுங்கள்! எந்த உழைப்பும் வீணாவதே இல்லை. ஆனால், அதன் மூலம் மதிப்பு மிக்க பணியை நிறைவேற்றிய மனிதர்களில் நானும் ஒருவன் என்ற பெருமை உங்கள் நினைவில் இயல்பாக உண்டாகும்' என்பார் **பெஞ்சமின் பிராங்க்ளின்.**

அமெரிக்க மக்களின் முன்னோர்கள் அமெரிக்காவில் குடியேறியவர்கள். அவர்கள் பலநாடுகளில் இருந்து குடியேறியவர்கள். அவர்களில் யாருக்கும் அமெரிக்கா சொந்த நாடு அல்ல. ஆனாலும், அமெரிக்காவைத் தாயகமாகக் கொண்டவர்கள்.

அங்கு வாழ்ந்த பழங்குடியினருடன் போரிட்டுக் கொண்டே காடு திருத்தி நாடு ஆக்கினார்கள். இயற்கை வளங்களைச் செல்வ வளங்களாக மாற்றினார்கள். தங்களது வியர்வையையும் உழைப்பையும் சேர்த்து 'அமெரிக்கா' என்று புதிய நாட்டினைத் தோற்றுவித்தார்கள்.

'அமெரிக்கர்' என்ற புதிய இனத்தைத் தோற்றுவித்தார்கள். பொதுவாக, மொழிதான் ஒரு நாட்டின் அடித்தளமாக இருக்கும். ஆனால், இங்கு பல மொழிக்காரர்களான அமெரிக்கர்கள் 'அமெரிக்கா' என்ற நாட்டின் மீது ஒன்றுபட்டார்கள். உயர்வடைந்தார்கள். உலகின் நம்பர் ஒன் நாடாக விளங்குகிறார்கள்.

வேலைக்கு ஆள் இல்லை என்று இங்கு யாரும் முணுமுணுக்க முடியாது. **பணக்கார அமெரிக்காவில் வீட்டு வேலைக்கு ஆள் கிடைக்காது. அங்கு தன் கையே தனக்கு உதவியாகும்.**

பல ஆயிரம் கோடி மதிப்புள்ள வால்ட் டிஸ்னி சாம்ராஜ்யத்தின் அதிபரின் மனைவி ஒரு பேட்டியில் சொன்னதைப் படித்தேன்.

அவர்கள் வீட்டில் சமையலுக்கு ஆள் இல்லை. கார் ஓட்ட ஓட்டுநர் இல்லை. தன் கையே தனக்கு உதவி என்ற கலாச்சாரத்தில் பந்தாவும் இல்லை! அதைவிட ஆச்சரியம். டிஸ்னி சென்றால் மற்றவர்கள் போல அவர்களும் கியூவில் நின்று டிக்கெட் வாங்கிக் கொண்டு போகிறார்கள்.

அமெரிக்க மக்களின் வாழ்க்கைத் தத்துவம் 'கடுமையாக உழைப்பது, உழைப்பில் வரும் ஊதியத்தில் மகிழ்ச்சியின் எல்லைக்கே செல்வது' எந்த நேரமும் உழைத்துக் கொண்டே இருக்கின்றனர்.

ஓய்வு என்பதே அவர்களுக்குத் தெரியாது. ஒரு மனிதன் காலையில் ஒருவித வேலை, பிறகு, நிரந்தரப் பணி, மாலையில் மற்றொருவித வேலை என மூன்றுவிதப் பணிகளை அவர்கள் செய்கிறார்கள்.

தங்கள் மூதாதையர்களின் உழைப்பு அறிவுக்கூர்மை அறிவுத்திறன், ஆற்றல், நாட்டுப்பற்று, இன்றும் பாரம்பரியமாக அமெரிக்கர்களிடம் அமைந்திருக்கின்றன.

இந்த இரகசியத்தினால்தான் அமெரிக்கர்களும், அமெரிக்காவும் உலகில் முதலிடத்தில் இருக்கிறார்கள்.



# 38

# குட்பை அமெரிக்கா

* **"இங்கு எனது பணிக்கு ஒரு மகத்தான வாய்ப்பு இருக்கிறது. நானோ இறைவனின் அடியவன். உணர்ந்த கருத்துக்கள் அனைத்தையம் பிரசாரம் செய்ய இதைவிடச் சிறப்பான இடம் உலகில் வேறு எங்கு இருக்கிறது? இந்த நாட்டில் ஒருவன் எனக்கு விரோதமாக நின்றால், நூறு கரங்கள் உதவத் தயாராக இருக்கின்றன! இந்நாடு மனிதன் மனிதனிடம் அனுதாபம் காட்டுகிற நாடு."**

**சுவாமி விவேகானந்தர் – ஞானதீபம் பாகம் 13 – பக் 241**

நான் தங்கியிருந்த ஆறுமாதங்களும், அமெரிக்க கலாச்சாரங் களையும் இந்திய குடியேறிய கலாச்சாரங்களையும், அங்கு வாழும் அமெரிக்க கலாச்சாரங்களையும் பார்த்து, பழகி, உறவாடி, பதிவு செய்து கொண்டேன்.

விஞ்ஞான வளர்ச்சியால் உலகில் செய்தித் தொடர்பு போன்ற சாதனங்கள் புரட்சிகரமாக வளர்ந்து விட்டன. உலகம் நம் கையில் இருக்கிறது. 50 ஆண்டுகளுக்கு முன் நாங்கள் அமெரிக்கா போவதை நினைத்துக்கூடப் பார்த்ததில்லை.

காலம் தான் எவ்வளவு வேகமாக ஓடுகிறது. காலம் யாருக்காகவும் காத்திருப்பதில்லை. ஆறுமாத அமெரிக்க வாசம் முடியப் போகிறது.

நவம்பர் மாலை மின்னியோபோலிஸ் விமானநிலையத்தில் மகள், மாப்பிள்ளை, பேத்தி, நண்பர்கள் வழியனுப்பி வைத்தனர். பிரிட்டிஷ் ஏர்வேசில், சிகாகோ லண்டன் வழியாக மீனம்பாக்கம் பயணம். மனமும் ஆறு மாத அனுபவங்களை அசைப்போட்டுக் கொண்டே பறந்தது.

சென்னை, பெங்களூர், ஹைதராபாத் போன்ற இந்திய நகரங் களிலிருந்து, இளைஞர்கள் சாப்ட்வேர் வேலைகளை ஏற்று அமெரிக்கா வருகின்றனர்.

நர்சுகளாகவும் பலர் இங்கு வருகின்றனர். வேலைக்கு அழைக்கும் நிறுவனங்கள் அவர்களை வரவேற்கிறது. வந்து இறங்கிய பிறகு வாடகைக் கார் மற்றும் தங்குவதற்கு இடம் ஏற்பாடு செய்து உதவு கின்றன. ஏற்கனவே, வந்துள்ள நண்பர்களும் உறவினர்களும் தேவை யான உதவிகளைச் செய்கின்றனர்.

நாம் பெற்ற ஆங்கில அறிவே நமக்குக் கை கொடுக்கிறது. நாளடைவில் அமெரிக்கர்களின் ஆங்கிலத்தைப் புரிந்து கொண்டு பேச ஆரம்பிக்கின்றனர்.

வந்தவுடன் கார் ஓட்டக் கற்றுக் கொள்கின்றனர். வாடகைக் கார் தொடர்ச்சியாக ஒரு புதிய அல்லது பழைய காரைத் தவணை முறையில் வாங்கி விடுகின்றனர்.

வாடகை வீடுகளில் குடியிருக்கின்றனர். இதற்கிடையில் திருமணம். வாழ்க்கைத் துணையையும் அழைத்துக் கொள்கின்றனர்.

வீட்டுக்குத் தேவையான தொலைப்பேசி, சோபா செட்கள் வாங்கி அதற்குரிய வாடகைகளை அலுவலகத்தில் செலுத்தி விடுகின்றனர்.

இருவரும் சம்பாதிக்கும் போது வாடகை வீட்டுக்கு அருகில் வீடு வாங்க முயற்சிகள் நடந்து கொண்டிருந்து அதுவும் வாங்கிவிடுவார்கள்.

மாத வாடகைக் கொடுப்பதற்குப் பதில் சொந்த வீட்டையே மாதக்கட்டண முறையில் வாங்கிவிடுகின்றனர். வீட்டிற்குத் தேவையான அனைத்தும் பூரணமாக இருக்கும். பக்கத்தில் புல் தரைகளும் பூச் செடிகளும் காய்கறித் தோட்டங்களும் உண்டாக்கி மகிழ்ச்சியடைவர்.

ஐந்து வருட காலம் சுலபமாக ஓடிவிடும். இதற்கிடையில் அமெரிக்க பிரஜையாகக் குழந்தைகள் பிறந்திருக்கும். கிரீன் கார்டும் கிடைத்துவிடும்.

பின்னர் எங்களைப் போல் பெற்றோர்களை அழைத்து ஆறு மாதங்கள் வைத்திருந்து அனுப்புவார்கள்.

நடுஅறுபதுகளில், அமெரிக்காவில் குடிபுகுந்தவர்கள், படித்தவர்கள். இந்திய நடுத்தரவர்க்க மேல் நடுவர்க்கத்ததைச் சார்ந்த மாணவர்கள் ஐஐடி போன்ற கல்லூரிகளில் படித்தவர்கள். மேல் படிப்புக்காக வந்தவர்கள்.

இங்கேயே வேலை கிடைத்து செட்டில் ஆனவர்கள் புதிய திறமையை அங்கீகரிக்கும் சூழ்நிலையில் அவர்களால் ஜொலிக்க முடிந்தது. எழுபதுகளில் தொழில் துறைகளில் உயர்ந்தார்கள்.

இப்போது, ஆயிரக்கணக்கான இந்தியர்கள் சிலிக்கன் பள்ளத் தாக்கில் சிறியதும் பெரியதுமாக சொந்தக் கம்பெனி வைத்திருக் கிறார்கள். அமெரிக்க பொருளாதாரத்தில் வேலை வாய்ப்புகளையும், சுபிட்சத்தையும் உண்டாக்குவதில் இவர்கள் தாக்கம் கணிசமானது

சான்பிரான்சிஸ்கோவில் இருக்கும் 'சிலிக்கன் வேலி'யில் ஏராளமான தமிழர்களைப் பார்த்தபோது பெற்ற மகிழ்ச்சி, சந்தோஷம் மனதுக்குள் பொங்கிக் கொண்டே இருக்கிறது.

'சோனி' 'கேடென்ஸ்;' 'சீவெல்ஸ்' 'ஒரக்கிள்' போன்ற உலகப் புகழ் பெற்ற தகவல் தொழில்நுட்பப் பூங்காக்கள் பெரியனவாக அமைந்துள்ளன. ஒவ்வொன்றும் சமார் 40 மாடிக் கட்டிடங்கள்.

இந்தத் தொழில் நுட்பங்களை நம்மவர்கள் இயக்கிக் கொண்டிருக்கிறார்கள் என்ற சந்தோஷத்தையும் பெருமையையும் மறக்க முடியுமா? சொர்க்கபூமியில் நம்மவர் உழைப்பும் கலந்துள்ளது.

* அமெரிக்காவில் 25 லட்சம் இந்தியர் வசிக்கின்றனர். அங்கு ஒவ்வொரு துறையிலும் இந்தியர்களின் பங்கு கணிசமானது.
* அமெரிக்காவில் உள்ள டாக்டர்களில் 38 சதவீதம் பேர் இந்தியர்.
* அங்குள்ள விஞ்ஞானிகளில் 12 சதவீதத்தினர் இந்தியர்.
* அமெரிக்க பாதுகாப்பு மற்றும் அணுசக்தித்துறை (நாசா) ஊழியர்களில் 36 சதவீதம் இந்தியர்.
* கம்ப்யூட்டர் சாப்ட்வேர் துறையின் ஜாம்பாவான் நிறுவனமான 'மைக்ரோசாப்ட்' நிறுவன ஊழியர்களில் 34 சதவீதத்தினர் இந்தியர்.
* ஐ.பி.எம். கம்ப்யூட்டர்நிறுவனஊழியர்களில்38சதவீதத்தினர்இந்தியர்.
* ஜெராக்ஸ் நிறுவன ஊழியர்களில் 13 சதவீதத்தினர் இந்தியர்.
* அமெரிக்காவில் வசிக்கும் இந்தியர்களில் 23 சதவீதத்தினர் 'கிரீன்கார்டு' குடியுரிமை பெற்றவர்கள்.

**ஆக, இந்தியர்களின் ஒத்துழைப்பு மட்டும் பரிபூரணமாகக் கிடைக்காவிட்டால் அமெரிக்காவின் 'சூப்பர்பவர்' அந்தஸ்து ஆட்டம் கண்டுவிடும்.**

அங்கு பிறந்து வளர்ந்து செட்டில் ஆகியிருக்கும் நண்பரின் மகன் கிருஷ்ணன் ''அங்கிள்! நான் இந்தியாவை என் தாயைப் போல நேசிக்கிறேன்.அமெரிக்காவை என் மனைவியைப் போல நேசிக்கிறேன்' என்றார்.

அமெரிக்காவில் குடியேறியுள்ள ஆசிய மக்களில் முதலிடத்தை வகிப்பவர்கள் (1) ஜப்பானியர்கள் (2) சீனர்கள் (3) பிலிப்பெய்னர்கள் (4) மற்ற ஆசிய நாடுகளைச் சேர்ந்தவர்கள்.

இதில் கடைசி இடத்தை வகிப்பவர்கள் இந்தியர்கள். ஆனால், நல்ல பணியில் இருப்பவர்கள், அமெரிக்க பொருளாதாரத்தைத் தூக்கி உயர்த்துபவர்கள், இந்தியர்களே என்பதை நினைக்கும் போது நமக்கு மகிழ்ச்சி பெருகுகிறது.

'ஜனனீ ஜன்ம பூமிஸ்ச ஸ்வர்க்கதபி காகயஸி' என்று வடமொழியில் ஒரு பழமொழி உண்டு.

அதாவது பெற்ற தாயும் பிறந்த பொன்னாடும் நற்றவ வானினும் நனி சிறந்தனவே என்பது அதன் பொருள்.

அமெரிக்காவில் இருந்த ஆறு மாதங்கள் இனிமையானவை என்றாலும், தாய் நாட்டிற்கு இணையாக எதுவும் ஈடு ஆக முடியாது என்ற உணர்வோடும், சைபர் என்கிற எண்ணைக் கண்டுபிடித்து உலகத்துக்குக் கொடுத்த இந்தியர் என்ற பெருமையோடும் பசிபிக் கடலைத் தாண்டிப் பாரதத்திற்குப் பறந்து கொண்டிருக்கிறோம்.



''அமெரிக்காவைப் போன்ற வேறொரு நாட்டை உலகில் எங்குமே காண முடியாது. அவ்வளவு தாராள மனப்பான்மை - பரந்த மனம் - விருந்தோம்பும் பண்பு - புதிய கருத்துக்களை ஏற்றுக்கொள்வதற்கு உண்மையான ஆர்வம் இவை அனைத்தும் கொண்டவர்களாக அந்த நாட்டு மக்கள் இருக்கிறார்கள். அமெரிக்காவில் நான் எந்த வேலையைச் செய்திருந்தாலும் எனது சக்தியால் அவை செய்யப்படவில்லை. அமெரிக்க மக்கள் வேதாந்தக் கருத்தை ஏற்றுக் கொண்டார்கள் என்றால் அது அவர்களிடமுள்ள நல் மனத்தாலேயே ஆகும்''.

- சுவாமி விவேகானந்தர்

*(ஞானதீபம் பாகம் 10 - பக்.4)*

ISBN 818446517-3

**RS. 90\-**